பதில்: ஆம் இது எனது முயற்சிகளின் சிகரம் என்று சொல்லலாம். எனது முயற்சியால் ஒரு கட்டிடம் அமைந்ததையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். NECORD நிறுவன அதிகாரிகளோடு இதுபற்றி கதைத்த போது, ஒரு கட்டிட வாய்ப்பு உள்ளதாகவும் அடுத்த நாளே அதற்குரிய திட்டம் (Project) தரச்சொல்லிச் சொன்னார்கள். அருட்தந்தை கொட்பிறி அருட்தந்தை குஞ்சே, அருட்சகோதரர் லீனஸ் அவர்களுடன் பழைய மாணவர் சங்க செயலாளராக இருந்த காலம்சென்ற அனஸ் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராக இருந்த பேர்க்கி அவர்களுடன் சேர்ந்து ஓர் இரவிலேயே இத்திட்டத்தை தயாரித்தேன். பின்னர் திணைக்கள அனுமதி தாமதமானது. அந்நேரம் எனக்கு உதவியவர் அப்போது பிரதேச செயலாளராக கடமையாற்றிய திருமதி.ஜலதீபன் அவர்கள் அவர் அரசாங்க அதிபரோடு உரையாடி அனுமதியை கூடிய விரைவில் பெற்றுத்தந்தார். அதன் நிமித்தம் இக்கட்டிடத்தை அமைக்க எனக்கு பல நன்மைகள் ஏதுக்கள் அமைந்தன. அக்கட்டிடத்திற்கு முன்னைநாள் அதிபர் அருட்தந்தை வின்சென்ட் ஞானப்பிரகாசம் ஞாபகார்த்த மண்டபம் எனும் நாமம் சூட்டியுள்ளேன்.

கேள்வி: நல்லது அருட்தந்தையே! உங்களுடைய வாழ்க்கையில் ஒரு பகுதியை திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரிக்காக அர்ப்பணித்திருக்கிறீர்கள். அது மறுக்கவோ மறக்கவோ முடியாது. இருந்த போதிலும் இக்கல்லூரியால் நீங்கள் பெற்ற நன்மை என்ன?

பதில்: (சிரிக்கிறார்.... பின்னர் சிந்தித்து விட்டு) புனித சூசையப்பர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடா கிளை என்னை அதிபர் என்ற வகையில் கனடாவுக்கு இரண்டு முறை விருந்தினராக அழைத்திருந்தனர். 2007 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத் தலைவராக சார்ள்ஸ் தேவசகாயம் இருந்தார், அப்போதும் பின்னர் 2010ஆம் ஆண்டு அன்ரன் போல் என்பவர் தலைவராக இருந்தபோதும் அவர்களுடைய வற்புறுத்தலினாலும் அவர்கள் அன்பாகக் கேட்டுக்கொண்டதனாலும் சென்றேன். அவர்களுக்கு என் நன்றிகள். ஆப்போது காண்டீபன் Sir நீங்கள் என்னை வாழ்த்தி மேடையில் உரையாற்றும் போது, 2007 இல் 140 வருட கல்லூரி வரலாற்றில் முதன்முறையாக பழைய மாணவர் சங்கம் வெளிநாட்டுக்கு விருந்தினராக அழைத்த முதல் அதிபர் என்று சொன்னது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. இந்நிகழ்வை நடாத்த காரணமாக இருந்தவர் திருமதி.திருச்செல்வி சுதாகரன் அவர்கள். அவர் அப்போது பிரதி அதிபராக கடமை ஆற்றினார். இதற்கு முன் திரு.சுதாகரன் அவர்களும் எனக்கு உப அதிபராக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பு தந்தார்கள் பல ஆசிரியர்கள் நான் அதிபராக இருந்த காலத்தில் ஒத்துழைப்புத் தந்தார்கள். எல்லோரையும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது.

கேள்வி: ஆம், இச்சம்பவம் கல்லூரி வரலாற்றில் மிகப்பெரியதொரு பதிவு உங்கள் நடவடிக்கைகளுக்கு பல ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தந்தார்கள் கைம்மாறாக நீங்கள் எவ்வாறு அவர்களுக்கு உதவி செய்தீர்கள் ?

பதில்: நல்லதொரு கேள்வி நான் கல்லூரியின் பகுதித்தலைவராக இரு வருடங்கள் இருந்தபோதே ஆசிரியர்களோடு பழகியதின் பிரகாரம் அவர்களைப்பற்றி அறிந்து கொண்டேன் அவ்வகையில் ஆசிரியர்களின் திறமைகளை இனம் கண்டு அவர்களுக்கு சில பொறுப்புக்களைக் கொடுத்தேன். உதாரணமாக பகுதித்தலைவர் பதவி அதுபோல் அவர்களுடைய மேற்படிப்பு முன்னேற்றங்களுக்கு கல்லூரி ரீதியாக உதவ முன்வந்தேன் சில ஆசிரியர்களை தமிழிலும் சில பேரை ஆங்கிலத்திலும் அறிவிப்பு செய்வதற்கு ஊக்குவித்தேன். சில நிகழ்வுகள் இவ்வாறுதான் நடைபெற வேண்டும் என கடும் போக்குடன் நடந்து கொண்டேன். அவைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்களின் உதவியுடன் பற்பல நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து நடாத்தினோம்.

கேள்வி: நீங்கள் அதிபராக இருந்த காலகட்டம், நாட்டுச் சூழல், மாணவர் நிலைமை, பாடசாலை பௌதிக வளம் என்பவற்றால் பாடசாலையை கொண்டு நடாத்துவதில் பல சவால்களை எதிர்நோக்கி அச்சவால்களில் வெற்றியும் பெற்றிருக்கிறீர்கள். அவ்வகையில் பல அனுபவங்களைப் பெற்ற நீங்கள் உங்கள் அனுபவத்தின் பிரகாரம் தங்கள் ஆலோசனைகள் பற்றி ...

பாடசாலையைக் கட்டி எழுப்பப் பாடுபட வேண்டும். தீமைக்கு ஒன்று சேராது பற்பல நன்மைகளுக்கு ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் ஒன்று சேர வேண்டும். ஆசிரியர்கள் அதிபருக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். அதிபரும் ஆசிரியர்களை மதிக்க வேண்டும், அவர்களுடைய கல்வி நடவடிக்கைகள் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். பழைய மாணவர் சங்கம் பாடசாலை நிர்வாக விடயங்களில் தலையிடாது பாடசாலையை முன்னேற்றுவதில் கவனம் எடுத்து அதிபருடன் ஒத்துழைப்பு உதவிகள் செய்யலாம். எல்லோரும் விசுவாசமாக வேலை செய்ய வேண்டும். எல்லோரும் நேரத்தில் கவனம் எடுக்க வேண்டும். In time அல்லது On time எனும்படி வேலை செய்ய வேண்டும். எல்லோரும் சுமூகமாக வேலை செய்ய வேண்டும்.

இவ்வாறு தனது கருத்துக்களையும் அனுபவங்களையும் இக்கலந்துரையாடலில் பகிர்ந்து கொண்ட முன்னாள் அதிபர் வணக்கத்துக்குரிய ஜீவனதாஸ் அடிகளார் கல்லூரி சமூகத்திற்கு வாழ்த்துக்களை கூறிக்கொண்டு புனித சூசையப்பர் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழா சிறப்புற நிறைவேறுவதற்கு தனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கி விடைதந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் குடும்பத்தின் நன்றி

நீறு ஆர்த்தும் ஒட்டா நிகரில் மணிபோலே
நிஷ்களங்க தெளிவு கொண்ட பத்திரம் போலே
தாயாய் தந்தையாய் நல்லாசான் செங்கோலனாய்
மாசறு பொன் நிகர்த்த மறுவில்லா நிலவைப்போல
களங்கமற்ற நெஞ்சினோடு கனிவுடன் பழகிடுவீர்.
பல்கலையும் அவனியிலே பாங்குடனே பெற்றேகி
பரந்த அறிவினொடு அறுகுபோல் படர்ந்த நல்ல
பண்பான அதிபரே பல்கோடி வந்தனங்கள்.

முல்லைக்குத் தேராய் மயிலுக்குப் போர்வையாய்
வரையாது அள்ளியீந்த கர்ண பரம்பரையாய்
கணமேதும் சலிக்காது சேவையினை ஆற்றியே
கற்றவரை மற்றவரை கனிவுடன் நோக்கியே
கருத்துடன் நடத்தி மறக்கவொணா
கல்லூரிக் குடும்பத்தின் கலங்கரை விளக்கமே.

கல்விக்காய் தந்தீர்கள் வகுப்பறைக் கட்டடங்கள்
கலைவாழ செய்தீர்கள். பற்பல திட்டங்கள்
அகில மொழி எனும் ஆங்கில மொழி என்றும்
அனைவர் உதடுகளும் உச்சரிக்கச் செய்தீர்
கல்லூரியை அழகாக அலங்கரித்துப் பார்த்தீர்கள்
அன்பாக அனைவரையும் அரவணைத்து வென்றீர்கள்

அவல வாழ்வால் அலறித் துடித்தோர்க்கும்,
அன்பாக உதவிகள் பல பண்பாக செய்தீர்கள்
பகிர்ந்தளிக்கும் பண்புதனை யாவர்க்கும் ஊட்டியே
மாணவர்கள் பல்துறையில் மிளிரவும் செய்தீர்கள்
ஆசிரியரை ஆற்றலாளராய் உருவாக்கியே
கண்ணை இமை காப்பது போல் நீங்களும் - நம்
கல்லூரிக் குடும்பத்தைக் காத்தீர்கள்

காலை முதல் மாலைவரை காலம் பாராது
கல்லூரி சேவைக்காய் உங்களை அர்ப்பணித்தே
பாங்குடனே பலசேவை பார்போற்ற செய்தவரே
பல்லாண்டு காலம் வாழிய எம்தந்தையே.

மலர்ச்சியுடன் மணம்பரப்பும் மலரைப் போலவே
தளர்வின்றி உயர்சேவை நிலைக்கவே – வாழ்த்தி
பனித்த கண்களுடன் கனத்த இதயத்துடன்
நன்றி உணர்வோடு விடையளிக்கிறோம்
புனித சூசையப்பர் தந்த கல்லூரிக் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் நிழல்கள் ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Great mentors at St Joseph's College for the past 25 years

1. Mr.J.S.Guy De Font Gallen
2. Rev.Bro.A.Soosaithasan
3. Mr.P.J.Antony
4. Mrs.Chandra Balasubramaniyam
5. Mr.A.R.Hakeem Lebbai
6. Mr.G.R.N.Phillips
7. Mrs.N.B.Oorloff
8. Miss.A.R.Subahni Umma
9. Mrs.B.Ushadevi
10. Mrs.K.A.Hamid
11. Mrs.S.Soundarathas
12. Mr.S.Suthakaran
13. Mrs.T.Suthakaran
14. Mrs.C.Raveendran
15. Mrs.S.Darmadas
16. Mr.S.Thamotharam
17. Mrs.S.B.Thomas
18. Mr.R.Shanmuganathan
19. Mr.K.Sithiravelu
20. Mr.K.Kandasamy
21. Mrs.R.Beadle
22. Mrs.N.Thayananthaguru
23. Mrs.M.Jeyatharshai
24. Mr.S.Nanthakumar
25. Mrs.L.Sithiravel
26. Miss.S.C.Arulanantham
27. Mrs.R.Jegasothy
28. Miss.K.Vasantha
29. Mrs.T.T.Theepan
30. Mrs.M.Peeter
31. Mrs.P.Poopalaratnam
32. Ms.L.Kishokumar
33. Mrs.S.Manjula
34. Miss.N.Kamalasanidevi
35. Miss.S.Alan Mary
36. Mr.S.Sunthar
37. Mr.A.D.Pushpaharan
38. Mrs.A.Sivasundaram
39. Mrs.R.Raveendrakumar
40. Miss.R.Kulavathani
41. Miss.S.Nikila
42. Mr.L.L.Sebaratnam
43. Mr.J.N.Balthazar
44. Mrs.M.Ruthrakumar
45. Mrs.M.Meenadchisuntharam
46. Mr.M.R.M.Feroze
47. Mr.K.Selvarasu
48. Mr.S.Vivekananthan
49. Mr.M.M.Magummathucassim
50. Mrs.J.A.Motha Corera
51. Mr.E.S.Yogeswaran
52. Mrs.S.Vasanthimalar
53. Mr.K.Umapathisivam
54. Miss.V.Malini
55. Mr.K.Vignaraja
56. Mr.S.G.M.Louis
57. Mrs.R.Kailaivasan
58. Mrs.A.Sivanarul
59. Mrs.L.Uthayakumaran
60. Mr.A.Jeyakrishnaseelan
61. Miss.M.I.J.Jesudasan
62. Rev.Bro.A.Christurajan
63. Miss.L.Mary Margret
64. Mrs.K.Nathan
65. Miss.P.Kirupananthy
66. Mr.P.Balachandra
67. Miss.R.M.Pattersan
68. Mrs.T.Ravindrarajah
69. Mr. . Thevasahayam
70. Mr.J.Uthayaratnam
71. Mr.S.Thayaparan
72. Miss.J.Joseph
73. Mrs.N.Sivapalasundaram
74. Mrs.I.J.Christopher
75. Mrs.M.Pious Amalanathan
76. Mrs.S.Navaratnam
77. Miss.S.Ranjithamani
78. Miss.R.J.Joseph
79. Mrs.S.Krishanthan
80. Mr.T.S.Parthasarathy
81. Mr.S.Kandeepan
82. Mrs.S.Selvarajah
83. Mrs.P.Vidhyavinothini
84. Mr.K.Chandrakanthan
85. Rev.Br.P.M.Lenuch
86. Mrs.S.Lavakumar
87. Mr.A.Umamaheswaran
88. Mr.T.Gowrimenan
89. Rev.Fr.Jeevanathas Fernando
90. Miss.S.A.R.Jumaila



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. Mr.S.Selvakumar
92. Mrs.T.Partheepan
92. Mrs.J.T.Sriharan
93. Mrs.M.Edvin Louis
94. Mrs.S.Umapathisivam
95. Mr.S.Subairdeen
96. Mrs J.M.Philip
97. Mrs.S.F.Annas
98. Mrs.B.Sivabalan
99. Mrs.S.Rajakulaveerasinham
100. Mrs.B.Karunainathan
101. Mr.S.Sathyanathan
102. Mrs.S.Kirupakaran
103. Mrs.S.Krisnakumar
104. V.Uthayachandran
105. Mrs.S.Suthakaran
106. Rev.Br.V.Fernando
107. Mrs.Seran Siyama
108. Mrs.N.Thaveendran
109. Mrs.S.Mekarasa
110. Mrs.V.Selvakumar
111. Mrs.M.Vivekanandan
112. Rev.Fr.Godfrey Joel
113. Mr.A.Nimalesh
114. Miss.S.Sathyawathana
115. Mr.P.Darson
116. Mrs.C.R.Arulanantham
117. Miss.U.Pratheepa
118. Mr.J.Thushyanthan
119. Mrs.E.S.Meranda
120. Mrs.M.Surenthini
121. Miss.S.Priyanka
122. Mrs.J.S.N.Kirupakaran
123. Mr.A.Akilan
124. Mr.A.Jeyanesan
125. Mrs.S.Ragunathan
126. Miss.A.Tharaka
127. Mr.S.Ranjithkumar
128. Miss.T.Vathanakumari
129. Miss.M.N.Nasrul Nasliya
130. Mr.A.M.Mohamed Riwas
131. Mrs.N.Fslool Fariza
132. Mr.A.R.Sajeeth
133. Mr.A.K.Siyahul haq
134. Mr.S.Sivatheepan
135. Mr.M.Lavanyan
136. Mrs.M.Edwin Louis
137. Miss.S.Vanaja
138. Mrs.T.Ummu Samila
139. Mrs.N.M.M.Saffees
140. Rev.Fr.S.Antony.Poncian
141. Mrs.T.Vasudevan
142. Mrs.M.Tharma
143. Mr.M.S.M.Riyas
144. Mr.K.Pushparajah
145. Mrs.A.Krishnamoorthy
146. Mrs.S.Sooryakumary
147. Mrs.J.Theivendra
148. Miss.G.Pravintha
149. Miss.U.Thisothini
150. Mr.K.Rashikaran
151. Mrs.S.Sarathchandran
152. Mrs.B.Kannathasan
153. Mr.M.Thiruchchelvam
154. Mr.S.Vincent
155. Mrs.T.Umesh
156. Miss.P.Arulmozhi
157. Miss.C.Gowthami
158. Miss.K.Thushanthini
159. Mr.M.Mohanraj
160. Mrs.T.Jegatha
161. Mr.K.Paskaran
162. Mr.N.Sangaradas
163. Miss.S.Nitharshini
164. Miss.M.Theepiha
165. Miss.M.S.Shafa
166. Miss.N.N.Fathima
167. Mrs.R.Risana
168. Mr.A.C.Fazvi Mohamed
169. Miss.K.Piruntha
170. Miss.N.Thivitha
171. Miss.S.Yawana
172. Mr.P.Thinesh Kumar
173. Mr.M.I.Mohamed Rizam
174. Miss.N.Nagarajah
175. Mrs.T.Hariharan
176. Mr.S.Manivathanan
177. Rev.Fr.Vijayakamalan Alfred
178. Mr.S.Unais
179. Mr.G.Milton
180. Miss.H.K.Samarathunga


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Achievments Brought glory to St. Joseph's College.



Mas.L. Rishikesan Participation in International Mathematics Competition in Thaiwan - 2012/ Bulgaria - 2013



Mas.M.A.M.Afham Participation in International Mathematics Competition in South Koriya - 2014
International Mathematics Olympiad - 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Achievments Brought glory to St. Joseph's College.



Mas. Srikaran Sriraksan



Mas. Lavakumar Kaviseshan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Achievments Brought glory to St. Joseph's College.



Mas. Johnthevathas Joshia



Mas. Lavakumar Sarukesh

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Achievments Brought glory to St. Joseph's College.



Mas. Thangavadivel Tharshanth
Five National Level 1st Places in Tamil Day Competitions



Mas. P.Aarushan
National Level 1st Places in Tamil Day Competitions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IT Master Mind





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Brought Glory to St.Joseph's College




Social Science competition
National level Winners - 2012



Inovation Award Winners - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பிரதீபபிரா விருது பெற்றபோது ...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Acheivements of Teachers of St.Joseph's college.

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr.S.Suthakaran | Scholarship to London | Dec 2000 |
| | | M.Sc in Sc.Ed | 2004 |
| | | ADE (Sc) | 2005 |
| 2. | Mrs.T.Suthakaran | MSc in Sc.Ed | 2005 |
| | | Guru Pradeepa Praba Award | 2012 |
| | | Principal Grade | 2012 |
| 3. | Mr.S.Thevasakayam | Scholarship to Thailand | 2001 |
| | | M.Ed | 2004 |
| | | Teacher Centre Manager | 2005 |
| | Mr.K.Umamaheswaran | SLAS | 2001 |
| 4. | Mr.Thayaparan | ISA (PT) Zonal Office | |
| 5. | Mr.J.Uthayatnam | Co - ordinator Office | |
| 6. | Mr.S.Sunthar | Scholarship to London | 2001 |
| 7. | Mr.T.Parthasarathy | M.Sc in Sc Ed | 2005 |
| 8. | Mr.S.Kandeepan | M.Sc in Sc. Ed | 2011 |
| 9. | Mr.T.Gowrimenan | Guru Pradeepa Praba Award | 2012 |
| | | M.A | |
| 10. | Mr.E.Yogeswaran | Principal grade | 2008 |
| 11. | Mrs.Chandra Balasubramaniyam | Principal Grade | 1997 |
| 12. | Mr.A.Nimalesh | Accountant (Zonal Office) | 2015 |
| 14. | Rev.Fa.Godfrey Joel (OMI) | MA in Edu | 2010 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித சூசையப்பர் கல்லூரியின் விளையாட்டுத்துறை சாதனைகள்

அருட்.சகோ.A.கிறிஸ்ரி FC
முன்னாள் விளையாட்டுத்துறை
பொறுப்பாசிரியர்
(1995 – 2007)

கடந்த 150 ஆண்டுகளாக திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டுத்துறை மூலம் பல தேசிய வீரர்களையும், நாட்டுக்கு வேண்டிய நற்பிரசைகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் இன மத சமூக நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி வருகின்றது.

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் விளையாட்டுத்துறை வரலாறு சாதனைகள் பல நிறைந்த சரித்திரமாகும். இக்கல்லூரியின் பெயரும் புகழும் அன்று முதல் இன்று வரை அகில இலங்கை ரீதியாக பிரபலமடைந்து பேசப்பட்டு வருவதற்கு இக்கல்லூரி விளையாட்டுத்துறையில் ஈட்டி வரும் சாதனைகளே என்றால் மிகையில்லை. 1867ம் ஆண்டில் அமலமரித்தியாகிகள் சபை குருக்களால் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்ட இக்கல்லூரியை 1893ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்த இயேசு சபைக்குருக்கள் பொறுப்பேற்றார்கள். இதன் பின்பு இக் கல்லூரி ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் மூலம் கல்வியிலும் விளையாட்டுத்துறை மற்றும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் புகழ் பெற்று விளங்கியது. கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக விளையாட்டுத்துறையில் பல சாதனைகளைப் படைத்து வருகிறது.

ஆரம்ப காலத்தில் மெய்வல்லுனர் போட்டி மற்றும் உதைபந்தாட்டத்திலும் தேசிய ரீதியில் சாதனைகள் படைத்த இக் கல்லூரி இத்துறைகளில் பல தேசிய வீரர்களையும் உருவாக்கியுள்ளது. அந்த வகையில் மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் உயரம் பாய்தலில் திரு. P. கலால்டீன் மற்றும் திரு.G.திசவீரசிங்கம் போன்றோரும் பரிதி வட்டம் மற்றும் குண்டு எறிதலில் திரு.கிறிஸ்டி ஒபயசேகரா 800 மீற்றர் 1500 மீற்றர் ஓட்டங்களில் திரு.A.L.குணசேகரா அவர்களும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய தேசிய மட்டத்தில் சாதனை படைத்த வீரர்களாவர். பின்பு எமது விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலை மாணவன் திரு.T.ரஜன் 15 வயதுப் பிரிவில் 200kmP, 400kmP போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் நிலைநாட்டப்பட்ட சாதனைகளை 2000ம் ஆண்டு வென்னப்புவவில் நடைபெற்ற கனிஸ்ட மெய்வல்லுனர் போட்டியில் ஒரே நாளில் முறியடித்து இலங்கையின் புதிய சாதனை படைத்து எமது கல்லூரிக்கும் திருமலை மண்ணுக்கும் பெருமை சேர்த்தார். இதே போன்று மற்றும் இரு மாணவர்களான் திரு R. ரதீசன் தேசிய மட்டத்தில் கோலூான்றிப் பாய்தலில் சாதனை படைத்தது மட்டுமன்றி தாய்லாந்தில் நடைபெற்ற கனிஸ்ட மெய்வல்லுனர் போட்டிகளில் கோலுன்றிப் பாய்தல் மற்றும் " டெக்கத்லன்" நிகழ்ச்சிகளில் இலங்கை தேசிய அணியில் கலந்து கொண்டு குறிப்பிடத்தக்க திறமையை வெளிப்படுத்தியிருந்தார். திரு.K.T.M.காரிஸ் தேசிய மட்டத்திலும் தாய்லாந்திலும் சாதித்துள்ளார். ரதீசன் ரஜன், காரிஸ் ஆகிய மாணவர்கள் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் திரு.விஜயநீதன் அவர்களின் விசேட பயிற்சியுடன் எமது கல்லூரி உடற்கல்வி ஆசிரியர்களான திரு.J.உதயரெட்ணம், திருS.தயாபரன் ஆகியோரின் வழிகாட்டலிலும் இச்சாதனைகளைப்படைத்தனர். எமது மாணவன் K.T.M. காரிஸ் 100kmP, 200kmP, 400kmP போட்டிகளில் தேசியரீதியில் 2004ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு வரை 02 தங்கம், 05 வெள்ளி, 05 வெண்கலம் என 12 பதக்கங்களை வென்று தேசிய சாதனை படைத்துள்ளார். இந்த மாணவனின் தேசிய சாதனை படிகளில் உடற்கல்வி ஆசிரியர் திரு.S..சுபைர்தீன் அவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க இயேசு சபைத் துறவியான அருட் திரு. இயுஜின் கேபேட் அடிகளார் எமது கல்லூரியில் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாகவும் அதிபராகவும் இருந்த காலத்தில் கூடைப்பந்தாட்டதில் எமது கல்லூரி தேசிய மட்டத்தில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடி விருதுகள் குவித்து சாதனை படைத்தது அழியாத வரலாறாகும். அந்த வகையில் எமது மாணவர்கள் இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணிகளில் தலைவர்களாகவும் இருந்துள்ளனர். இவர்களில் திரு.யு.சூசைதாசன் அவர்கள் ஒரு சிறந்த வீரராக திகழ்ந்ததுடன் இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணியின் தலைவராகவும் விளங்கினார்.

துர்அதிஸ்டவசமாக கேபேட் அடிகளார் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கு இடமாற்றலாகிச் சென்றபின் எமது கல்லூரியில் கூடைப்பந்தாட்டம் பின்னடைவு கண்டது புனித மிக்கேல் கல்லூரி இத்துறையில் எழுச்சி பெற்றது இன்று அடிகளார் இறைபதமடைந்ந நிலையிலும் அக்கல்லூரி கூடைப்பந்தாட்டத்தில் தேசிய மட்டத்தில் வீறுநடை போட்டு வருகிறது. புனித சூசையப்பர் கல்லூரியில் கூடைப்பந்தாட்டம் வீழ்ச்சிகண்ட நிலையில் உதைபந்தாட்டம் அக்காலப்பகுதியில் எழுச்சி பெற்றது திருமலை ஜோசப் என்றாலே தலைசிறந்த தலைநகரக் கல்லூரிகள் முதல் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உதைபந்தாட்டத்தில் சிறந்து விளங்குகின்ற முன்னணிப் பாடசாலைகள் விளையாட்டுக் கழகங்கள் கூட தயக்கமடைகின்ற அளவிற்கு எமது சாதனை நிறைந்த வெற்றிகள் அமைந்துள்ளன. அதற்கு ஓர் உதாரணமாக எமது கல்லூரி அணி திரு. லியாகத் அலி அவர்களின் தலைமையில் கழகமொன்றுக்கு எதிரான போட்டியொன்றில் ஈட்டிய சாதனை ஒன்றை இங்கே பதிவிட விரும்புகிறேன். கல்லூரி அணியிலிருந்த 8 வீரர்கள் ஏனைய கழகங்களுக்காக விளையாடியதால் பல புது முக வீரர்களைக் கொண்டு இந்த மகத்தான வெற்றி பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தினபதி 02 – 07 – 1981

**3 வது முறையாக ஜுவரத்தினம் வெற்றிக் கிண்ணம் யோசப் கல்லூரிக்கு**

தினபதி பத்திரிகை பகுதியைப் பார்க்கவும்.

1950ம் ஆண்டுக்குப் பின்னர் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்டு வந்த "டொனவன் அன்றி" கிண்ணப் போட்டிகள் " கிண்ணப் போட்டிகள் சிங்கர் வெற்றிக் கேடயப் போட்டிகள் அனைத்திலும் தொடர்ச்சியாக பங்கு கொண்டு பல வெற்றிச்சாதனைகள் படைத்து கிண்ணங்களை வென்றெடுத்தோம். கூடைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், உடற்பயிற்சி, மெய்வல்லுனர் ஆகிய துறைகளில் இக்கல்லூரியின் பல மாணவர்கள் தாய் நாட்டிற்காக பிரதிநிதித்துவம் செய்துள்ளார்கள். அவ்வகையில் உதைபந்தாட்டத்தில் திரு.கிளமன்ற் டி சில்வா அவர்கள் வெளிநாடுகளில் நடைபெற்ற உதைபந்நாட்டப் போட்டிகளுக்கு மூன்று முறை இலங்கை தேசிய அணித்தலைவராக செயற்பட்டு சாதனை படைத்துள்ளார். இவரைத் தொடர்ந்து திரு.லீனஸ்லூயிஸ் திரு.K.D.புஸ்பாகரன் திரு.M.M. நவ்பீர் திரு. M.M.றியாஸ் திரு.மத்தியூஸ் ஆகியோரும் தேசிய உதைபந்தாட்ட அணியில் நாட்டுக்காக விளையாடியுள்ளனர். பின்னர் மாணவன் ஆ.நஜிமுல்லா, அனுரா டிலக்சன் பொணிபஸ் ஆகியோரும் தேசிய பாடசாலைகள் அணியில் வெளிநாடுகளில் போட்டிகளில் தாய்நாட்டுக்காக விளையாடியுள்ளனர். இந்த இரு மாணவர்களைஞம் உடற்கல்வி ஆசிரியர்களான திரு.S.சுபைர்தீன் மற்றும் திரு.M.Y.M.இக்ரம் ஆகியோர் பயிற்றுவித்திருந்தனர்

புனித சூசையப்பர் கல்லூரியில் உதைபந்தாட்டத்துறை வளர்ச்சிக்கு மூன்று மும்மூர்த்திகள் தமது அளப்பரிய சேவையினை வழங்கியிருக்கின்றனர். முன்னாள் அதிபர்களான அருட். திரு.வின்சன் டி போல் ஞானப்பிரகாசம் அடிகள் உயர் திரு.J.S.கைடி பொன்கலன் அவர்கள், அருட்.சகோதரர்.A.சூசைதாசன் அவர்கள் இம் மூவரில் அருட்.தந்தை.ஞானப்பிரகாசம் அதிபராக இருந்த காலத்தில் தான் கல்லூரி உதைபந்தாட்ட வரலாற்றின் பொற்காலம் எனலாம். தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றபின் பல்லாண்டுகளாக கல்லூரியின் உதைபந்தாட்டம் பாரிய பின்னடைவைக் கொண்டு காணப்பட்டது. இந்நிலையில் தான் திரு.கைடிபொன்கலன் அவர்கள் அதிபராக பதவியேற்றபின் வீழ்ச்சி கண்டிருந்த உதைபந்தாட்டத்திற்கு புத்துயிர் கொடுத்தார். அந்தக் காலத்திலே தான் விளையாட்டுத்துறையில் ஆர்வமும் பல்லாண்டுகால அனுபவமும் நிறைந்த அருட்சகோதரர் A.சூசைதாசன் கல்லூரியில் உப அதிபராக இருந்தார். அடுத்ததாக எமது கல்லூரியின் உதைபந்தாட்டத்துறையில் பல சாதனைகள் புரிந்து இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியின் உதவித் தலைவராக இருந்து தேசிய மட்டத்தில் நட்சத்திரமாக ஜொலித்த பழைய மாணவர் திரு. புஸ்பாகரன் அவர்களும் உடற்கல்வி ஆசிரியர் நியமனம் பெற்று எமது கல்லூரியில் இணைந்து கொண்டார்.

அதிபர் கைடி பொன்கலன் அவர்கள் ஒரு சிறந்த தேசிய உதைபந்தாட்ட வீரராக திகழ்ந்தவர். திருகோணமலை மாவட்ட உதைபந்தாட்ட வரலாற்றில் அவரது பெயரை பொன் எழுத்துக்களால் பொறித்து விடுமளவிற்கு இத்துறையில் அவரது உழைப்பும் சேவையும் உயர்ந்து நிற்கின்றது. அருட் சகோதரர் சூசைதாசன் அவர் ஆசிரியராகப் பணியாற்றிய எல்லா இடங்களிலும் உதைபந்தாட்டத்துறையை உச்ச நிலைக்கு வளர்த்து பல தேசிய மட்ட சாதனைகளைப் படைத்தவர் அந்த வகையில் யாழ் இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி, பொகவந்தலாவ புனித மரியாள் கல்லூரிஇ என்பன இன்றும் அவர் புகழ் கூறும்.

இவ்வாறு இந்த இரண்டு அதிபர்களும் ஆசிரியர் திரு.புஸ்பாகரனும் இணைந்து 1980 களின் பிற் பகுதி முதல் 1990 களில் புனித சூசையப்பர் கல்லூரியை மீண்டும் உதைபந்தாட்டத்தில் உச்சநிலைக்கு கொண்டுவந்தனர். இக்காலப்பகுதியில் தான் நாம் மீண்டெழுந்து பல தேசிய மட்ட சாதனைகளைப் படைத்தோம். 1995ல் ஆசிரியர் புஸ்பாகரன் அவர்கள் கனடா சென்ற பின் உதைபந்தாட்டப் பொறுப்பாசிரியராக அதிபர் கைடி பொன்கலன் அவர்கள் என்னை நியமித்தார். அவர் என்மீது வைத்த நம்பிக்கையை சரிவர நிறைவேற்ற வேண்டிய நிலையில் நான் இருந்த போது உப அதிபர் அருட் சகோதரர் சூசைதாசன் அருட் திரு ஜீவனதாஸ் பெனான்டோ, உதவி அதிபர் திரு.ஜெறோம், அருட்.சகோதரர் P.M.லீனஸ் மற்றும் பயிற்றுவிப்பாளர்களான திரு.K.D.மைக்கல் கருணாகரன் திரு.D.C.வசந்தன் திரு.நிமால் டி சில்வா, திரு. றொசான் மத்தியூஸ், திரு.கிறிஸ்ரி தவநேசன், திரு.T.தயாளன் போன்றோர் எனக்கு தோள் கொடுத்த தூண்களாக இருந்தனர். அதுமட்டுமன்றி உடற் கல்வி ஆசிரியர்களான திரு.S.தயாபரன், திரு.J.உதயரெட்ணம், திருமதி நாகலிங்கம் திரு.S. சுபைர்தீன் மற்றும் ஆசிரியர்களான திரு.தேவசகாயம், திரு.பாலச்சந்திரா, திரு. ஜெயகிருஷ்ணசீலன் போன்றவர்களின் நிறைவான ஒத்துழைப்பும் எனக்கு இருந்தது. இவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன். எமது உதைபந்தாட்ட அணிகள் தொடர் வெற்றிகளை குவிக்க என்னோடு அயராது உழைத்த பயிற்றுவிப்பாளர் திரு.D.C.வசந்தன் அவர்களுக்கு எனது விசேட நன்றிகள் இவரது பயிற்றுவிப்பில் தான் எமது உதைபந்தாட்ட அணிகள் பல முறை தேசிய மட்டத்தில் வெற்றிகள் பெற்று தங்கப்பதங்களை வென்று குவித்து அழியாத வரலாறு படைத்தன.

### துடுப்பாட்டம் (Cricket)

எமது கல்லூரியில் உதைபந்தாட்டத்துறைக்கு அடுத்ததாக கிறிக்கெட் விளையாட்டை ஒரு பொழுதுபோக்காகவே எமது மாணவர்கள் விளையாடி வந்தனர். இருப்பினும் எமது உடற்கல்வி ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலில் அகில இலங்கை ரீதியில் மென்பந்து கிறிக்கற் போட்டியில் இரண்டு தடவைகள் தங்கப்பதக்கத்தையும் ஒரு தடவை வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று சாதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த ஒரே கல்லூரி என்ற பெருமையை திருகோணமலையில் நிலைநாட்டியுள்ளது. இந்த வரிசையில் அண்மையில் அகில இலங்கை பாடசாலைகள் கிறிக்கெட் இறுதிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற திருமலை கிண்ணியா மத்திய கல்லூரியையும் பாராட்டுகின்றோம். எமது கல்லூரி கிறிக்கெட் விளையாட்டில் அகில இலங்கை சாதனை படைக்க உறுதுணையாக இருந்த கல்லூரியின் அதிபர்களான அருட் சகோதரர் சூசைதாசன், அருட் திரு ஜீவனதாஸ் பெனாண்டோ, உப அதிபர் திரு ஜெறோம், அருட் திரு கொட்பிறி உடற்கல்வி ஆசிரியர்களான திரு. S. ராஜபவன் திரு. சதக்கத்துல்லா சுபைர்தீன், திரு.A.அகிலன், திரு.M.Y.M.இக்ரம், மற்றும் திரு.M.ரொசான் மத்தியுஸ் ஆகியோரின் உழைப்பினை பாராட்ட வேண்டும்.

விளையாட்டுத்துறை சார்ந்த இந்தக் கட்டுரையை எழுதும்படி கல்லூரி நிர்வாகம் என்னைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தக் கல்லூரியில் *1995 – 2007* வரை விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக இருந்த அனுபவத்தைக் கொண்டும் பழைய வரலாறுகளை சேகரித்து வைப்பகத்தில் இருக்கின்ற தேசிய பத்திரிகை வெட்டுத்துண்டுகள் மூலமாகவும் சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டும் என்னால் இதனை முழுமையாக எழுதமுடியவில்லை. எனவே மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பல பழைய மாணவர்களைத் தொடர்பு கொண்ட போதிலும் அதில் ஒருசிலர் மாத்திரம் எனக்கு உதவிசெய்தார்கள் என்பது எனது துர்அதிஷ்டகரமாக இருந்தாலும் முடியுமானவரை தகவல்களைத் திரட்டி இருக்கின்றேன். தகவல்களைத் தந்துதவிய திரு.லியாகத் அலி, திரு.கிளமன்ற் டி சில்வா, திரு.வின்சன் லோகநாதன் திரு.இம்றுறசாக், திரு.கெனடிவிஜயன், திரு.M.M.றியாஸ், திரு.M.M.உவைஸ், ஆகியோருக்கு எனது நன்றிகள்.

## ஜீவரத்தினம் வெற்றிக்கிண்ணம்
### யோசப் கல்லூரிக்கு

திருகோணமலை, ஜூலை 1

ஜீவரத்தினம் வெற்றிக் கிண்ணத்தை மூன்றாவது முறையாக திருகோணமலை சென். யோசப் கல்லூரி சுவீகரித்தது.

இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டப் பொலிஸ் அதிபர் திரு. ஜயதிஸ்ஸ ஹேரத் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஜீவரத்தினம் கிண்ணத்திற்கான இளைஞர் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி திருகோணமலை உதை பந்தாட்டக் கழகத்தினால் 1979இல் ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது வருடம் திருமலை மாவட்ட மட்டத்தில் இப்போட்டி நடத்தப்பட்டது. சென்ற ஆண்டில் இருந்து அகில இலங்கை ரீதியில் நடத்தப்படுகின்றது.

இவ் ஆண்டிற்கான இறுதிப் போட்டியில் திருகோணமலையைச் சேர்ந்த செல். யோசப் கல்லூரியும் செல். அந்தனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியில் முதலாவது கோலை செல். அந்தனிஸ் கழக வீரர் அர்ரல் சண்முகநாதன் புகுத்தினார்.

செல். யோசப் கல்லூரிக் கப்டன் லியாகத் அலி ஒரு கோலை அடுத்த நிமிடமே போட்டு நிலைமையைச் சமமாக்கினார். இதைத் தொடர்ந்து அந்தனிஸ் சார்பில் 2ஆவது கோலை ஜெயதிலக போட்டார்.

இடைவேளையின் பொழுது அந்தனிஸ் 2-1 கோல்களால் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின்னர் செல். யோசப் சார்பில் ஜெயராஜா 2ஆவது கோலைப் புகுத்தினார். செல். அந்தனிஸ் வீரர் ஜெயதிலகா தங்களின் சார்பில் 3ஆவது கோலைப் புகுத்தி வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைத்தார். உடனே செல். யோசப் கப்டனை லியாகத் அலி மீண்டும் ஒரு கோலைப் புகுத்தி போட்டியை வெற்றிதோல்வியின்றி முடித்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து வெற்றியை நிர்ணயிக்க இரண்டு கோஷ்டிகளுக்கும் 5 பெனல்டி உதை போடும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி செல். யோசப் 4 கோல்களைப் போட்டது. செல். அந்தனிஸ் 2 கோல்களை மட்டுமே போட்டது.

இறுதியில் இரண்டு மேலதிக கோல்களினால் செல். யோசப் கல்லூரி வெற்றிக் கிண்ணத்தை 3ஆவது முறையும் சுவீகரித்துக் கொண்டது.

(எ–287)

மடான மபால மஹனற மபறறக ஞாபகார்த்த கிண்ணம் கால்பந்தாட்டம்

## திருமலை புனித சூசையப்பர் சாம்பியனானது

நிலாவெளி,

கந்தானை டி மெஸநேட் கல்லூரி பழைய மாணவர் காலப்ந்தாட்ட சங்கம் நடத்திய 19 வயதுக்குட்பட்டோருக்கான டொன்போல் ஹென்றி பெற்றிக் ஞாபகார்த்த கிண்ண பாடசாலை காலப்ந்தாட்ட நொக்-அவுட் சுற்றுப் போட்டியில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி சாம்பியன் ஆனது செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 9 வரை கந்தானையில் நடத்தப்பட்ட இச் சுற்றுப் போட்டியில் தான் பங்கு கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் இலகுவாக வெற்றிபெற்று சாம்பியன் பட்டத்தை சூடிக் கொண்ட புனித சூசையப்பர் கல்லூரி பிரபல காலப்ந்தாட்ட கல்லூரி அணிகளை பிரமிப்பில் ஆழ்த்தியது.

றோயல், சாஹிரா, புனித பீற்றர், டி.எஸ்.சேனநாயக்க, தேர்ஸ்டன், வெஸ்லி, ஹமீட் அல் உசைனியா டி. மெஸநேட், மாகிஸ் ஸ்டெல்லா உட்பட 22 கல்லூரி அணிகள் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றின.

கால் இறுதி ஆட்டத்தில் கொழும்பு புனித பெனடிக்கல் ரி அணியையும் இறுதி ஆட்டத்தில் நீர் கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா அணியையும் (6-0) வெற்றிகொண்ட புனித சூசையப்பர் அணி இறுதிப் போட்டியில் கந்தானை டிமெசன்ட் கல்லூரியை 5-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டி திருமலை மாவட்டத்திற்கும், வடக்கு கிழக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துக் கொண்டது.

ஜூலை மாத முற்பகுதியில் திருமலையில் நடந்த வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகள் விளையாட்டு விழாவில் 19 வயது பிரிவில் புனித சூசையப்பர் கல்லூரியே சாம்பியன் ஆகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

சாம்பியன்விருதைப் பெற்ற புனித சூசையப்பர் கல்லூரி அணியினருக்கு திங்கள் காலை 9.30 மணிக்கு திருமலை புகையிரத நிலையத்தில் இருந்து கல்லூரி மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆசிரியர்கள், பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவின் இன்னிசையுடன் குளிர்ச்சியான வரவேற்பளிக்கப்பட்டது.

வட-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், மாகாணப்பணிப்பாளர், வலயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்ட வரவேற்பு நிகழ்வில் காலப்ந்தாட்டக் குழுவினர் வரவேற்கப்பட்டு பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவில் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டனர்.

விழா கல்லூரி அதிபர் வண.சகோதரர் சூசைதாசன் தலைமையில் நடைபெற்றது.

வீரகேசரி - 13-10-1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NATIONAL LEVEL RECORDS IN SPORTS OF ST.JOSEPHS COLLEGE - TRINCOMALEE

## SOCCER

1962 Under - 19 DONOVAN ANDREE SHIELD soccer National Champions (Captain - Mr.R.Thurairatnam)

1962 Under - 19 All Island Schools Soccer National Champions (Captain - Mr.R.Thurairatnam)

1967 C.F.A Junior National Champions (Captain - Mr.Joseph Christy)

1967 Under 20 Donovan Andree Shield Champions (Captain - Mr.Joseph Christy)

1967 Junior National champion (Captain: Mr.Joseph Christy)

1968 ''MIHIRA CUP'' National champion

1969 Senior National Champion (Captain: Mr. Ranjan Antony)

1969 U-19 '' MIHIRA CUP'' National Champion

1969 U-20 All Island ''YOUTH CUP'' National champion

1971 Schools Soccer National (Captain: G.Kirubaithasan)

1971 All island schools foot ball National champion

1971 ''MIHIRA CUP'' National champion

1971 ''SLNGER SHIELD'' National Champion

1972 ''SINGER SHIELD'' National champion

1972 ''MIHIRA CUP'' National Champion

1973 All Island ''SOCCER KINGS TROPHY'' National Champion

1973 All Island ''YOUTH CUP'' National champion

1973 All island schools foot ball National champion (Vice Captain:Mr.Vincent Loganathan)

1974 U-15 All Island schools foot ball National champion (Captain: Mr.R.M.Ibunu)

1974 U-20 All Island Schools Foot ball National champion

1975 U-15 All Island schools foot ball National champion (Captain: Mr.M.Liaqat Ali)

1976 U-15 All Island schools foot ball National 1st runner up (Captain: Mr.Upali)

1978 U-20 National Youth champion

1979 JEEVARATNAM CHALLENGE CUP National champion

1980 JEEVARATNAM CHALLENGE CUP National champion

1981 JEEVARATNAM CHALLENGE CUP National champion (Captain: Mr.M.Liaqat Ali)

1981 CEYLON NEWS PAPERS CHALLENGE CUP National champion

1982 CEYLON NEWS PAPERS CHALLENGE CUP National champion (score 10-0)

1989 U-12 MILO CUP National champion (Coach:Bro.Soosaithasan,Mr.K.D.Pushpaharan.Captain:Mr.Kumanan)

1995 Under-16 MILO CUP National 1st runner up (Coach:Mr.K.D.Pushpaharan)

1995 Under -18 MILO CUP National 1st runner up (Captain: Mr.M.M.Uwaiz)

1995 Under-18 SUPER MILO CUP National 1st runner up (Captain: Mr.K.Mayooran)

1995 Under-18 BRAZIL CUP National 1st runner up (Captain: Mr.M.M.Uwaiz)

1997 Under 18 MILO CUP National 1st runner up (Coach:Mr.Michael Karunaharan)

1999 U- 18 DON PAUL CUP National champions (score 5-0 captain; N.M.Nawfeer.Coach:Mr.D.C.Vasanthan)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 U-18 DON PAUL CUP National 1st runner up (score 2-1 captain M.M.Riyas.Coach:Mr.D.C.Vasanthan)

2000 Under-12 MILO CUP National champion.(Mr.Meril Thayalan,Mr.Roshan Mathews)

2001 U- 18 All Island Schools foot ball National champion (Captain R.Desmon.coach: Mr.D.C.Vasanthan)

2001 Under-14 MILO CUP National 1st runner up (Coach: Mr.T.Meril Thayalan)

2001 Under-18 All Island CHRIST KING CUP National 1st runner up (Coach:Mr.D.C.Vasanthan)

2002 Under -18 All Island Schools foot ball National champion (Captain: Late T.Thulasithasan)

2004 Under-18 Schools foot ball National champion (Coach:Mr.D.C.Vasanthan,Captain : Kishorkumar)

2009 Under-19 Schools foot ball National 2nd Runner Up (Captain:R.Rahuman)

2014 Under 18 MILO CUP division-3 National 1st runner up (Coach:Mr.A.Ahilan,M.I.C:Mr.S.Sivatheepan)

**CRICKET**

2004 U-19 Schools soft ball cricket National champion (Coach:Mr.S.Subairdeen, Asst-Mr. Roshan Mathews, M.I.C : Mr.J.Uthayaratnam, Mr.S.Thayaparan)

2004 U-19 All Island HNB CUP soft ball cricket National 1st runner up (Coach:Mr.S.Subairdeen)

2007 U-19 Schools soft ball cricket National champion (Coach:Mr.S.Rajabavan,Rev.Fr.Godfry,O.M.I)

**BASKET BALL**

1968 Schools Basket Ball National 1st runner up (Captain:Mr.A. Soosaithasan)

1970 All Island Junior National Basket Ball National Champion (Captain:Mr.J.X.Shelton)

1973 U-19 All Island Schools Basket ball National Champion (Captain: Mr.Vincent Loganathan)

**INDUVIDUAL PERFORMANCE OF TRINCO JOSEPHIANS IN NATIONAL AND INTERNATIONAL LEVEL**

- Mr.Clement de Silva, Schools National soccer team captain
  *(Out of school there are many more records belongs to him in National level )*
- Mr.Nimal de Silva,senior National Youth soccer pool
- Mr.Imbru Razak , senior National Youth soccer pool (1978)
- Mr.Imran Razak, senior National Youth pool
- Mr.A.Soosaithasan, Schools National Basket Ball team Captain
- Mr.Puspakaran, Schools National soccer team vice captain
- Mr.M.N.Nowfeer, Schools National foot ball team Member
- Mr.M.Najimulla, Schools National foot ball team member
- Mr.Anura Dilukshan Bonyfas, Schools foot ball team member
- Mr.P.Halaldeen, High jump (National Level)
- Mr.G.Thisaveerasingam, High Jump(National Level)
- Mr.Christy Obayasegara, Discus throw and shot putt (National Level)
- Mr.A.L.Gunasegara,800M, 1500M (National Level)
- **Mr. R. Ratheesan, (Pole vault and Decathlon)**
- *Long Jump Silver Medal 7.15m in National Championships-2007*
- *Decathlon Silver Medal 5862 points in National Championship-2006*
- *Long Jump Silver Medal 7.06m in Junior National Athletic Championship-2005*
- *Pole vault Silver Medal 3.60m in Junior National Athletic Championship-2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *Pole vault Silver Medal 2.90m in Junior National Athletic Championship-2002*
- *Pole vault Bronze Medal 3.40min Junior National Athletic Championship-2001*
- *10TH Place with 6140 points in 16th Asian Athletic Championship* ***Incheon-South Korea -2005***
- *Long Jump Gold medal 7.09m in International Interreligious Peace Sports Festival* ***Asan-South Korea -2005***
- *Decathlon 9th place 5776 points(**New Sri Lankan Junior Record**)in 10th Asian Athletic Junior Championships **Bangkok-Thailand-2002***
- *Decathlon Gold Medal with 5999 points(**new Sri Lankan Record**)in **Colombo-2003***
- *Decathlon Gold Medal with 6164 points(**new Sri Lankan record**)in **Colombo-2005***

**Mr.K.T.M.Haris,**

100M, 200M, 400M, 2 Gold, 5 Silver, 5 Bronze medals in National Schools level competitions from 2004 to 2007.

100m Bronze medal 11.17sec, 200m bronze medal 22.28sec in International Interreligious Peace Sports Festival **Asan-South Korea-2007**

Mr.A.H.Ahzan, 5000M Browns medal in National level -2009

Mr,J.B.Robert Freemas, Sri Lanka Air Force soccer pool-1997

Mr.M.M.Uwais, U-19 Schools National Soccer pool-1995

Mr.Wilbert, Sri Lanka Air Force Soccer pool 1997

Mr.R.Norton, Unior National Soccer pool -2000

Mr.M.M.Riyas, National Soccer pool -1999

Mr.J.Mathes, National Soccer pool-1998

Mr.Inshap, National Schools Soccer Pool -2002

Mr.M.N.Nowfeer- Best scorer of the tournament National Award (Don Paul Cup-1999)

- Mr.R.Norton – Best player of the tournament National Award (Don Paul Cup-1999)
  Mr.Nishok Antony- Best Goal Keeper of the tournament National Award (Don Paul Cup-1999)

**Schools Junior National Athletic Meet Vennapuwa in Year-2000**

- 13-11-2000, Under -15 200M Mr.T.Rajan, Sri Lanka Schools record 23.5 sec.
  *(In1991, 23.6 sec by V.Rajabaksa of Trinity College Kandy)*
- 13-11-2000, Under -15 400M Mr.T.Rajan, Equaled Sri Lanka Schools Record 54.6 sec.
  *(In 1989, 54.6 sec by L.D.P.Delungawatha of St.Antony's College,Kandy).*
  Rev.Bro.A.Christy F.C Prefect of Games (1995-2007)

**National youth Athletic festival - 2015**

K.Dayananthan - 110 mh Silver Medal 15 - 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievments



1995 Under-16 MILO CUP National 1st runner up



1995 Under -18 MILO CUP National 1st runner up
1995 Under -18 SUPER MILO CUP National 1st runner up
1995 Under -18 BRAZIL CUP National 1st runner up

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievments



1997 Under 18 MILO CUP National 1st runner up



1999 Under- 18 DON PAUL CUP National champions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievments



2000 Under-18 DON PAUL CUP National 1st runner up



2000 Under - 12 MILO CUP National champions.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievments



2000 Under - 16 Milo Cup National 1st Runner up




2001 Under - 18 All Island Schools foot ball National champions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievments



2001 Under - 14 MILO CUP National 1st runner up




2001 Under-18 All Island CHRIST KING CUP National 1st runner up

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievments



2002 Under -18 All Island Schools foot ball National champions




2004 Under -18 Schools foot ball National champions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sports Achievments



2009 Under -19 Schools foot ball National 2nd Runner Up



2013 Under 18 MILO CUP division-3 National 1st runner up

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievments



2003 Under - 19 Schools soft ball cricket National champions
2003 Under - 19 All Island HNB CUP soft ball cricket National 1st




2007 Under - 19 Schools soft ball cricket National champions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# St. Joseph's College Sports School



1997 1st Batch



1997 1st Batch


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# St. Joseph's College Sports School



Mr.R.Ratheesan



Mr.K.T.M.Haris



Mr.T.Rajan



Mr.K.Dayanthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mas.A.H.Ahzan




# Mas.K.T.M.Haris



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# College Band Group






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சகோதரர் ஏ.சூசைதாசனும் சூசையப்பர் கல்லூரியும்

அபிமன்னசிங்கம் அகிலன்
(ஆசிரியர் - உடற்கல்வி)
தி/புனித சூசையப்பர் கல்லூரி

திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரி 1867ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை பல வெற்றித் தடங்களைப் பதித்து வந்துள்ளது. திருமலை மண்ணில் இக்கல்லூரி மும்மொழி மூலக்கற்கையை (ஆங்கிலம், தமிழ், சிங்களம்) வழங்கி வந்தமை இன்று பலர் அறியப்படாத உண்மையாக இருக்கின்றது. சூசையப்பர் கல்லூரி இவ்வாறாக பல சமுதாய இணக்கப்பாடான நற்பிரஜைகளை உருவாக்குவதில் முன்னணி வகித்து வருகின்றது. கல்வித்துறை, விளையாட்டுத்துறை, ஏனைய துறைகளிலும் தனது மங்காத சரித்திர வரலாற்றைப் பதித்துள்ளது. சூசையப்பர் கல்லூரியின் சாதனைக்காக சேவையாற்றிய பலரை இன்றும் கல்லூரி சமூகம் நினைவுகூர்ந்த வண்ணம் உள்ளது. அந்த வகையில் இக்கல்லூரியின் முன்னைநாள் அதிபர் அமரர்.வணக்கத்துக்குரிய அருட்சகோதரர் ஏ.சூசைதாசன் அவர்களின் வாழ்வையும் இவரது காலத்தில் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளையும் இவ்வெளியீட்டில் சமர்ப்பிக்கின்றேன்.

அருட்சகோதரர் புனித சூசையப்பர் கல்லூரியிலே 1988ம் ஆண்டு ஆங்கில ஆசானாக சேவையாற்ற அழைக்கப்பட்டார். கல்லூரி மாணவர்கள் ஆங்கிலப் பாட அறிவில் தேர்ச்சி பெறவும், ஆங்கிலத்தை முறையாகக் கற்கவும் சரியான வழிகாட்டலை மேற்கொண்டார். 1990, 1991ம் ஆண்டு காலப்பகுதியில் எமது நாடு மோசமான சூழலை எதிர்கொண்டிருந்தது. இக்காலப்பகுதியில் மாணவர்கள் வீட்டை விட்டு வெளியே நடமாடமுடியாத நிலைமை காணப்பட்டது. இக்காலத்தில் அருட்சகோதரர் அவர்கள் தமது மாணவர்களுக்கு ஆங்கில சொற்களை மனனஞ் செய்வதற்கு வழங்கி அவற்றை மனனஞ் செய்தார்களா? இல்லையா? என்று மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பரீட்சித்து பரிகாரம் வழங்கியதுண்டு. இது மாணவர்கள் ஆங்கில அறிவு பெற வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறைக்கு ஓர் சான்றாகும்.

சூசையப்பர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்டசைக்கு தோற்றும் மாணவர்களை தயார்ப்படுத்துவதில் இவரது சேவை குறைந்ததாக இருக்கவில்லை. மாலைநேர வகுப்புக்கள், இரவுநேரபரீட்சை வினா மீட்டல் போன்ற செயற்பாடுகளை சிறப்பாகத் திட்டமிட்டு தனது செயற்பாட்டின் வெற்றியை மாணவர்களின் பெறுபேற்றின் மூலம் உறுதி செய்தார். திருமலை மண்ணில் தரம் 5 புலமைப்பரிசில் பரிட்சை பெறுபேற்றுக்கு எடுத்துக்காட்டாக புனித சூசையப்பர் கல்லூரி திகழ்ந்தது என்றால் இவரின் அளப்பரிய சேவையேயாகும். கல்லூரியின் தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்றுப் பொற்காலமாக இவரது காலம் இன்றும் குறிப்பிடப்படுகின்றது. வண.அருட்சகோதரர் ஏ.சூசைதாசன் அவர்கள் சிறந்த உதைபந்தாட்ட வீரர். தனது திறன்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காக உதைபந்தாட்ட பயிற்றுனராக (Football Coach) பல பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார். சூசையப்பர் கல்லூரியின் உதைபந்தாட்டம் இவரது பயிற்றுவிப்பில் எட்டமுடியாத பல வெற்றிகளைப் பெற்றது. உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரையில் சகல வயது பிரிவினருக்கும் (Un12, Un14, Un16, Un18) பயிற்றுவிப்பதில் சிறந்த பயிற்றுவிப்பு நிபுணத்துவம் கொண்டவராக விளங்கினார். உதைபந்து போட்டிகளின் போது மாணவர்களை மைதானத்தில் வழிப்படுத்துவதில் தனக்கென தனியானதொரு கைவரிசையை கையாண்டிருந்தார். இவர் பயிற்றுவிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இன்றும் தேசிய மட்டப்போட்டிகளில் சிறப்பாக அடைவை பெற்று திருமலை மண்ணுக்கு பெருமை சேர்த்து வருவது அனைவராலும் அறியப்பட்டதொன்றாகும்.

இவரது காலத்தில் புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டுத்துறையில் விருட்சமாக இருந்தமைக்கு பிரிதொரு காரணம் 1997ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்ட 17 விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலைகளில் (Sports School) தமிழ்மொழி மூலப் பாடசாலையாக புனித சூசையப்பர் கல்லூரி அங்கீகாரம் பெற்றமையாகும். அக்காலத்தில் அதிபராக இருந்த மதிப்பிற்குரிய திரு.கைடி பொன்கலன் அவர்களினதும் பிரதி அதிபர் வண.அருட்சகோதரர் ஏ.சூசைதாசனினதும் இணைந்த முயற்சியால் 1997.05.14ம் திகதி புனித சூசையப்பர் கல்லூரிக்கு கிடைத்த பெரும் பொக்கிஷம் இந்த விளையாட்டுப் பயிற்சிப்பாடசாலை சூசையப்பர் கல்லூரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக இருந்த போது வண.அருட்சகோதரர் ஏ.சூசைதான் அவர்களாலே மேற்கொள்ளப்பட்டது. இங்கு சூசைதாசனால் வளர்க்கப்பட்ட மாணவர்களால் கல்லூரியின் விளையாட்டுத்துறை வெற்றியின் உச்சத்தை தொட்டதென்றால் யாராலும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

திரு.கைடி பொன்கலன் அதிபரினது ஓய்வின் பின்னால் கல்லூரியின் அதிபராக 1997.08.16ம் திகதி வண.அருட்சகோதரர் ஏ.சூசைதாசன் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார். இக்காலத்தில் கல்லூரி கல்வித்துறை, விளையாட்டுத்துறை, ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் (நாடகம், வாத்தியக்குழு, சாரணியம், புனித யோவான்படை) தனது திறமையை சர்வதேச மட்டத்தில் வெளிக்காட்டியது இவரது நிர்வாகத் திறமையும், தலைமைத்துவ பண்பும், அர்ப்பணிப்புச் செயற்பாடுகளும் கல்லூரி வளர்ச்சிக்கு உயிரூட்டுவதாகவே அமைந்தன.

கல்வித்துறை வளர்ச்சிக்கு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை போன்றவற்றில் மாணவரின் பெறுபேறுகள் சான்றாகவுள்ளன. அக்காலத்தில் கல்லூரியின் Band வாத்தியக்குழு திருமலை மண்ணில் மார்பு தட்டி கல்லூரியின் பெயர் சொல்லும் அளவுக்கு பெருமை சேர்த்திருந்தது. கல்லூரி சாரணர் குழுவில் இடம்பெற்ற மாணவர்கள் உயர் அடைவைப்பெற்றதும், சாரணியத்தின் உயர் விருதாகிய ஜனாதிபதி விருது பெற்றுக்கொண்டதும் வண.அருட்சகோதரர் அதிபராக இருந்த போதும் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமல்லாது புனித ஜோன் அம்ர்லன்ஸ் படையணி முதல் முதலாக திருக்கோணமலை மாவட்டத்தில் சூசையப்பர் கல்லூரியிலே 1997ம் ஆண்டு 12ம் மாதம் 3 திகதி ஆரம்பிக்கப்பட்டது. இப்படையணியின் வளர்ச்சியிலும் இவரது பங்களிப்பு காணப்பட்டமைக்கு சான்றாக திருமலையின் 1வது புனித ஜோன் அம்புலன்ஸ் மாவட்ட குழு தலைவராக வண.அருட்சகோதரர் சூசைதாசன் இருந்தார் என்பதே ஆகும்.

இவர் அதிபராக இருந்த போது கல்லூரி உதைபந்தாட்க் குழுக்கள் ஒவ்வொரு வருடமும் தனது தேசிய ரீதியிலான திறமையை வெளிக்காட்டியது. மைலோ கிண்ணம், டொன் போல் ஞாபகர்த்தக் கிண்ணம், அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட கிண்ணம் போன்ற பல போட்டிகளில் தேசிய ரீதியில் தங்கப்பதக்கம் பெற்றுக்கொண்டது. இதற்கு உதைப்பந்தாட்டத்தில் இவர் காட்டிய இடுபாடே காரணமாக அமைந்தது.

எந்த வயதுப்பிரிவினருக்கு எங்கு போட்டி நடந்தாலும் நடக்கும் இடம்மெல்லாம் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் தனது வருகையை வீரர்களுக்கு உறுதிசெய்து கொள்வார். இவரது பார்வையும், கம்பீரமான தொணியுமே வீரர்களின் பல வெற்றியில் பங்களிப்புச் செய்தது. இக்காலத்திலே உதைபந்தாட்டத்தில் புனித சூசையப்பர் கல்லூரி படைத்திராத பல வெற்றி பதிவுகளை பதித்துக் கொண்டது. அதுமட்டுல்லாது மெய்வல்லுனர் விளையாட்டிலும் தேசிய ரீதியில் சாதனை சமப்படுத்தப்பட்டதும், சாதனை முறியடிப்புச் செய்யப்பட்டதும் என பதிவுகள் இடம்பெற்றன.

அமரர்.திரு.கைடி பொன்கலன் அதிபரினது காலத்திற்குப் பின்னர் அமரர்.வண.அருட்சகோதரர் சூசைதாசன் அவர்கள் நாடகத் துறையிலும் காட்டிய அக்கறை வீண்போகவில்லை. நாடகத்துறையும் பல தேசிய ரீதியலான படைப்புக்களைப் பெற்றன. சூசையப்பர் கல்லூரி நாடகத்துறை மாணவர்கள் தமிழ்மொழி, ஆங்கிலமொழி என இரண்டிலும் தேசிய ரீதியான வெற்றிவாகை சூடி திறமையை வெளிக்காட்டினார் இன்று திருமலை மண்ணில் நாடகத்துறைக்கு பெயர் சொல்லப்படுவது கல்லூரி மாணவர்கள் என்றால் அது மிகையாகாது.

சூசைதாசனது காலத்தில் கல்லூரியின் வளர்ச்சிப் படிகளில் அதிபருக்கு ஆதாரமாக விளங்கிய கல்லூரியின் சகல ஆசிரியர்களையும், விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக இருந்த வண.அருட்சகோதரர் ஏ.கிறிஸ்துராஜன் அவர்களையும் நாடகத்துறைக்கு பொறுப்பாக இருந்த அமரர்.திருமதி.ராணி ஜெகசோதி அவர்களையும், கல்லூரிச்சமூகம் என்றும் மறந்துவிடமுடியாது.

என்னையும் ஓர் ஆசனாக்கிய எனது அதிபர் வண.அருட்சகோதரர் சூசைதானின் வெற்றியின் தொடர்கள் இக்கல்லூரியில் தொடரவேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஒழுக்க விழுமியத்தில் சமயக் கல்வியின் காத்திரமான பங்கு

க.விக்னராஜா
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம் - கி.மா

சமயம் என்றால் நெறி, மனிதனை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுவனவே சமயங்கள். மனித வாழ்வு மேம்பாடானது எனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமியங்கள் எனப்படுகின்றன. அவற்றுள் தலையாயது ஒழுக்கம், உயிரற்ற உடல் அடக்கம் செய்யத் தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும் உற்ற உறவினரைக்கூட வெறுக்கவைக்கும். அது போல, ஒழுக்கத்தைப் பின்பற்றத் தவறும் ஒருவரை உலகமே வெறுத்து ஒதுக்கிடும்.

மாணவர்கள் ஒழுக்கசீலர்களாக வளர்க்கப்படுவதனை உயர் நோக்கமாகக் கொண்டே பாடசாலைக் கல்வி வடிவமைக்கப்பட்டுள்ளது. விசேடமாக சமயக்கல்வி மாணவர்களது ஒழுக்கம், நன்னடத்தை, நல்மனப்பாங்கு என்பவற்றை வளர்ப்பதனையே பெரு நோக்கமாகக் கொண்டது. கல்வி பயிலும் மாணவப் பருவம், மனித வாழ்விற்கு அத்திவாரமாய் அமையும் பெறுமதி மிக்க காலமாகும். அக்காலத்தில் வாழ்விற்கு உயிரான ஒழுக்கத்தை வளர்க்கப் பயன்படுத்துவது மிக மிக அவசியமானதாகும். மாணவரின் எதிர்காலத்தை, எதிர்கால சந்ததியை கருத்தில் கொண்டு ஒழுக்கத்தினை வளர்தெடுக்க வேண்டியது மாணவ சமூகத்துடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரதும் கட்டாயக் கடமையாகும்.

தினந்தோறும் பாடசாலைகளிலும், வீடுகளிலும் செய்யவேண்டிய நல்ல கருமங்கள் பல உள, உள்ளத்தில் அன்பு, கடவுளை வழிபடுதல், பெற்றோரைப் போற்றுதல், குருவை மதித்தல், வணங்குதல், பெரியோரை மதித்தல், உண்மை பேசுதல், உயிர்களுக்கு இரங்குதல், எல்லோருடனும் இணங்கி வாழ்தல், சகிப்புத் தன்மை, சமூகசேவைகளில் ஈடுபடுதல் போன்றவற்றை அறங்களாக போற்றி வாழ சமயங்கள் வழிகாட்டுகின்றன. மனித விழுமியங்களுள் முதன்மையானதும், அடிப்படையானதும் அன்பே ஆகும். அன்பே உயர்வானது. அன்பே உயிரானது. அன்பே ஆக்கம் தருவது. இவ்வாறாக அன்பை முதன்மைப் படுத்துவனவே சமயங்கள். "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என தாயுமானவர் குறிப்பிடுவதும் இதனையே. அன்பில்லாதவருக்கு உள்ள உடல் உயிரற்ற, என்பினை தோலால் போர்த்த உடல் என சமயங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன.

அறக் கூடமாகத் திகழும் ஆலய வழிபாட்டின் மூலம் அன்னதானம், ஏழைகளுக்கு உதவுதல் போன்ற தான தருமங்கள், தவம், பஞ்சமா பாதகங்களான பொய், கொலை, களவு, கள், காமம் ஆகியவற்றை தவிர்த்தல் போன்ற இன்னோரன்ன விழுமியங்களை வளர்க்க சமயக் கல்வி வழிகாட்டுகின்றது. தாய் தந்தையரை கண் கண்ட தெய்வங்களாக போற்றி ஒழுகுவதும், குருவைப் போற்றி நடப்பதும் தெய்வத்தை வணங்குவதற்கு ஒப்பானதாக எடுத்துக் காட்டுகிறது. இதனையே "மாதா பிதா குரு தெய்வம் அவர் மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்" எனும் தொடர் எடுத்துக்காட்டுகிறது. கோபம், அகந்தை என்பன ஒருவனிடமிருந்து அகற்றப்படவேண்டும். இன்றேல் அது அழிவைத் தரும் என்பது பல வரலாற்றுக் கதைகள் மூலமாக வலியுறுத்தப்படுகிறது. அகந்தையால் அழிவைத் தேடிய சூரபன்மன் முதலான அசுரர்களின் வரலாற்றுக் கதைகள் இதனை தெளிவாக எடுத்து விளக்குகின்றன.

தாய்ப்பன்றியாக மாறி இறைவன் பன்றிக் குட்டிகளின் பசி தீர்த்தமை, வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலார் கதை போன்ற வரலாற்றுக் கதைகள் உயிர்களுக்கு இரங்குதல் எனும் பண்பினை வளப்பனவாக அமைகின்றன. நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாறுகள் எல்லோருடனும் இணங்கி வாழ்தல், சகிப்புத் தன்மை, சமூகசேவைகளில் ஈடுபடுதல் போன்றவற்றை மாணவர் உள்ளங்களில் வளர்ப்பனவாக அமைகின்றன. சமயங்கள் காட்டும் இதுபோன்ற எண்ணற்ற விழுமியப் பண்புகளை உரிய முறையில் வளர்த்தெடுத்து உன்னதமான எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க அனைத்துத் தரப்பினரும் உழைக்க வேண்டும் எனவும் மாணவப்பருவத்தில் இருந்தே சமயக்கல்வியினை வளர்த்தெடுக்க வேண்டும் அதுவே எமது காத்திரமான பணியுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திய இரத்தம் வித்தானது.

கிறிஸ்துவின் அன்பில்
ஆசிரியர்
திருமதி.M.சுரேந்தினி
கிறிஸ்தவ மன்றம்

பல மனிதர்கள் வரலாற்றில் உயர்ந்துள்ளனர். ஆனால் ஒரு சில மனிதர்களால் வரலாறு உயர்ந்துள்ளது. பல நிகழ்வுகள் வரலாற்றில் பிறந்திருக்கின்றன ஆனால் ஒரு சில நிகழ்வுகளால் வரலாறு பிறந்திருக்கின்றது. ஒருசில நிகழ்வுகள் ஒருசில மனிதரை மாற்றியிருக்கின்றன. ஆனால் ஒரு நிகழ்வு ஒட்டு மொத்த மனிதனையே மாற்றியிருக்கின்றது. இப்பேர்பட்ட நிகழ்வுகளில் தலையானதாக விளங்குவது இயேசுவின் மரணமும் உயிர்ப்பும்.

மனிதன் மண்ணிலே பிறக்கின்றான்
பிறந்தவன் வாழத்துடிக்கின்றான்
வாழத்துடிக்கின்றவன் சாக மறுக்கின்றான்
இறைவனும் மனிதனாக மண்ணிலே பிறந்தார்
பிறந்தவர் வாழமறுக்கின்றார்
வாழ மறுத்தவர் சாகத்துடிக்கின்றார்
இறப்பதற்கென்றே பிறந்தவர் இறைமகன் இயேசு மட்டுமே

இளமையின் அர்த்தத்தை புரிந்துவாழ்கின்ற வயதிலே சிலுவை வாழ்வை தேர்ந்தெடுத்தார். இந்த சிலுவையில் மனது வைத்தால் சிந்தை தெளிவாகும் சிந்தையில் அமைதி வந்தால் வந்தது சுகமாகும்.

யூதனுக்கு தடைக்கல்லாகவும்
கிரேக்கனுக்கு அவமானத்தின் சின்னமாகவும்
உயர்ந்தோருக்கு இழிவின் அடையாளமாகவும்
திகழ்ந்த சிலுவையதை
மீட்பின் சின்னமாக மாற்றினார் மாபரன் இயேசு

கலிலிலேயாவில் ஆரம்பித்த இயேசுவின் பயணம் அது ஜெருசலேமில் நிறைவுபெற்றது. இப்பயணமதில் குருடர் பார்வை பெற்றனர், முடவர் நடந்தனர், தொழுநோயாளர் குணமடைந்தார், செவிடர் கேள்விபெற்றனர், அசுத்தாவிகள் விரட்டபட்டன, இத்தனையும் செய்த வரலாற்று வீரனுக்கு கிடைத்த உயர்ந்த பரிசு சிலுவை மரணமாகும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்துமுடிந்தாலும் உலகில் உள்ள கிறிஸ்தவர்கள் அதை எண்ணி வாழ்க்கின்றார்கள். அன்று வித்தாக்கப்பட்ட இயேசுவின் இரத்தம் அழியாமல், மாறாமல், அசையாமல் ஆழப்படுத்தப்பட வேண்டியது. கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் சமய மன்றங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும் சமூகமும்

திருமதி. திருச்செல்வி சுதாகரன்

பாடசாலை ஓர் சமூக நிறுவனமாகும். தொழிற்சாலைகள் அமைக்கப்படும் போது சனநெரிசல் இல்லாத இடமாகத் தெரிந்தெடுத்து அமைப்பார்கள். ஆனால் பாடசாலைகள் எப்போதும் சனநடமாட்டம் உள்ள இடத்திலேயே அமைக்கப்படுகின்றது. அல்லது பாடசாலையை அண்டியதாக மக்கள் தமது வாழிடங்களை அமைத்துக் கொள்கிறார்கள்.

ஒரு பாடசாலையானது அதிபர், ஆசிரியர், மாணவர்களை மட்டும் கொண்டு இயங்குவதில்லை. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் பங்கெடுக்கும் சங்கங்களாகும். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலே அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோர்கள் அடங்குகின்றனர். பெற்றோர் நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோரின் பங்கின்றி பாடசாலை மேம்பாடடைய முடியாது. பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்திலே அவர்களின் கடமைகள் குறிப்பிடத்தக்க அளவாகக் காணப்படுகிறது. எனவே பெற்றோரின் தரம் ஒரு பாடசாலையின் வெளியீட்டில் செல்வாக்குச் செலுத்துவதாக உள்ளது. பெற்றோர் தரம் வாய்ந்த சிந்தனைத் திறன் உள்ளவர்களாக இருக்கும் போது குறித்த பாடசாலையின் 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு க.பொ.த.(சா/த), க.பொ.த.(உ/த), பரீட்சைப் பெறுபேறுகள் உயர்மட்டத்தை அடையக்கூடியனவாக இருக்கும். மக்கள் மத்தியில் இவையே ஒரு பாடசாலையின் கல்விக் குறிகாட்டிகளாகக் கணிக்கப்படுகின்றன. இவற்றை மட்டும் வைத்தே அநேகமானவர்கள் பாடசாலையின் தரத்தைத் தீர்மானிக்கிறார்கள்.

ஒரு மாணவன் ஏறழத்தாழ நாளொன்றுக்குப் பாடசாலையிலே 24 மணித்தியாலத்தில் ¼ பங்கு நேரத்தையே செலவிடுகிறான். மீதி ¾ பங்கு நேரமும் வீட்டிலும் வெளியிலும் செலவிடுகின்றான். பாடசாலையிலே அன்றாடம் கற்றவற்றை வீட்டிலே அவன் மீட்க வேண்டும். அவ்வாறு வீட்டிலே மீளக் கற்பதற்கு அவனுக்கு ஒரு ஊக்கல் தேவைப்படும். வீட்டுச் சூழல் கற்றலுக்கு ஏற்ற சூழல் இல்லாத போது இவர்கள் எவ்வாறு கற்க ஊக்கப்படுத்தப்படுவார்கள். பிள்ளைகள் உடல், உள ஆரோக்கியத்துடன் இருக்கும் போது தான் அவர்கள் முழுமையான கற்றல் நடவடிக்கையிலே ஈடுபட முடியும். குடும்பம் என்ற அமைப்பே பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்தில் முக்கிய செல்வாக்குச் செலுத்தும் காரணியாகும். பெற்றோர் பொருளாதார வசதியுடையவர்களாகவும் கற்றவர்களாகவும் உயர் மனப்பாங்கு, தன்னம்பிக்கை என்பவற்றைத் தரும் உயர் தொழில்களில் உள்ளோராகவும் உள்ள போது அவர்களது பிள்ளைகள் பாதுகாப்பான சூழலையும் சிறந்த கல்வியையும் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

புனித சூசையப்பர் கல்லூரியானது எல்லா மாணவர்களையும் அவர்களது குடும்ப பொருளாதார, தரம் ஆகியவற்றை கருத்தில் எடுக்காது வரவேற்று அவர்களுக்கு அனுமதியை வழங்கும் வந்தாரை வரவேற்கும் ஒரு பாடசாலையாகத் திகழ்கிறது. இங்கே பொதுவாக அருட்தந்தையர்களே அதிபர்களாகக் கடமையாற்றுகிறார்கள் எனவே அவர்கள் தம் இரக்க சிந்தனை காரணமாக அனைவருக்கும் கல்வி என்ற எண்ணக்கருவை நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயற்படுகிறார்கள். திருகோணமலை நகரத்திலுள்ள தேசிய பாடசாலையான சூசையப்பர் கல்லூரியின் பெற்றோர் சமூகத்தை திருகோணமலை நகரிலுள்ள ஏனைய தேசிய பாடசாலைகளின் பெற்றோர் சமூகத்துடன் ஒப்பிடும் போது சூசையப்பர் கல்லூரிப் பெற்றோர் சமூகம் பெருமளவில் பொருளாதாரத்திலோ கல்வித்தரத்திலோ சற்றுக் குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

மேற்கூறிய வகையான குடும்ப அமைப்புக்களால் மாணவர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

இவ்வகையான பெற்றோர்கள் காணப்படும் போது பெற்றோர் கூட்டங்களிற்கு அவர்கள் சமூகமளிக்காதநிலை காணப்படுகின்றது. இதனால் மாணவர்களின் வரவு ஒழுங்கீனம், கற்றலின் பின்னடைவு ஆகியவை பெற்றோர்களுக்குத் தெரியவராமலே போகிறது. எத்தனை பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பாடசாலை முடிந்து வந்ததும் இன்று பாடசாலையில் என்ன நடந்தது? எல்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களும் நடந்தனவா? என்று கேட்கிறார்கள். அவர்களது கொப்பிகளைப் பரிசீலனை செய்கிறார்கள். இவர்கள் தமது பிள்ளைகளுக்காக நேரம் செலவு செய்வதில்லை. பிள்ளைகளுடன் அன்பாக உரையாடுவதில்லை. பிள்ளைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடுவதில்லை. எனவே இவ்வாறான சமூக அமைப்புக்கள் பாடசாலையின் பொதுப்பரீட்சை அடைவு மட்டத்தில் பெரிதும் தாக்கம் செலுத்துகிறது.

ஆனால் அடைவுமட்ட உயர்ச்சி மட்டும் தான் ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்குக் காரணம் என்று கூற முடியாது. ஒரு பாடசாலையிலிருந்து க.பொ.த (உ/த) இலே 10 மாணவர்கள் merit இல் பல்கலைக்கழகத்திற்கான அனுமதியைப் பெற்றுள்ளார்கள் என்றால் சமூகம் உடனே அதை சிறந்த பாடசாலையாக ஆக்கிவிடுகிறது. எத்தனை மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள் என்ன வீதம் சித்தியடைந்துள்ளார்கள் எத்தனை வீதமான மாணவர்கள் சித்தியடையத் தவறியுள்ளனர். என்பதைப் பற்றியெல்லாம் மக்கள் சிந்திப்பதில்லை. ஒரு பாடசாலையிலே கூடிய வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். ஆனால் உயர் பெறுபேறுகள் குறைவு என்றால் அதை சமூகம் ஒரு நல்ல வெளியீடாகக் கருதுவதில்லை. அத்துடன் அவ்வாறான முடிவுகள் சமூகத்தைச் சென்றடைவதுமில்லை. மருத்துவம் பொறியியல் போன்ற உயர் கற்கை நெறிகளைக் கற்கும் மாணவர்களையே சமூகம் உயர்வாக நினைக்கிறது. சந்தோசமான வாழ்க்கையை அல்ல. உண்மையில் சமநிலை ஆளுமையுடைய கற்றல் சமூகத்தை உருவாக்குவதே பாடசாலையின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

அந்த வகையில் சூசையப்பர் கல்லூரி ஆசிரியர்கள் இடம்சார் பெற்றோர்களாகத் தொழிற்பட்டு மாணவர்களின் குடும்ப சூழலினால் ஏற்படும் மனக்குறைகளை ஓரளவாவது நீக்கி "கல்லூரிக் குடும்பம்" "Josephian Family" என்ற எண்ணக்கருவை அழுத்தமுடையதாக்கி பல்வேறுபட்ட இணைப்பாட விதானங்களினூடாகவும் விளையாட்டு, Band, தலைமைத்துவப் பயிற்சிகள், போட்டிகளினூடாகவும் சமநிலை ஆளுமையுடைய மணவர்களை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அத்துடன் கல்லூரியானது வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு வறிய மாணவர்கள் கல்வியில் உயர்வு பெற உதவியைப் பெற்றுக் கொடுக்கிறது. அண்மைக் காலத்தில் O/L பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கும் விசேட செயற்றிட்டத்திலே மாலைநேர வகுப்புக்களில் மாணவர்களின் வரவை 100% மாக்குவதற்கு அவர்களுக்கு உணவு கொடுத்து வகுப்புக்கள் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அத்துடன் சிறந்த ஒரு ஆலோசனையும் வழிகாட்டலும் எனும் சேவை நடைபெற்றமையும் மேலே குறிப்பிட்ட வகையான பெற்றோரைக் கொண்ட மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இவ்வாறான சேவைகளினால் மாணவர்கள் பெரிதளவில் பரீட்சை அடைவு மட்டத்தில் உயர் மட்டத்தை அடையாவிட்டாலும் கூட நல்ல ஒரு வெளியீட்டைக் (Out Come) காட்டுவதை நாம் அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்து நல்ல ஒரு பிரஜையாக மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை நடாத்துவதிலிருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. கல்லூரியின் Out Put உயர்ந்தளவு இல்லாத போதும் Outcome குறிப்பிடத்தக்கதாக உள்ளது ஓர் சிறப்பம்சமாகும்.

எனவே பாடசாலை மேம்பாட்டிற்கு சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் குடும்பத்தின் சமூகப்பணிகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ உளநலமும் அதில் ஆசிரியர்களின் பங்கும்.

Dr.T.அரிகரன்
உளநலப் பிரிவு
பொதுவைத்தியசாலை
திருக்கோணமலை.

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் உடற்சுகாதாரமும், உளச்சுகாதாரமும் இன்றியமையாதது. இவ் உடல் உள சுகாதாரம் சிறப்பாக உள்ள மனிதனே பூரண மனிதனாகப் பார்க்கப்படுகின்றான். உடற் சுகாதாரத்தை பேணுவது எந்தளவிற்கு இன்றியமையாததோ அதேபோல் உளநலத்தை பேணுவதும் அதினிலும் இன்றியமையாததே!

சிறு வயதிலிருந்தே பேணப்படும் சிறப்பான உளச்சுகாதாரவிருத்தி ஒருவனது வாழ்க்கையில் சிறப்பான உளநலத்தில்றகு வித்திடுகின்றது. எனவே சிறு வயதில் உளநல விருத்தியின் மீது கூடிய கவனம் செலுத்துவது மிகவும் சாலச் சிறந்தது. ஓர் மனிதனின் பாடசாலைப் பருவம் அவனது உளநல விருத்தியின் மீது முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றது.

இன்றைய இவ் விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் ஒவ்வொரு மனிதனும் இயந்திர வாழ்க்கையின் பிடியில் ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கின்றான். தனது உடல், உள, நலத்தை மறந்து தன்னியக்க இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருக்கின்றான். இதனால் உளநலமானது மிகவும் குன்றிக் கொண்டு செல்வதோடு உலகில் உளநல நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து கொண்டு செல்கின்றது. 2020ஆம் ஆண்டளவில் மன அழுத்த நோய் (Depressive disorder) உலகளவில் இரண்டாவது இடத்தில் காணப்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நவீன இலத்திரனியல் உலகு மனிதனின் நடத்தையிலும் எண்ணங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு வருகின்றது. மாணவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. சில மாணவர்களின் பாதை தடம்புரண்டு செல்வதற்கு இது வழி கோலுகிறது.

இக் காலகட்டத்தில் மாணவப் பருவத்தினரிடையே குடிப்பழக்கத்திற்கு அடிமையாதல். போதை வஸ்துப் பாவனை போன்ற சமூக பிறழ்வுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் இவர்களுக்கு நீண்ட கால மன நோய்ப் பிரச்சினைகள் ஏற்படும் என்பதை இவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இதனால் இவர்கள் பிற்காலத்தில் நீண்டகால மனநோய் மருந்துகளில் தங்கி வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படலாம். பெற்றோரின் ஒழுங்கான பராமரிப்பும் ஆசிரியர்களின் பூரண கவனிப்புகளும் இவர்களின் சிறந்த உளநல விருத்தியில் பாரிய பங்களிப்பினை ஏற்படுத்துகின்றது. மாணவர்களின் சாதாரண உள விருத்திக்கான தேவைகளாக உணவு, உடை இருப்பிடம், அன்பு, ஆதரவு உணர்வை பகிர்ந்து கொள்ளல், கவனிப்பு, கற்றலுக்கான வாய்புக்கள் என்பன அமைகின்றது. இவை கேள்விக்குறியாகும் போது இவர்களில் உளவிருத்தி தடைப்படுகின்றது. இதனால் உளநலம் பாதிப்படைவதோடு அவை சில குணங்குறிகளாக நாளடைவில் வெளிப்படுகின்றது.

இவ்வாறான மாணவர்கள் பிரயோகிக்கும் சொற்பதங்கள், வெளிப்படுத்தும் நடத்தைகள் என்பவற்றை கேட்டும் அவதானிப்பதன் மூலமும் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு கொள்ளலாம். அவர்களின் பாடசாலை கற்றற் செய்பாடுகளும் மிக மந்த நிலையில் இருப்பதை அவதானிக்கமுடியும். இது ஒரு முதல்நிலை குறிக்காட்டியாகும். உதாரணமாக மற்றைய பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக சேர்ந்து பழகிய மாணவன் கற்றல் செயற்பாட்டில் விளங்கிய மாணவன் திடீரென செயற்றிடன் குறைந்து செல்லல் போன்றன ஏற்படலாம்.

இவ்வாறான பிரச்சினைகள் உள்ள மாணவர்களை ஆசிரியர்கள் இனங்கண்டு அவர்களின் பெற்றோருடன் கலந்தாலோசித்து பிரச்சினைகளுக்கான மூல காரணங்களை கண்டறிவதன் மூலம் மாணவர்களுக்கு உதவலாம். இதனால் அவர்களின் உளவிருத்தி மேன்மையடையும் அத்துடன் தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் வைத்திய ஆலோசனை பெறுவதும் நன்று. சில மாணவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை குறைவு, பசியின்மை போன்ற தொடர்ச்சியாக காணப்படுவதோடு தனிமையில் இருக்கும் போது யாரும் கதைப்பது போல் உணருதல் செய்கையில் மூர்க்கமான வெளிப்பாடு காணப்படின் இது பாரிய மனநோய் பிரச்சினைக்கான அறிகுறியாக காணப்படலாம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் வைத்திய ஆலோசனை பெறுவது இன்றியமையாதது. சிறுவயதினர் இடையே சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஏற்படுவது நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. உடல்ரீதியாக காயப்படுத்தல், தகுந்த முறையில் உணவு அளிக்கத் தவறுதல், கைவிடுதல் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல் போன்றன அவர்களின் உடல், உள பாதிப்பை ஏற்படுத்தும். ஆசிரியர்கள் இவ்வாறான வயதினரிடையே உன்னிப்பான கவனிப்பும் அக்கறையும் செலுத்துதல் அவசியமாகிறது.

சிறுவயதினில் அடையாளம் காணப்பட வேண்டிய பிரச்சினைகளாக ஆடிசம் (Autism) அதீத சுறுசுறுப்பு (Attention deficit hyperacidity disorder) போன்ற உளநல பிரச்சினைகள் காணப்படுகின்றது. இவ்வாறான மிக விரைவாக கண்டுபிடித்தல் முக்கியமானது பிறப்பில் இருந்து பிள்ளைகள் வளரும் வரை அவர்களது சாதாரண இயக்க நுண்ணறிவு விருத்திகள் குன்றிக்காணப்படுவதுடன் பிள்ளை தன் வயத்திற்கு ஏற்றது போல் அல்லாமல் அனைத்து விருத்தியும் சற்றுக் குறைந்த நிலையில் காணப்படும். ஆசிரியர்களும் பெற்றோரும் அவ் வயதிலுள்ள மற்றைய பிள்ளைகளின் செயற்பாட்டுடன் ஒப்பிட்டு அவர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். ஆடிசம் (Autism) இனால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் கதைத்தல் குறைவு, ஒரே வகையான சந்தத்தில் கதைப்பது போன்றவற்றுடன் பெரும்பாலும் வசனங்களாக அல்லாமல் சொற்களில் மட்டுமே அவர்களின் உரையாடல் அமையும். மற்றைய தனது வயதுடைய பிள்ளைகளுடன் சேர்ந்து கதைப்பது, விளையாடுவது, பழகுவது போன்றவை குறைவாக இருக்கும். சில குறிப்பிட்ட செயல்களை மட்டுமே அடிக்கடி செய்வார்கள் மற்றைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதை விட குறிப்பிட்ட விளையாட்டு பொருட்களில் அக்கறையும் விருப்பமும் செலுத்தி தொடர்ச்சியாக அவற்றுடன் விளையாடுவார்கள். பாடசாலை செயற்பாடுகள் மிகக் குறைந்து காணப்படும். இவ்வாறான குணங்குறிகள் இருப்பவர்களை உடனடியாக இனங்காண்பதால் அவர்களுக்கு விசேட சிகிட்சைகளை ஆரம்பத்திலேயே வழங்கள் கூடியதாக இருக்கும். ஐசாக் நியூட்டன், அல்பேட் ஐங்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் கூட இவ் (Autism) ஆடிசம் நோயால் பாதிக்கப்பட்டவர்களே...

அதீத சுறுசுறுப்பு (Attention deficit hyperactivity disorder) ஆனது சிறுவயதில் அடையாளம் காணப்பட வேண்டிய மிக முக்கிய உளநலம் சார்ந்த பிரச்சினையாகும். இது ஏற்படுவதில் பரம்பரை மற்றும் சூழல் காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்தோடு பிறப்பின் போது ஏற்படும் மூளைப்பாதிப்புகள், நோய்கள் என்பவையும் இதற்கு ஏதுவாக அமைகின்றது. இவ்வாறானவர்கள் ஒரு விடயத்தில் கவனம் செலுத்துவது (Poor concentration) மிகக் கடினமாக இருக்கும். கட்டுப்படுத்த முடியாத மூர்க்கத்தனமான செயற்பாடுகள் முக்கியமாக காணப்படும். மற்றவர்களுக்கு அடித்தல், வீட்டுப் பொருட்களை உடைத்தல் போன்றனவும் காணப்படும். இவர்கள் குறிப்பாக ஒரு இடத்தில் 5 நிமிடமேனும் கூட அமைதியாக இருக்கமாட்டார்கள் பாடசாலையில் கற்றல் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்த முடியாமல் இருப்பார்கள்.

இவ்வாறான மாணவர்கள் பாடசாலை ஆசிரியர்களால் கட்டுப்படுத்த முடியாத மூர்க்கத்தனமான குழப்படிகளால் பல முறை பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பார்கள். இவ்வாறானவர்களுக்கு விசேட சிகிச்சை முறை மற்றும் மருந்துப் பாவனைக்கான தெவையும் ஏற்படுகின்றது. ஆகவே இவ்வாறான பிள்ளைகளை ஆரம்பத்திலேயே இனங்காண்பது மிக முக்கியமானது. இதில் ஆசிரியர்களின் பங்கு மிக இன்றியமையாதது. போதிய சிகிச்சை முறைகளை உடனடியாக தொடங்குவதன் மூலம் சிறிது சிறிதாக ஓரளவு சாதாரண வாழ்க்கை முறையில் வாழ ஊன்றுகோலாக அமைக்கின்றது. எனவே பாடசாலை பருவ உளநலம் பேணுதல் என்பது எதிர்கால சந்ததி சிறப்பாக அமைய வித்திடும் என்பதில் ஐயமில்லை. இதில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பே ஊன்றுகோலாக அமைகின்றது.

"நல்லதோர் வீணை செய்தே, அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?"
"வல்லமை தாராயே இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நூலகமும் மாணவர்களது வாசிப்புப்பழக்கத்தில் அதன் பங்களிப்பும்.

திருமதி.விஜியலக்சுமி சுதாகரன்
சிரேஷ்ட உதவி நூலகர்
திருக்கோணமலை வளாகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

கல்விக்கு பயன் அறிவு, அறிவுக்கு பயன் ஒழுக்கம்" என்பது நாவலர் பெருமானின் கருத்தாகும். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது முன்னோர்களது அமுத வாக்காகும். அறிவின்றி மனித வளர்ச்சி இருக்காது. மனிதரின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, ஒழுக்க, ஆன்மீக பண்பாட்டு வளர்ச்சிக்கு அறிவு வளர்ச்சியே மூலகாரணமாகும். அறிவினுள் திறன்கள், மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பன அடங்கும். மனிதனின் அறிவு ஆற்றலை விருத்தி செய்ய வாசிப்பு இன்றியமையாதது ஆகும். வாசிப்பானது நமது பிரச்சனைகளை எதிர்கொள்ள உதவுவதுடன் மட்டுமல்லாது, அவற்றை தீர்ப்பதற்கான விவேகத்தையும், புரிந்துகொள்ளுதலையும் நமக்கு வழங்குகிறது. கல்வி என்பது அலங்காரப் பொருளல்ல. அது வாழ்க்கையின் உயிர்நாடி. வள்ளுவர் கல்வியறிவினை "தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு." என்றார். தொடர்ந்து கற்றாலே அறிவு மேம்படும். நல்லவற்றைக் கற்று மக்கள் நலம் பெற வேண்டும். கல்வியின் நோக்கம் சமநிலையும் ஆளுமையும் கொண்ட நற்பண்புள்ள சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக இயந்திரமயமானதாக, பெறுபேறுகளையும் பட்டங்களையும் கொண்டதாக இருத்தல் கூடாது. உள்ளதை உள்ளபடி உணரும் பரந்துப்பட்ட அறிவும், எந்நிலையிலும் எவருக்கும் அடிமைப்படாத உறுதிப்பாடும் கொண்டதாக இருத்தல் வேண்டும். வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வாழ்விப்பதற்கும் கல்வி உதவ வேண்டும். இப்படியான சிறந்த கல்வி நிலையை எட்டுவதற்கு வெறும் பாட புத்தகங்கள் மட்டும் ஏற்புடையனவாகா. பாடப்புத்தகங்களோடு மடடும் உள்ள மாணவர்கள் கற்றோரால் வெறும் புத்தபகப் பூச்சி என்றே அறியப்படுவதைக் காணலாம். பாடப் பத்தகங்கள் பாட சம்பந்தமான அறிவை மாத்திரமே மாணவர்களிடம் கொடுக்கின்றது. பரந்துப்பட்ட கல்விப் பயன்பாடும், தெளிந்த சிந்தனையும் சமுதாய ஒருங்கிசைவும் மக்கள் நேர்த்தி கொண்ட அறிவும் பெறுவதற்கு மாணவர்களுக்கு வாசிப்பு மிகவும் அத்தியாவசியமானதாகும். வாசிப்பின் முக்கியத்துவத்தினையும் மகாத்மாகாந்தி அவர்கள் ஒரு கோடி ரூபா கிடைத்தால் எப்படி பயன்படுத்துவீர்கள் என்று கேட்டபோது. "ஒரு நூலகம் கட்டுவேன்" என பதிலளித்தார். வாசிப்பானது தனிமனித வளர்ச்சியுடன் சமுதாய வளர்ச்சியை ஏற்படுத்தி நாடு வளர்ச்சி அடைவதற்கு அடித்தளமாக அமைகின்றது.

கல்விசார் தேடலுக்கும் எல்லாவகையான இணைபாடவிதான செயற்பாட்டிற்கும் மாணவர்கள் தம்மைத் தயார்படுத்தவும் இவற்றிற்கு மேலதிகமாக பரந்துபட்ட அறிவு தேடலுக்கும் பாடசாலை நூலகத்தின் பங்கு அத்தியாவசியமாகவுள்ளது. மாணவர்களது தகவல் தேடலுக்குப் பொருத்தமான சேகரிப்புக்களை முறையாகவும் பூரணமாகவும் தன்னகத்தே பேணுவதற்கு இலங்கையில் தற்கால சூழ்நிலையில் பாடசாலை நூலகங்கள் தன்னை நிலைநிறுத்த தவறியுள்ளமை கண்கூடான நிதர்சனமாகும். இதற்கு அதிபரோ ஆசிரியரோ பொறுப்புக்கூறவேண்டியவர்களல்ல. அரசாங்கத்தின் உயர்மட்ட நிர்வாக குழுவினரால் நூலகத்தை வளப்படுத்துவதற்கான நிதி ஆளணி பௌதிகவளம் போன்றவை முறையாகத் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படவில்லை. பாடசாலை நேரசூசியில் வாரம் ஒரு பாடநேரம் நூலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தும் மாணவர்களை ஆசிரியர்கள் ஊக்குவித்து அனுப்பிவைக்காமைக்கு பாடவிதானத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்குகின்றமையே காரணமாகும். தற்போது பாடசாலைகளில் ஆகக்குறைந்தது தேர்ந்தெடுக்கப்பட்ட சஞ்சிகைகளையாவது பெற்றுக்கொடுப்பது மாணவர்களை நூலகம் நோக்கி நடைபயில வைப்பதற்கான முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியாகும். எனவே கல்வி நிர்வாகத்துறையினர் இதனை கருத்தில் கொண்டு அனைத்து பாடசாலைகளிலும் முதல் கட்டமாக அமுல்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

ஒரு பாடசாலை நூலகத்தின் முக்கிய கடமை மாணவர்களை வாசிக்கத் தூண்டுவதாகும். சமூகத்தில், நாட்டில், உலகத்தில் நடக்கும் பல்வேறுப்பட்ட செய்திகள், கருத்துக்கள், எண்ணங்கள் சம்பந்தமான சந்தேகங்களைப் போக்குவதும் விருப்புவெறுப்பின்றி மக்களுக்குச் சேவையாற்றும் நிலையங்கள் நூலகங்கள் ஆகும். நூலகங்கள் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்று புதுப்புது வெளியீடுகளைக் கொள்வனவு செய்ய வேண்டும். இதன் மூலமே புதுப்புதுத் தகவல்களை வாசகர்களுக்கு வழங்கி அவர்களின் அறிவுத் தேடலை பூர்த்தி செய்யக் கூடியதாக அமையும். வாசிப்பின் முக்கியத்துவத்தை உணரந்தே நெல்சன் மண்டேலா அவர்கள் வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதித்தால் போதும் என வாசிப்பின் அற்புதத்தினை சிறையில் இருந்து கொண்டே எமக்கு எடுத்தியம்பியுள்ளார். அத்துடன் தமிழக முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களும் விமானத்தில் பயணம் செய்யாமல் பம்பாய்குச் காரில் மூன்று நாள் பயணம் செய்தது ஏன்? என வினவிய போது இன்னும் பத்து புத்தகங்கள் வாசிக்க வேண்டியருந்தது என்று பதிலளித்தாராம். வாசிப்பே மனிதனை நல்வழிப்படுத்தி நல்லொழுக்கமுள்ள சமதாயத்தினை உருவாக்குகின்றது.

நூல் வாசப்பினை நீங்களும் அனுபவிக்க வேண்டுமானால் தினமும் புத்தகம் படிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். எழுதப்படும் படைப்புக்கள் எல்லாம் எல்லோராலும் வாசிக்கப்படுவதில்லை. நூலகங்கள் அவற்றை சேகரித்து அவ்வப்போது தேடி வருவோருக்கு சேவையாற்றுகின்றன. நூல்களை தேர்ந்தெடுப்பதே முக்கியமான விடயம். சில புத்தகங்கள் புண்படுத்தப்பட்டிருக்கும் மனதை ஆற்றுப்படுத்தும். சில புத்தகங்கள் அமைதியானவனையும் புரட்சியாளனாக மாற்றிவிடும். எண்ணங்களில் அற்புதங்களைக் காண வேண்டுமாயின் வாசிப்பை நேசிக்க வேண்டும். சிறந்த மனிதராக, நற்பிரஜையாக, சமூக ஆர்வலராக, ஒரு அற்புத மனிதராக மாற்றுகின்ற, ஆக்குகின்ற சக்தி வாசிப்புக்குண்டு. தன் வாழ்வை, சூழலை, சமூகத்தை, கலையை, அழகை, துயரை, மனங்களை நேசிக்கத் தெரிந்தவராக ஒருவரை வாசிப்பு மாற்றியமைக்கின்றது. ஒரு பேச்சாளனாக, அறிவிப்பாளராக, எழுத்தாளராக. பத்திரிக்கையாளராக, கவிஞராக, சமூகம் நேசிக்கின்ற ஒருவராக, மக்களால் கௌரவிக்கப்படுகின்ற ஒரு யதார்த்தபூர்வமான மனிதராக நம்மை நாம் காண வேண்டுமானால் வாசிப்பை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் பொது விடயங்கள், சமயம் சார்ந்தவை, பொருளியல் சார்ந்தவை, மொழி, கணிதம், தொழிநுட்பம், கலை, இலக்கியம், வரலாறு என பல்தேர்ந்த விடயமாக மாறும் போது எல்லோருடனும், எல்லா சந்தர்ப்பங்களிலும் எல்லா விடயங்களையும் தைரியமாகப் பகிர்ந்து கொள்கின்ற அறிவாற்றலும் திறமையும் நம்முள் வளர்கிறது.

நீண்ட வாசிப்பை உடையவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாகவும் மன அழுத்தம், இரத்த அழுத்தங்களிலிருந்து விடுபடுபவர்களாகவும், சிறந்த சிந்தனைவாதிகளாகவும், தெளிந்த மன நிலையுடையவர்களாகவும் காணப்படுவார்கள் என ஆய்வுகள் மூலம் அறியவருகின்றது. இப்பொழுதெல்லாம் நமது பிள்ளைகள், சிறுவர்கள், மாணவர்கள் பேச்சாற்றல் குறைந்தவர்களாகவும், சொல்வளம் அற்றவர்களாகவும் காணப்படுகிறார்கள். அதற்கு காரணம் தொலைக்காட்சி, வானொலி, கனணி விளையாட்டு போன்றவற்றால் பாடவிதானம் தவிர்ந்த பொழுதுபோக்கிற்கான வாசிப்பற்ற தன்மை அதிகரித்தமையேயாகும்.

வளர்ந்துவரும் சிறுவர்களை, மாணவர்களை சத்தமிட்டு வாசிக்கச்செய்யும் போது வார்த்தைகளை மொழியை சரளமாக உச்சரிக்கவும், அதன் மூலம் சிறந்த எதிர்காலம் உருவாகவும் வாய்ப்பு இருக்கிறது. வாசிப்பவனெல்லாம் சோம்பேறி என்ற முட்டாள் தனமான எண்ணமும் நாகரிகமற்ற செயல் எனும் எண்ணமும் இப்பொழுது மக்களிடையே காணப்படுகின்றது. உரக்க வாசிக்க வாசிக்க அவனுடைய மூளை சுறுசுறுப்படைகிறது என்பதை அவர்கள் அறிவதில்லை. அதே நேரம் புத்தகம் வாசிப்பவனுள் புத்துணர்வு ஏற்படுகிறது. அவனது சிந்தனா சக்தியும் ஒரு வட்டத்துக்குள் சுருங்காது, பகுத்தறிவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்துக் கொள்கிறான். வாசித்து அறிவை வளர்துக் கொள்ள எமக்கு பலதரப்பட்ட புத்தகங்களை கல்விமான்களும் புலவர்களும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவை திருக்குறள், நாலடியார், நாண்மணிகடிகை, தொல்காப்பியம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, இராமாயணம், மகாபாரதம், சீறாப்புராணம், சிலப்பதிகாரம், ஒளவையின் நீதி நூல்கள் ஏழு என்பன குறிப்பிடத்தக்கவை.

வாசிப்பின் சுவையை அதன் பயன் பெற்றவரகளே அறிவர். பெரியோர்கள் மாத்திரமின்றி நமது நாட்டில் வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தினர் படிப்படியாக வாசிப்பை மறக்கும் காலக்கட்டம் மறைமுகமாக உருவாகிறது. பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய பொழுதுகளிலும் வாசிப்பு வழங்கப்படல் வேண்டும். மனிதனின் சிந்தனா சக்தியின் எழுச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் வாசிப்பு இன்றியமையாதது. பாடசாலைகளில் மாணவர் கற்கவும், ஆசிரியர் கற்பிக்கவும் வாசிப்பு துணைபுரிகின்றது. இன்று பாலர் கல்வி, ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, முதியோர் கல்வி போன்றவற்றில் வாசிப்பு அடிநாதமாக அமைகிறது.

ஆளுமை மிக்க சமுதாயத்தின் பலமான பல்துறை சார்ந்த அறிவுகளைப் பெற்றுக்கொள்ள உதவும் வாசிப்பு பழக்கத்தை ஒரு கலை எனவும் கூறலாம். வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் போது சிறந்த நற்சிந்தனைகளும், கற்பனைகளும் மனதில் ஊற்றெடுக்கும். வாசிப்பின் மூலம் மூளைக்கு வேலை கொடுக்கப்படுவதனால் மூளையின் செயற்திறன் அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகும். அத்துடன் தனிமனித ஆளுமையை வளர்க்கும் வகையிலான சிந்திக்கும் திறன், கிரகிக்கும் ஆற்றல் ஆகிய திறன்கள் வாசிப்பின் மூலம் அதிகரிக்கப்படுவதால் இருள் நிறைந்த வாழ்க்கை கூட ஒளிமயமாகும். இவ் தனி மனித ஆளுமையை வளர்க்கும் நோக்குடன் ஒரே ஒரு முறை அவர்களுக்கு பொருத்தமாதெனக் கருதும் புத்தகமொன்றை வாங்கி பரிசளித்துப் பாருங்கள் காலப்போக்கில் அதனை மரபாக்கி ஊரில், நாட்டில் உலகில் பல மாற்றங்களைத் தோற்றுவிக்கலாம். வாசிப்புப் பழக்கம் பாடசாலைப் பிள்ளைகள் உட்பட இளைய சமுதாயத்தினர் மத்தியில் அருகி வருவதை அவதானிக்க முடிகிறது. உண்மையில் வாசிப்பு எமது அறியாமையை அகற்றி விடுகிறது என்பதனையும் வாழ்க்கையில் ஏற்படும் அநேகமான கவலைகளிலிருந்தும் எமக்கு புகலிடம் அளித்து எம்மை நாம் புரிந்து சுயமாக கட்டியெழுப்ப உதவுகின்றது என்பதனையும் புரிந்து கொள்வது அவசியம். நல் வாசிப்பு அறிவுக்கு உணவாகும். உடலுக்கு ஊக்கம் தரும். மனதுக்கு மகிழ்ச்சி தரும். தனிமைக்கு துணையாகும். வார்த்தைக்கு வளம் சேர்க்கும். வாழ்வுக்கு வழிகாட்டும். "ஒரு புத்தகத்தைக் காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கு தருபவனே மனித குலத்தின் உண்மையான விடிவெள்ளி" என -ஜோன் மில்டன் என்பவரும் "ஒரு புத்தகம் 100 நண்பர்களுக்குச் சமம்" என-சேர்க் ஐசக் நியூட்டன் அவர்களும் கூறியுள்ளார்கள்.

வாசிப்பை ஒவ்வொரு மாணவனும் சாதி, இன, மத வேறுபாடுகள் பொருளாதார ஏற்றதாழ்வுகளிற்கு அப்பால் சமமான சந்தர்ப்பத்தை வழங்குவதே இன்றைய சூழலில் பாடசாலை நூலகத்தின் பணியும் பயணிக்கவேண்டிய மார்க்கமும் ஆகும். "புத்தகங்களும், நூலகங்களும் இல்லாத நாடு சிறைச்சாலைக்கு ஒப்பானது." என்று நெப்போலியன் கூறியுள்ளார். "வீட்டை அலங்கரிக்க புத்தகங்களைவிட அழகான பொருட்கள் இன்னும் கண்டுப்பிடிக்கப்படவில்லை" என ஹென்றி வாட் பீச்சர் கூறியுள்ளார். பாடசாலை நூலகம், வாசிப்பு என்பதை ஒரு பொழுதுபோக்கு அம்சமாக மாணவர்கள் மத்தியில் ஊக்கவிக்கு வேண்டும். வாசிப்பை நேசிப்பதில் காணும் வெற்றியே மெல்ல மெல்ல கல்விசார் செயற்பாட்டிற்கான ஆழமான தேடலின் மூலமான சுயகற்றலையும் ஒவ்வொரு மாணவனும் செயற்படுத்தவதற்கான திருப்புமுனையாக இருக்கப் போவதென்பது உறுதி.

இன்றைக்கும் என்றைக்கும் சிறந்த நண்பன் நல்ல புத்தகமே. பேரறிஞர்கள் புத்தகங்களை வாசித்து வாழ்வில் மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டவர்கள். வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தி அறிவு கூர்மையுள்ள ஒரு பண்பாடான சமுதாயத்தினை உருவாக்குகின்றது என்பது திண்ணம். ஆகவே இன்று முதல் வாசிப்பை இனிதே சுவாசித்து வரலாற்றில் இடம்பிடிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரியின் நூல் ஆசிரியர்கள்

திரு.பொன்னுத்துரை - தவசிதன்
ஆசிரியர்
பௌதீகவியல் (65 நூல்கள்)

திருமதி.சுரேந்தினி மணிவண்ணன்
ஆசிரியை
கத்தோலிக்க சமயம் (2 நூல்கள்)

திரு.ஞானகுமாரன் மில்டன்
ஆசிரியர்
கத்தோலிக்க சமயம் (2 நூல்கள்)

செல்வன் அ.அப்ராஸ்
தரம் 13 வர்த்தகப்பிரிவு
நூல் - இஸ்லாமிய அறிவுக்களஞ்சியம்


## கல்லூரியின் வெளியீடுகள்


1. தேடல் (உயர்தர மாணவர் ஒன்றியம்)
2. மொட்டவிழும் சிட்டுக்கள் (ஆரம்பப்பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நூலகத்தின் வகிபாகங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாக்கத்தில் கல்லூரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்நாடக சங்கீத இராகங்களின் இசை மருத்துவம்.

திரு.சி.காண்டீபன்
(BSc, Dip.in.Edu, MSc)
பகுதித்தலைவர் (உ/த)
தி/புனித சூசையப்பர் கல்லூரி

**கர்நாடக சங்கீத இராக உருவாக்கம் :**

கர்நாடக சங்கீதத்தில் இராகங்கள் மிகப்பிரதானமானது. இராகங்கள் ஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்டது. அதாவது ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனும் இவ் ஏழு ஸ்வரங்களும் ஸ, ரி, க, ம, ப, த, நி எனும் எழுத்துக்களைக் குறிக்கின்றன. இவற்றுள் "ம" எனும் மத்திமத்துக்கு இரு வேறுபாடுகள் உண்டு. இதுபோல் "ரி" எனும் ரிஷபம், "க" எனும் காந்தாரம், "த" எனப்படும் தைவதம், "நி" எனப்படும் நிஷாதம் ஆகிய நான்கு ஸ்வரங்களுக்கும் மும்மூன்று வேறுபாடுகளுடன் 16 ஸ்வர வேறுபாடுகள் உள்ளன. இவ் ஏழு ஸ்வரங்களிலும் இவ்வேறுபாடுகளுள்ள ஸ்வரங்களுடன் ஒன்றையோ பலவற்றையோ மாற்றி அமைப்பதன் மூலம் 72 வெவ்வேறு ஸ்வர அமைப்புக்கள் பெறமுடியும். இவ்வாறு உருவாகின்ற இராகங்களே மேளகர்த்தா இராகங்கள் எனப்படுகிறது. இவையே கர்நாடக சங்கீத இசைக்கு அடிப்படையானது. இவ்வாறு அமைந்த ஒவ்வொரு மேளகர்த்தா இராகத்திற்குமுரிய சுரங்களில் ஒன்றையோ பலவற்றையோ குறைப்பதன் மூலம் ஏராளமான இராகங்கள் பிறக்கின்றன.

**இராகங்களின் அதிசயங்கள் :**

கர்நாடக சங்கீதத்தின் அமைந்த இராகங்களுக்கு பல சிறப்புக்கள் உண்டு. கர்நாடக சங்கீத இசை மூலம் நம்முன்னோராக இருந்த இசை விற்பன்னர்களும் சமய குரவர்களும் இராகங்களுக்குள் அமைந்த பாடல்கள் பாடி பல அதிசயங்களை நிகழ்த்தி உள்ளார்கள்.

அகத்திய மாமுனிவர் பாடி மேருமலையை உருகவைத்தார் என்னும் அபிராமிப்பட்டர் பாடி அமாவாசை தினத்தில் பௌர்ணமியை வரவழைத்தார் என்றும் பேரரசர் அக்பர் அவையில் சங்கீத சக்கரவர்த்தி "தான்சேன்" "தீபக்" எனும் இராகம் பாடி இணைந்த தீபத்தை ஏற்றினார் என்றும் முத்துஸ்வாமி தீட்சிதர் அமிர்தவர்ஷனி இராகம் இசைத்து மழையை வரவழைத்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

இவ்வாறு இசைக்கும்போது ஆன்மாவுடன் இணையும் அற்புதங்கள் நிறைந்த இராகங்களைக் கேட்பதால், இரசிப்பதால் மனதிலுள்ள தீய சிந்தனைகள், கவலைகள், மன அழுத்தங்கள் என்பன அகன்று சந்தோஷம் ஆத்மதிருப்பதி, தன்னம்பிக்கை செய்யும் வேலையில் இலயிக்கின்ற தன்மை என்பன போன்ற பண்புகள் உருவாகின்றன. இராகங்களை சரியான ஸ்வரஸ்தானங்களுடன் சரியான முறையில் பாடும்போது அவ் இராகங்களுக்கு நோய்தீர்க்கும் சக்தியுமுண்டு என்பதை பல இசை விற்பன்னர்களின் வாழ்க்கையின் அடிப்படையில் ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் சுட்டிக்காட்டுகின்றன.

அவ்வகையில் அதிகாலையில் பூபாள இராகம் கேட்க மிகுந்த சந்தோஷ அலைகளும் அன்று முழுக்க சிறந்த மனநிலையும் உருவாகும் எனவும் மனத்துன்பங்களிலிருந்து விடுபட ஆனந்த பைரவி, கமாஸ், ஸ்ரீரஞ்சனி, நீலாம்பரி போன்ற இராகங்களும் மனதை வசீகரிக்க தோடி, ஹிந்தோளம் போன்ற இராகங்களும் கருணை, பக்தி போன்றவற்றை ஆனந்தபைரவியும் வயிற்றுவலி தீருவதற்கு நவஜீவதாரா எனவும் வாயுத்தொல்லையிலிருந்து விடுபடுவதற்கு ஜெயஜெயந்தி இராகமும் இசைக்கலாம். அத்தோடு மாலை நேரம் பாடக்கூடியதும் மனோ ரம்மியத்தை ஏற்படுத்த வல்லதுமான இராகங்களாக நடபைரவி, சங்கரவாகம், மலையமாருதம் போன்ற இராகங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். கடினமான கல்நெஞ்சம் கரையும் கோபத்திலிருந்து விடுபடவும் ஹரிக்காம்போதி இராகம் கேட்கலாம் என இசை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அமிர்தவர்ஷினி இராகம் சரியான முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட சிறுநீர் பிரச்சனை தீருமெனவும் சோகத்திலிருந்து விடுபட்டு சுகமான மனநிலை உருவாக்கவல்ல இராகமாக முகாரி, நாதநாமக்கிரியை போன்ற இராகங்களும் இசைக்கலாம் என இசை வரலாறுகளும் அற்புதங்களும் ஆய்வுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு முறையான வகையில் அதன் வடிவம் மாறாது சரியான ஸ்வரஸ்தானங்களுடன் இசைக்கப்படும் இராகத்தின் மூலம் மனித நோய்கள், மன அழுத்தங்கள் தீருகின்றன.

மனித நோய் தீர்க்கும் இராகங்களையும் ஜனரஞ்சமாக இருப்பதற்காவும் எல்லோரும் புரிந்து கொள்வதற்காகவும் அவ் இராகம் அமைந்த சினிமாப் பாடல்களையும் அப்பாடல் அமைந்த படங்களையும் இதில் ஓரளவு பட்டியல்படுத்துகின்றேன்.

| நோய்/ உணர்வுகள் | இராகம் | பாடல் | படம் |
|---|---|---|---|
| கடினமான மனம் இளக்கல் நெஞ்சம கரைவதற்கு | ஹரிக்காம்போதி | கண்ணுக்கு மை அழகு | புதிய முகம் |
| | | உன்னை ஒன்று கேட்பேன் | புதிய பறவை |
| | | ஒரே பாடல் உன்னை அழைக்கும் | எங்கிருந்தோ வந்தான் |
| | | பழமுதிர்ச்சோலை | வருஷம் - 16 |
| | சக்கரவாகம் | உள்ளத்தில் நல்ல உள்ளம் | கர்ணன் |
| மனம், வாட்டுகின்ற துன்பங்களிலிருந்து விலக | ஸ்ரீரஞ்சனி | நாதம் எழுந்ததடி | கோபுரவாசல் |
| | ஆனந்தபைரவி | மெட்டுப்போடு | டுயட் |
| | நீலாம்பரி | வரம் தந்த சாமிக்கு சுகமான லாலி | சிப்பிக்குள் முத்து |
| பக்தி கருணைவதற்கு | ஆனந்த பைரவி | கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா | ஆலயமணி |
| | | பூங்கதவே தாழ்திறவாய் | நிழல்கள் |
| | | மதுரை மரிக்கொழுந்து வாசம் | எங்க ஊரு பாட்டுக்காரன் |
| மனம் வசீகரிக்க பெருமிதம் ஏற்படுத்த மருட்கை போன்ற உணர்வுகளுக்கு | தோடி | தாமரைப் பூவில் அமர்ந்தவளே (பக்திப்பாடல்) | |
| | கீரவாணி | மன்னவனே அழலாமா | கற்பகம் |
| | | ~~கண்ணாளனே எனது கண்ணை~~ | ~~பம்பாய்~~ |
| | | எங்கே எனது கவிதை | கண்டு கொண்டேன் |
| | | தானா வந்த சந்தனமே | ஊரு விட்டு ஊரு வந்து |
| சோகத்தை சுகமாக்க | முகாரி<br><br>நாத நாமக்கிரயை | சொல்லடி அபிராமி<br>கனவு கண்டேன் நான் கனவு கண்டேன் | ஆதிபராசக்கதி |
| பெரும் உணர்ச்சி பொங்க உத்வேகம் வர | அடானா | யார் தருவார் இந்த அரியாசனம் | சரஸ்வதி சபதம் |
| நீரிழிவு நோய் குறைய | அமிர்தவர்ஷினி | தூங்காத விழிகள் ரெண்டு | அக்னி நட்சத்திரம் |
| இதயநோய் தீர மன அழுத்தம் நீங்க | ஹம்சத்வனி | காலம் மாறலாம் நாம் காதல் மாறுமா | வாழ்க்கை |
| | பீம்பிளாஸ் | சிந்து நதிக்கரையோரம் அந்தி நேரம் | நல்லதொரு குடும்பம் |
| | | தோகை இளமயில் ஆடிவருவது | பயணங்கள் முடிவதில்லை |

இசையை இரசிக்காத மனிதர்களே இல்லை எனலாம். இன்று அவசரமான உலகிலும் பரபரப்பான சூழலினாலும் பல மனிதர்கள் மன அழுத்தத்திற்கு ஆட்படுகின்றனர். மன அழுத்தத்திலிருந்து ஓரளவு விடுபட சிலர் கோவிலுக்குச் செல்கின்றனர். சிலர் சினிமாவுக்கு செல்கின்றனர். சிலர் மது, புகை பிடித்தலுக்கும் போதைவஸ்துவுக்கும் அடிமையாகி விடுகின்றனர். சிலர் நல்ல நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்து மண அழுத்தத்திலிருந்து விடுபடுவதோடு அறிவையும் பெருக்கிக்கொள்கின்றனர். சிலர் தியானம், யோகாசனம் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். சிலர் தான் இசைகேட்டு அல்லது இசையை இசைத்து மன அழுத்தத்திலிருந்து விடுபடுகின்றனர்.

இசை மனிதனது உணர்வைத் தூண்டும் சக்தி படைத்தது என்பதை சங்க காலத்தில் போருக்குச் செல்லமுன் இசைஞர்கள் இசைமுழக்கி, சங்கு ஊதி, கொம்பு வாத்தியம் இசைத்து இசையின் மூலம் வீரர்களை உற்சாகப்படுத்தி போருக்கு அனுப்பி வைத்ததாகவும் அறியக்கிடக்கும் இவ்வேளை, அன்றைய அரச அவையில் இருந்த பாணர்கள் விறலியர், கூத்தர்கள் போன்றோர் மன அழுத்தத்தில் இருக்கும். அரசர்களை, அமைச்சர்களை அதிலிருந்து விடுபட இசைமூலம் உற்சாகப்படுத்தி மகிழ்வுபடுத்தி பரிசில்களும் வாங்கிச் சென்றதாக வரலாறுகள் ஆதாரப்படுத்துகின்றன.

இசையை கேட்கும்போதும் இசைக்கருவிகளை இசைக்கும்போதும் மனிதரின் மனத்தினுள்ளே இருக்கின்ற கோபம், வீரம், அன்பு, துக்கம், ஹாஸ்யம், இரக்கம், அழுகை, மகிழ்ச்சி, கருணை போன்ற ஒன்பது உணர்வுகளும் எழுப்பப்படும்.

இவ் உணர்ச்சிகள் கட்டுமீறிப்போகும் போது தான் மனநலம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு இலக்காகின்றனர். எரிச்சல் அடைதல், பொறாமைப்படுதல், ஆத்திரப்படுதல், தம் பொறுப்பை தட்டிக்கழித்தல், பயப்படுதல், தேவையற்ற கவலையுடன் எப்போதும் இருத்தல், தனிமையை விரும்புதல், தமக்குள்ளே உரையாடுதல் கதைத்தல் போன்ற குறைபாடுகள் மனநலக் குறைபாடுகளே தூக்கமின்மை, மிதமிஞ்சிய ஞாபக மறதி போன்ற குறைபாடுகளும் மனநலக் குறைபாடுகளே இதற்கு இசைமூலம் மருத்துவம் செய்யப்படுகிறது. நோயின் குணம் அறிந்து ஆங்கில மருத்துவமும் நோயின் மூலகாரணம் அறிந்து இசை மருத்துவமும் ஆற்றப்படுதாக இசை மருத்துவம் தொடர்பான டாக்டர்.சி.தர்ஷனன் எடுத்துரைக்கின்றார். அநேகமாக இசை மருத்துவம் மணநோய் சம்பந்தப்பட்டவர்களுக்கே வழங்கப்படுகிறது.

ஆகவே, கர்நாடக சங்கீத இராகங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை, இது மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல. இறைவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம். ஆகவே இசை மூலம் நல்ல மன நிலைமையும் வாழ்க்கையின் அமைதியையும், ஆனந்தத்தையும் பெறலாம் என்பது கண்கூடு.

"இசையின்பமே இறையின்பம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்கள்.

Dr.S.S.R.J.Sinthuja
MONCD, RDHS,Office
Trincomalee.

இன்று உலகமெங்கும் வாழும் மக்களை இன மத மொழி வேறுபாடு இன்றி ஆக்கிரமித்து மருத்துவ துறையை சற்றே திகிலடையச் செய்துவரும் பூதாகாரமான அரக்கன் இத்தொற்றா நோய்கள் என்றால் அது மிகையாகாது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அசுர வேகத்தில் வளர்ந்து மனிதனுக்கு சுகபோக வாழ்க்கையினையும் நவநாகரீகத்தினையும் வெகுமதி அளிக்க அதன் விளைவாக தொற்றா நோய்கள் மிக அமைதியாக எம்மிடையே வேர்விட்டு வளர்த்துகொண்டு இருக்கின்றது. தொற்றா நோய்கள் எனப்படுவது ஒருவரில் இருந்து மற்றவருக்கு தொற்றாத நோய்கள் ஆகும். இவை எமது உடலில் நீண்ட கால தாக்கத்தினை ஏற்படுத்தி பாரிய விளைவுகளை உருவாக்க வல்லன. அவற்றில் சில நீரிழிவு உயர்குருதியமுக்கம், இருதய நோய்கள் (மாரடைப்பு, பாரிசவாதம்) நீண்ட கால சுவாச நோய்கள் (ஆஸ்துமா) புற்றுநோய் போன்றன. உலக சுகாதார நிறுவன (WHO) அறிக்கையின் பிரகாரம் 38 மில்லியன் மக்கள் ஆண்டு தோறும் தொற்றா நோய்களினால் மரணத்தை தழுவுகின்றனர். இது ஆண்டு தோறும் நிகழும் மரணங்களில் 63% உள்ளடக்கககுகிறது. இவற்றில் பெரும்பாலானவை 60 வயதிலும் குறைவானவர்களில் ஏற்படுகின்றது. இம்மரணங்களிற்குரிய நோய்களாவன இருதய நோய்கள் (17.5 மில்லியன்) புற்றுநோய் (8.2 மில்லியன்) நீண்ட கால சுவாச நோய்கள் (4 மில்லியன்) நீரிழிவு (1.5 மில்லியன்) ஏற்படுகின்றது.

இந்நோய்கள் ஏற்படுவதற்குரிய மூல காரணமான ஆபத்து காரணிகளை ஆராய்ந்து பார்கையில் மிக முக்கியமான நான்கு காரணிகள் காணப்படுகின்றன.

1. ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கவழக்கங்கள் இன்று எம் அன்றாட உணவு நாவிற்கு சுவை தர வல்ல உப்பு சீனி எண்ணெய் அதிகளவில் உள்ளடக்கியதும் மரக்கறி பழங்கள் குறைவானதுமானது வாகவே காணப்படுகின்றது. இவை எமது உடற்பருமனை தேவைக்கு அதிகமாக அதிகரிப்பதுடன் நோய்களையும் ஏற்படுத்துகின்றது.

2. உடற்பயிற்சி அற்ற/ குறைவான வாழ்க்கைமுறை எமது அன்றாட வேலைகள் பலவற்றை செய்வதற்கு இயந்திரங்களும் போக்குவரத்திற்கு வாகனங்களும் உபயோகப்படுவதால் எமது வாழ்க்கையில் உடற்பயிற்சி அருகிவிட்டது.

3. புகைத்தல்/ புகையிலை பாவனை
நவநாகரீக வாழ்க்கையில் புகைத்தல் ஓர் கவர்ச்சிகரமான விடயமாக மாறியுள்ளதால் புகைத்தலானது அதிகரித்து வருகின்றது. புகையிலை பாவனையானது எமது உயிர் நுரையீரல், உணவுக்கால்வாய் புற்றுநோய், சுவாச நோய்கள், மாரடைப்பு, பாரிசவாதம், உயர் குருதியமுக்கம், மலட்டுத்தன்மை போன்றவற்றை உருவாக்கவல்லது.

4. தீய விளைவுகளை ஏற்படுத்தும் மதுபானம் பாவனை இது எமக்கு நரம்புத்தளர்ச்சி ஞாபகமறதி புற்றுநோய் மாரடைப்பு ஈரல் அழற்சி பாரிசவாதம் போன்ற சுகாதார சீர்கேடுகளையும் சமூக, கலாச்சார சீரழிவுகளையும் பொருளாதார பிரச்சனைகளையும் தருகின்றது. உலகெங்கும் புகைத்தல்/ புகையிலை பாவனையினால் ஆண்டு தோறும் 6 மில்லியன் மரணங்களும் மதுபாவனையின் தீயவிளைவுகளாய் 3.3 மில்லியன் மரணங்களும் உடற்பயிற்சியற்ற வாழ்க்கை முறையால் ஏற்படும் தீயவிளைவுகளால் 3.2 மில்லியன் மரணங்களும் நிகழ்வதாக உலக சுகாதார நிறுவனம் அறிக்கை செய்துள்ளது.

இவ்வாறான பாரிய உயிர் சேதங்களையும் பொருளாதார நஷ்டங்களையும் இத்தொற்றா நோய்களை எம்மிலிருந்து தூரப்படுத்த நாம் செய்ய வேண்டியவையாவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எமது உணவுப்பழக்கத்தை ஆரோக்கியமும் போசனையும் உடையதாக மாற்றிக் கொள்ளுதல். நாளாந்தம் எமது உணவில் 5 பங்கு அளவுடைய (400g – 500g) பழங்கள் மரக்கறிகளை சேர்த்துக்கொள்ளல் சீனிப்பாவனையினை மட்டும் பெண் ஒருவரிற்கு நாள் ஒன்றிற்கு 6 தேக்கரண்டி சீனியும் ஆண் ஒருவரிற்கு 9 தேக்கரண்டி சீனியும் சிபார்சு செய்யப்படுகிறது. அதிகளவான சீனிப்பாவனை பற்சூத்தை, அதிகரித்த உடற்பருமன், நீரிழிவு, புற்றுநோய், கொலஸ்ரோல் அதிகரித்தல் போன்றவற்றை விளைவிக்கும் உப்பு பாவனையினை குறைத்தல் - நாளொன்றுக்கு ஒருவரிற்கு 1 தேக்கரண்டி (5g) உப்பு போதுமானதாகும். அதிக உப்பு பாவனை உயர்குருதியமுக்கத்தை உருவாக்கும் எண்ணெய் அதிக கொழும்புள்ள உணவுகளை மட்டுப்படுத்தல்.

2. கிரமமாக உடற்பயிற்சி

இதன் மூலம் எமது உடல் நிறையினை பேணமுடியும் எமது உடற்திணிவு சுட்டியினை (உடற் திணிவுசுட்டி BMI = உடல் நிறை kg/ உயரம் $m^2$) 18.6 – 24.9 அகப்பேணுதல் (எமது உயரத்திற்கு ஏற்றநிறை) உடற்பயிற்சியினால் மனதிற்கும் உடலிற்கும் புத்துணர்வும் என்பு தசை மூட்டு போன்வற்றிற்கு வலுவும் கிடைக்கின்றது.

தினமும் 30 நிமிடங்கள் வாரத்தில் 5 நாட்கள் உடற்பயிற்சியில் ஈடுபடல் ஆரோக்கிய வாழ்வைத்தரும்.

3. புகைத்தல்/ புகையிலை பாவனை மதுபானப்பாவனை போன்றவற்றிலிருந்து முற்றாக விடுபடுவதும் எம்மை சூழ உள்ளவர்களையும் அவ்வாறான பழக்கங்களிலிருந்து விடுபட ஊக்குவித்தல்.

4. தியானம், அமைதியான இசையை செவிமடுத்தல் போன்ற மன அழுத்தத்தை குறைக்கும் விடயங்களில் ஈடுபடுதல்.

5. 40 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் ஆண்டுதோறும் வைத்தியரை அணுகி தமது குருதி அமுக்கம் (BP) குருதியில் சீனி கொலஸ்ரோலின் அளவு போன்ற அடிப்படை பரிசோதனைகளை செய்து கொள்ளல்.

6. பெண்கள் சுயமார்பக பரிசோதனையை மாதம்தோறும் செய்வது மாத்திரமல்லாமல். 20 – 40 வயதிற்குட்பட்டவர்கள் 3 வருடத்திற்கு ஒருமுறையும் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் வருடத்திற்கு ஒருமுறையும் சுகவனிதையர் சிகிச்சை நிலையங்களிற்கு சென்று மார்பக பரிசோதனைக்கு உட்படல்.

7. திருமணம் செய்த 35 வயதை அடைந்த பெண்கள் ஒவ்வொரு 5 வருடத்திற்கு ஒருமுறை கருப்பை கழுத்து, புற்றுநோய்க்கான பரிசோதனையை செய்து கொள்ளல் ஏனெனில் மார்பக, கருப்பை, கழுத்து புற்றுநோய் ஆகியன ஆரம்ப கட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டால் முற்றாக சுகப்படுத்தக் கூடியவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை கடைப்பிடிப்பதன் மூலம் எம்மை இத்தொற்றா நோய்களிற்கு இரையாக்காது ஆரோக்கியமான சமூகத்தினை உருவாக்க முடியும் அது மாத்திரம் இன்றி இந்நோய் தாக்கத்திற்கு உட்பட்டவர்களும் மேற்கூறியவற்றை கடைப்பிடித்து வைத்தியர் பரிந்துரைக்கும் மருந்துகளை உரிய நேரத்திற்கு உட்கொண்டு மாதாந்த வைத்திய பரிசோதனைகளிற்கு பிணியாய் நிலையத்திற்கு (Clinic) சமூகமளிப்பதன் மூலம் இந்நோய்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் இந்நோய்களால் ஏற்படும் நீண்டகால விளைவுகளிலிருந்து தப்பிக்கவும் முடியும். ஆரோக்கியமானவற்றை கடைப்பிடிப்போம் சுகமாக வாழ்வோர் வளமான சமூகம் உருவாக வழிகாட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைவஸ்து பாவனையும் இளைய தலைமுறையும்...

திரு.பு.கனேகபாகு
விசேட பொது வைத்திய நிபுணர்
பொது வைத்தியசாலை
திருக்கோணமலை.

இன்றைய இளைய தலைமுறையைத் தனது அடிமையாக்கி சமூகத்தைச் சீர்குலைப்பதில் போதைவஸ்து பிரதானபங்குவகிக்கிறது. எனவே போதைவஸ்துவிற்கு இளைஞர்கள் எவ்வாறு அடிமையாகின்றார்கள் என்பதுபற்றியும் அடிமையாவதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும், அதிலிருந்து மீள்வதற்கான வழிகள் பற்றியும் அறிந்திருக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். எனவே இதுபற்றிய விபரங்களைச் சற்று நோக்குவோம்.

போதைவஸ்துவிறகு அடிமையாதல் என்பது மூளையைப் பாதிக்கும் ஒரு நோயாகும். இதனைக் குணப்படுத்த முடியும். எனினும் இதற்கு அடிமையானவர் மீண்டும் போதைப்பழக்கத்திற்கு அடிமையான நிலைக்குத் தள்ளப்பட்டலாம். அதிலிருந்து மீள்வதற்கு மீண்டும் மருத்துவ உதவியை நாடவேண்டும். இல்லையேல் போதைப் பழக்கமானது மூளையை பாதிப்பதோடு மட்டுமல்லாது ஒரு மனிதனின் மூளையின் கட்டமைப்பையும் பழக்கவழக்கங்களையுமே மாற்றியமைத்துவிடும்.

**போதைப்பழக்கத்தால் ஏற்படும் விளைவுகள்.**

1. உடல் உளரீதியாகப் பாதிக்கப்படும்.
2. சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்படுவார்கள்.
3. பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுவர்.
4. சட்டரீதியான பிரச்சனைகளுக்கு உள்ளாவர்.

போதைப்பழக்கத்திற்கு அடிமையாதல்மூலம் ஆண்டொன்றிற்கு 30000 இற்கு மேற்பட்ட இறப்புக்கள் உலகளாவிய ரீதியில் ஏற்படுகின்றது. அதுபோல் புகைத்தலால் ஆண்டொன்றிற்கு 480000 இறப்புக்கள் ஏற்படுகின்றன. கருத்தரித்த நிலையில் தாய்மார் போதைவஸ்துவிற்கு அடிமையாகும்போது குழந்தை வயிற்றுனுள் இறத்தல். குறைமாதத்தில் குழந்தை பிறத்தல், குறைமாதத்தில் குழந்தை பிறத்தல், நிறைகுறைவான குழந்தைகள் பிரசவிக்கப்படல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.

Teenagers கட்டிளமைப் பருவத்தினர் இதனைப் பயன்படுத்துவதால் கல்வியில் பின்தங்கிய நிலை, பாடசாலை இடைவிலகல், வயதிற்கு முந்திய ஏனையோருடன் கருத்து பிரச்சனைப்படல் (violenu) தரிப்பு (teenage pregnancy) நோய்த்தொற்றுக்கள் (eg : HIV, Hepatitis பாலியல் ரீதியான நோய்கள்) புற்றுநோய், சுவாசப்பை பாதிப்பு, ஈரல் பாதிப்பு, மூளைப்பாதிப்பு, மரணம் போன்றன ஏற்படுகின்றன.

வளர்ந்தோர் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகும்போது உடல்மெலிதல், ஞாபகசக்தியை இழத்தல், வேலையிழப்பு, குடும்ப உறவுகளில் பாதிப்பு, பொருளாதார ரீதியில் பின்செல்லல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.

போதைப்பழக்கத்திற்கு அடிமையாதல் நீண்டகாலப்போக்கில் மூளையைப்பாதிப்பதுடன் மது பழக்கவழக்கங்களையும் மாற்றும். இந் போதைப்பொருள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் அறிந்திருந்தாலும் மீண்டும் மீண்டும் மனமும் உடலும் போதைப் பொருளைத் தேடிச் செல்லும். இப்பழக்கத்திற்கு அடிமையானவர்களின் மூளையின் தொழிற்பாடு ஏனையோரின் மூளையின் தொழிற்பாட்டிலிருந்து வேறுபட்டுக் காணப்படும் போதைப்பொருளிற்கு அடிமையாவதற்கான காரணங்கள் சிலவற்றையும் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| காரணம் | மாற்றுவழி |
|---|---|
| 1. Bore dom | புறக்கிருத்திய வேலைகளில் ஈடுபடுதல். |
| 2. Banding experiences சேரும் நண்பர்கள் போதைக்கு அடிமையானவர்களாக இருத்தல். இதனால் அவரும் கட்டாயமாக பயன்படுத்த வேண்டிய நிலை. | Rotary club, Lionscடரடி விளையாட்டுக்களில் ஈடுபடல். விளையாட்டுக்களில் ஈடுபடல். |
| 3. மனரீதியாகப் பாதிக்கப்பட்டிருத்தல். Depression, Schirophrenia | தகுந்த மருத்துவரை நாடுதல். |
| 4. போதைப்பொருள் எவ்வாறு இருக்கும் என்பதை அறிந்து பார்க்கும் ஆர்வம். | தகுந்த அறிவுரை வழங்குதல். |
| 5. Stress, படிப்பு, Lack of coping skills. சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மை இல்லாமை. | மனநல அறிவுரை. |
| 6. தாழ்வு மனப்பான்மை (14 - 16 வயது) தான் அழகில்லை கவர்ச்சியாக இல்லை படிப்பில் பின்தங்கியுள்ளமை போன்ற சிந்தனை. | மனநல அறிவுரை |
| 7. நண்பர்களின் தூண்டல் (16 - 18 வயது) எல்லோரும் பாவிக்கிறார்கள். நான் ஏன்பாவிக்கக் கூடாது (curiosity) என எண்ணுதல். | போதைப்பொருளுக்கு அடிமையாகும் விதம் பற்றியும் விழிப்புணர்கள் ஏற்படுத்தும். |
| 8. பரம்பரைக் காரணங்கள் தாய் தந்தை போதைப் பொருளுக்கும் அடிமையானவராயிருத்தல். | மனநல அறிவுரை |

**போதைப்பொருளுக்கு அடிமையானவர்களில்.**

99% 34 வயதிற்கு முன்னரே பாவிக்கத்தொடங்கிவிடுகின்றனர்.

88% நண்பர்களின் தூண்டுதலால் அடிமையாகினர்.


70% ஆனவர்கள் எவ்வாறு இருக்கும் என்பதை அறிய பாவிக்கத்தொடங்கி பின்பு விடமுடியாத நிலையை அடைகின்றனர்.

55% மீண்டும் மீண்டும் பாவிக்கின்றனர். (மருந்து எடுத்து மீண்டபோதும் திரும்பவும் போதை பழக்கத்திற்குச் செல்கின்றனர்.)

உணவு அருந்துதல் உடற்பயிற்சி என்பவற்றின்போது சிறிதளவு Dopamine விடுவிக்கப்படடு எம்மை மகிழ்ச்சியாக்குகின்றது. ஆனால் போதைப்பொருள் அதிகளவு Dopamine ஐ மூளையிலிருந்து விடுவிக்கின்றனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**போதைப்பொருட்களாகக் கருதப்படுபவை.**

1. மதுபானம்
2. புகைத்தல் - சிகரட், பீடி
3. மதனமோக லேகியம், கஞ்சா, அபின்
4. Solvents, glue, gas, petrol, acrosols.
5. L.S.D, Heroin, Ecstusy, Coccaine flower
6. சில நோய்களுக்கு பாவிக்கும் மருந்துகள் தூக்கமாத்திரைகள், மூளையைத் தூண்டும் மாத்திரைகள், Steroids.

**பிள்ளைகள் போதைக்கு அடிமையாவதை எவ்வாறு தவிர்க்கலாம்.**

1. பெற்றோர் நாற்பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து முன்மாதிரியாக நடத்தல்.
2. பிள்ளைகளுடன் நட்புறவுடன் பழகுதலும் மனம்விட்டுக் கதைத்தலும்.
3. கட்டிளமைப்பருவப் பிள்ளைகள் எங்கு போகிறார்கள், யாருடன் போகிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதை அவதானித்தல்.
4. உறவினர் நண்பர்களிடம் பிள்ளையில் நடத்தைப்பற்றி விசாரித்தல்.
5. போதைப்பொருளால் ஏற்படும் விளைவுகளை தெரியப்படுத்தல்.

யாராக இருப்பினும் போதைப்பொருளுக்கு அடிமையானவராக இருந்தால் தகுந்த மருத்துவ உதவியைப்பெற்று அதிலிருந்து விடுபட முடியும். சிலசந்தர்ப்பங்களில் (55%) மீண்டும் போதைப்பொருளை நாடினாலும் மீண்டும் மீண்டும் மருத்துவரின் உதவியை நாடி இதிலிருந்து விடுபடமுடியும் எனும் ஆரம்பத்திலேயே மூளையின் செயற்பாட்டிலும் கட்டமைப்பிலும் மாற்றம் ஏற்படுவதற்கு முன்னர் - மருத்துவ உதவியை நாடினால் போதைப்பொருளிலிருந்து விடுபடல் இலகுவானதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Josephian Mathematicians

திரு.சி.சிவகாந்தன்
கணித ஒலிம்பியாட் வளவாளர்,
(வடக்கு – கிழக்கு மாகாணம்)
NDT (Merit), B.Ed (Class), M.Ed
(Jaffna University)
கணித பாட இணைப்பாளர்,
தி/புனித சூசையப்பர் கல்லூரி

இருபத்தோராம் நூற்றாண்டிற்கான கல்விச் செல்நெறியானது, தகவல் தொழிநுட்பம் சார்ந்த அறிவுசார் சமூகமாக (Knowlefge based Society) உருவாக்கம் பெற்று வருகிறது. உலகை மாற்றுவதற்காக நாடுகள் ஒவ்வொன்றும் அதற்கேற்ப தம்மைத் தயாராக்கிகொண்டு வரும் போது, கல்லூரித் தாயின் 150வது அகவைகாணும் எமது மாணவர்களும் 20ம் நூற்றாண்டில் நின்று விடாது, மாற்றி அமைக்க வேண்டிய நிலையிலுள்ளனர். அந்த வகையில் கணித பாடத்தில் மாணவர்கள் பெற்ற சாதனைகள் அளப்பெரியது.

## கணித அறை (Maths Lab)

பிள்ளைகள் ஒவ்வொருவரும் பல்வேறு வகைகளில் வேறுபட்டதும், தமக்கு இயற்கையாகவே உரிய விசேட இயல்புளுடனும் காணப்படுகின்றனர். எனவே இவர்கட்கு பொதுவாகக் கற்பிப்பது பயனற்றது. என உளவியலாளர் ஜீன்பியாஜே (Jean Piajet 1934) கூறுகின்றார். அந்த வகையில் எமது கல்லூரியின் ஆசிரியர்கள் தனித்தனி மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கி வருகின்றனர்.

அந்த வகையில் வெவ்வேறு வகையான கற்றல் உபகரணங்களின் உதவியுடன் கணித தேற்றங்கள், விதிகள், உண்மைகளினூடாக கணித எண்ணக்கருக்களை விரிவுபடுத்தி அறியும் இடமாக "கணித அறை" நிறுவியுள்ளனர்.

கணித நிச்சயமானதும் பழுதற்ற திருத்தமான கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே நிச்சயமான திருத்தமான முடிவுகளைப் பெறுவதற்கு காட்சி நிலையிலிருந்து, கருத்து நிலையில் சிந்திப்பதற்கு கணித அறைகளின் பயன்பாடு அதிக பயனுறுதி வாய்ந்ததாக உள்ளது.

நமது கற்பித்தல் எனும் தொழிற்பாட்டில் கணித உபகரணங்களை எவ்வாறு, எப்போது பயன்படுத்த வேண்டும் என்பதை எமது கணித ஆசான்கள் தெளிவாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். எதிகாலத்தில் மாணவர்கள் இலகுவாகவும், பயனுறுதியுடையதாக கற்பதற்கும், கற்றல் இயலானவை அதிகரித்துக் கொள்வதற்கும் கற்றல் செயல்முறையில் அறிவு, திறன்களை முயற்சிகளே கற்பித்தலின் நீண்டகால, நிலைபோண் அபிவிருத்தி இலக்குகளை (Sustainable Development Goals) கொண்டு விளங்குகின்றன. இத்தகைய சாதனைகளை அடைவதற்கு, உபகரணங்களின் உதவியுடனான ஆய்வுடன் கூடிய கற்றல் சிறப்பான பங்களிப்பை ஆற்றுகின்றன.

எமது கணித அறையில் விஸ்வரூப மெடுத்த "கேத்திர கணித ஆக்கங்கள்" தேசியமட்டத்தில் தெரிவாகி பரிசில் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கு வித்திட்டவர் எமது கல்லூரியின் முன்னை நாள் அதிபர் வணபிதா.ஜீவனதாஸ் பெர்னாண்டோ அடிகளார் ஆவார். தனது 150வது அகவையில் கால் பதித்து வீறு நடை போட்டு பயணித்துவரும் புனித சூசையப்பர் கல்லூரியில் அருட்தந்தையின் பணிகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரி மாணவர்கள் கணிதத்தில் இவ்வாறான வியத்தகு சாதனைகளை படைப்பதற்கு காரண கர்த்தாக்கள் எமது கல்லூரியின் கணித ஆசான்களே. திருமதி.ச.பரணீதரன், திரு.A.M.M.றிவாஸ், திரு.சி.காண்டீபன் ஆகியோரின் உயரிய பணியே என்று கூறுவதில் கணிபாட இணைப்பாளர் என்ற வகையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## கணித சாதனைகள்

தி/புனித சூசையப்பர் கல்லூரி வரலாற்றில் கணித பாடத்தில் மாணவர்கள் பெற்ற சாதனைகள் அளப்பரியது. IMO (சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டி) சர்வதேச கணித போட்டி (IMC), தேசிய மட்டப்போட்டிகள் மாகாணமட்டப்போட்டிகள் யாவற்றிலும் எமது மாணவர்கள் கணிதத் திறன்களை வெளிப்படுத்தி பல்வேறு பதக்கங்களை வென்று வரலாறு படைத்தனர். கிழக்கு மாகாணத்தில் எமது பாடசாலை கணித பாடத்தில் நிலைப்படுத்தலை சாதனையை முறியடித்துள்ளது.

1959ம் ஆண்டு முதலாவது IMO போட்டிப் பரீட்சையானது நேர்மானியளவிலே இடம் பெற்றது. இப்போட்டியில் ஐரோப்பிய கண்டத்தின் 7 நாடுகள் மட்டுமே பங்குகொண்டன. இப்போட்டியில் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் 6 மாணவர்கள் மட்டுமே பங்குபற்றமுடியும் இப்போட்டியினை உலகின் மிகக் கடினமான அறிவுப்போட்டி என அழைப்பர்.

2015ம் ஆண்டு தாய்லாந்து தேசத்திலே நடைபெற்ற 56வது கணித ஒலிம்பியாட் போட்டியில் 104 நாடுகளும், 577 போட்டியாளர்களும் பங்குபற்றினர்.

இதில் இலங்கை அணியின் எமது கல்லூரி மாணவன் M.A.M.அவ்ஹாம் பங்குபற்றி அதிவிசேஷட சித்தி பெற்றது மட்டுமன்றி இலங்கை அணியிலே அதிகபுள்ளி பெற்ற வீரனாகவும் திகழ்ந்தார் இதேபோன்று. சர்வதேச கணிதப்போட்டி (IMC) ஒவ்வொருவருடமும் வெவ்வேறு நாடுகளில் நடாத்தப்படும் போட்டியாகும். இப்போட்டியானது தனியாகவும் குழுவாகவும் இடம்பெறும். அந்த வகையில் 20வது IMC போட்டியானது 2013ம் ஆண்டு Bulgaria விலுள்ள Blagoevgrad எனும் நகரில 72 அணிகள் பங்குபற்றி இருந்தன. இப்போட்டியில் இடம்பெறும் வினாக்கள். பல்கலைக்கழகத்தின் 1ம், 2ம், 3ம் மற்றும் 4ம் வருடபாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் எமது கல்லூரி மாணவனான செல்வன்.ல.ரிஷிகேசன் பங்குபற்றி அதிவிசேட சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச கணிதப்போட்டிகளில் பங்குகொண்ட எமது கல்லூரியின் முதல் மாணவன் என்ற பெருமையையும் பெற்றார்.

தொடர்ந்து 2013ம் ஆண்டும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணித ஒலிம்பியாட் கழகத்தினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியிலான ஒலிம்பியாட் பரீட்சையில் தெரிவாகி தொடர்ச்சியாக 2வது தடவையாகவும், தாய்வானில் நடைபெற்ற 21வது IMC போட்டியில் பங்குபற்றி தனிநபர் போட்டியில் வெண்கலப்பதக்கத்தினை பெற்று மீண்டும் செல்வன்.ல.ரிஷிகேசன் வெற்றிவாகை சூடினார்.

செல்வன்.ல.ரிஷிகேசனை முன்மாதிரியாகக் கொண்டு, எமது கல்லூரி மாணவன் செல்வன்.M.A.M.அல்ஹாம் மாகாணமட்டத்தில் முதல் நிலையில் தெரிவாகி தேசிய ரீதியிலும் தெரிவாகி தென்கொரியாவில் இடம்பெற்ற 22வது KIMC போட்டியில் பங்குகொண்டு, அதிவிசேஷட சித்தி பெற்று எமது நாட்டுக்கும், கல்லூரிக்கும் பெருமை சேர்ந்தார்.

இவற்றின் மூலம், எமது கல்லூரி தொடர்ச்சியாக 4 தடவை சர்வதேச கணிதப்போட்டிகளில் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றிய ஒரேயொரு பாடசாலை என்ற பெருமையை பெற்றுக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித ஒலிம்பியாட் மட்டுமன்றி கணித வினாடி – வினாப்போட்டிகளிலும் எமது பாடசாலை வரலாற்றுத் தடத்தை பதித்துக்கொண்டது. 2010, 2011, 2012, 2013, 2014 ஆண்டுகள் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் 1ம் இடத்தை பெற்று, தொடரச்சியாக வெற்றிக்கிண்ணத்தை புனித சூசையப்பர் கல்லூரியியே நிலைநிறுத்திக் கொண்டது. இவ் வினாவிடைப் போட்டிகளில்

செல்வன்.ல.ரிஷிகேசன்
செல்வன்.இ.எட்மன்கொட்விறி
செல்வன்.ஆர்.ஜி.மேர்சிடஸ்
செல்வன்.அ.இஸ்ஸத்
செல்வன்.ஜோ.தே.ஜொசுவா
செல்வன்.சி.ஸ்ரீரக்ஷன்
செல்வன்.கே.கபிலேஷ்வர்
செல்வன்.எஸ்.தினுசியன்
செல்வன்.சு.சங்கரநாத்
செல்வன்.எம்.ஏ.எம்.அப்ஹாம்
செல்வன்.அ.ஆஷிக்அலி
செல்வன்.ல.சாருகேஸ்
செல்வன்.ல.கவிஷேசன்
செல்வன்.ஜோ.தே.ஜொசியா
செல்வன்.எஸ்.கிரிஷன்

ஆகியோர் வெற்றி நாயகர்களாக, வலம் வந்தார்கள் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை தொடர்ந்து 1ம் இடங்களை தமதுரிமையாக கொண்டிருந்தமை இவர்களின் கணிதப் புலமையை எடுத்துக்காட்டுகிறது.

இவ் அனைத்து வெற்றிகளுக்கும் உறுதுணையாக விளங்கியவர்கள் இவர்களது கணிதபாட ஆசிரியர்களும் அதிபரும் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களுமே என்பது மிகையாகாது.

எதிர்காலத்திலும் செல்வன்.ல.ரிஷிகேசன், செல்வன்.M.A.Mஅவ்ஹாம் போன்று பல மாணவர்கள் இக்கல்லூரித் தாய்க்கு பெருமை சேர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிக் கல்வியும் ஆரம்பக்கல்வியும் – நடைமுறையும் சவால்களும்

சி.வரதசீலன்
செயலாற்றுப் பணிப்பாளர்,
கி.மா - பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்
திருகோணமலை மாவட்டம்
(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக்கல்விப் பிரிவு, வ.கி. மா)

எமது கல்விக் கட்டமைப்பைப் பொறுத்தவரை ஆரம்பக்கல்வித்துறை மிகவும் முக்கியமானதென்பது இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று அதற்கு முன்னரான முன் பள்ளிக் கல்வியும் சம அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளபோதிலும் நமது நாட்டில் இன்னமும் அரச கல்வித்துறைக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படாததால் அதனை ஒழுங்கமைத்துச் செயற்படுத்துவது தொடர்பான முயற்சிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்திற்கமைய முன் பள்ளிகளைப் பதிவு செய்து கண்காணிக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதன்படி வெவ்வேறு மாகாண சபைகள் வெவ்வேறு வகையான கட்டமைப்புக்களை உருவாக்கி முன் பள்ளிகளைப் பதிவு செய்து கண்காணிக்கும் பணியை நிறைவேற்றி வருகின்றன. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 2010ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 01ம் இலக்க நியதிச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட "பாலர் பாடசாலைக் கல்விப்பணியகம்" 2015 முதல் மாகாணக் கல்வியமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றி வருகின்றது. இவ்வாறு மாகாண சபையின் நிருவாகக் கட்டமைப்புக்குள் வரையறுக்கப்பட்ட அளவில் கொண்டுவரப்பட்டுள்ள முன் பள்ளிக் கல்வித் துறையானது ஆரம்பக் கல்வித் துறையுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது என்பதை விளக்குவதும் அவை தொடர்பாகக் காணப்படுகின்ற சில பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சியைப் பொறுத்தவரை வாழ்க்கையின் முதல் ஐந்து வருடங்களும் மிக முக்கியமானவை. இக்கால கட்டத்தில் மூளை வளர்ச்சியானது அறிவு சார்ந்த செயற்பாட்டின் தரத்தைத் தீர்மானிக்கத்தக்க புறக்காரணிகளின் தாக்கத்திற்கு இலகுவில் உட்படக்கூடியதாக இருக்கின்றது. மொழி விருத்தி, சமூகமயமாதல் ஆகியவற்றோடு முழுமையான ஆளுமை விருத்தியிலும் முக்கியமான கட்டங்களை எய்தும் ஒரு சிறப்பான காலகட்டமாகக் காணப்படுவது 3 தொடக்கம் 5 வயது வரையான காலப்பகுதியாகும். இக்கால கட்டத்தில் ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் சரியான ஊக்குவிப்பானது அப்பிள்ளையின் முறையான உடல், உள, சமூக, மனவெழுச்சி விருத்தி மற்றும் ஆக்கத்திறன் விருத்திக்கு உதவுவதாக அமைகின்றது. இக்கால கட்டத்தில் சரியான முறைப்படியான வழிநடத்தலை உரிய அனுபவங்கள் மூலம் பெறாத பிள்ளை பாடசாலையொன்றில் ஆரம்பக் கல்வி பெறச் செல்லும்போது அதற்கான ஆயத்த நிலையில் சற்றுக் குறைவுபட்டவனாகக் காணப்படக்கூடும் இந்நிலையைத் தவிர்ப்பதற்கு 3 தொடக்கம் 5 வயது வரையான காலப்பகுதியில் பிள்ளையைப் பொருத்தமான விதத்தில் உருவாக்கத் தக்க சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அச்சூழல் பிள்ளைக்கு பாதுகாப்பு, சுகாதாரப் பராமரிப்பு, சத்துணவு, சுத்தமான அமைவிடம், அன்போடு உதவுகின்ற தொடர்பாடல், பொருத்தமான முன்னுதாரணங்கள், மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றை வழங்குவதாக இருக்க வேண்டும். இவையாவற்றையும் உள்ளடக்கிய பிள்ளை சாதகமான ஒரு சூழலை வழங்குவதே முன் பள்ளிகளின் பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டைப் பொறுத்தவரை 3 தொடக்கம் 5 வயது வரையுள்ள பிள்ளைகள் முன்பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். எனினும் நாடு முழுவதிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான முன் பள்ளிக் கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கின்றனவா என்பது கேள்விக்குரியதாகும். ஏனெனில் முன்னர் குறிப்பிட்டது போல முன் பள்ளி நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படாததால் அவற்றின் நிருவாகம், செயற்பாடு ஆகியவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. முன் பள்ளிகள் பல தனி நபர்களாலும் மத அமைப்புக்களாலும் கிராம மட்ட சமூக நிறுவனங்களாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் உள்ளூராட்சி அமைப்புக்களாலும் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுக்கிடையே பௌதிக வளங்கள், ஆசிரியர்களின் தகைமை மற்றும் பயிற்சி, பாடத்திட்டம் ஆகியவற்றில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. தனி நபர்களால் நடத்தப்படும் முன் பள்ளிகள் பொதுவாக வருமானம் பெறும் ஒரு வியாபார முயற்சி போன்றே நடைபெறுகின்றன. அவற்றிடையே நிலவும் போட்டித் தன்மை காரணமாகத் தமது மாணவர் அனுமதியை அதிகரிக்கும் நோக்கில் பெற்றாரைக் கவரக்கூடிய பல்வேறு உத்திகளையும் அவை கையாள்கின்றன.

எவ்வாறாயினும் மாகாண சபைகளால் பதிவு செய்யப்பட்டுக் கண்காணிப்புக்குள்ளாகும் முன் பள்ளிகளில் பாடத்திட்டம், ஆசிரிய பயிற்சி ஆகியவற்றில் ஒரு சீரான தன்மையைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்டு வருகின்றன. பிள்ளைகளின் விருத்தி தொடர்பான உளவியற் கோட்பாடுகளினடிப்படையில் குறித்த வயதுப் பிள்ளைகளிடம் செயற்படுத்தத் தக்கதாகத் தீர்மானிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொகுப்பே இங்கு பாடத்திட்டமாகக் கொள்ளப்படுகின்றது. பின்வரும் உளவியலாளர்களின் கோட்பாடுகள் இங்கே பெரிதும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

* சிக்மன்ட் புரொய்ட்டின் உளப் பகுப்புக் கோட்பாடு
* ஜீன் பியாஜேயின் அறிதலாட்சி அபிவிருத்திக் கோட்பாடு
* எரிக் எரிக்சனின் உளவியல் சமூக அபிவிருத்திக் கோட்டுபாடு
* கொஹெல்பர்க்கின் ஒழுக்க விழுமிய அபிவிருத்திக் கோட்பாடு

இவற்றினடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற பாடத்திட்டமானது முன்பிள்ளைப்பருவப் பிள்ளைகளில் கீழ்வரும் விடயங்களில் விருத்தியை ஏற்படுத்துவதற்கு உதவுவனவாக அமையும் செயற்பாடுகளின் தொகுப்பாக உள்ளது.

* உடல் விருத்தி
* அறிவாற்றல் விருத்தி
* சமூக மனவெழுச்சி விருத்தி
* தொடர்பாடல் திறன்கள் விருத்தி
* ஆக்கத்திறன் மற்றும் அழகியல் சார் ஆற்றல் விருத்தி

ஒவ்வொரு வகை விருத்திக்கும் ஏற்ற விளையாட்டுக்களும் செயற்பாடுகளும் 3 முதல் 4 வயதுப் பிள்ளைகளுக்கும் 4 முதல் 5 வயதுப் பிள்ளைகளுக்கும் பொருத்தமான விதத்தில் நன்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் தொகுக்கப்பட்டுக் கைந்நூல் வடிவில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு அதற்குரிய பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இவ்விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் பிள்ளைகள் ஈடுபடுவதற்கு வழிகாட்டி, வசதிகள் கொடுத்து உதவி செய்வதே முன் பள்ளி ஆசிரியர்களின் பணியாகவுள்ளது. சாதாரணமாகப் பாடசாலைகளில் உள்ளதைப் போன்ற வகுப்பறை அமைப்போ அல்லது கற்றல் கற்பித்தலோ முன் பள்ளிகளில் இடம்பெறாது. அதாவது ஆசிரியர் கற்பிப்பவராகவும் பிள்ளைகள் கற்போராகவும் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுகின்ற நிலை இங்கு இல்லை. மாறாக மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களிலுமான பிள்ளைகளின் விருத்திக்கு வழிவகுக்கும் விளையாட்டுக்களும் செயற்பாடுகளும் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் எல்லாப் பிள்ளைகளுக்கும் வாய்ப்புக்களை வழங்கும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த அடிப்படையான விடயம் தொடர்பான புரிந்து கொள்ளுதல் குறைவாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் சவால்கள் தோன்றுகின்றன. உதாரணமாக, அறிவாற்றல் விருத்திக்குரிய செயற்பாடுகள் மொழித்திறன் சம்பந்தப்பட்டவையாகவும், அடிப்படைக் கணித எண்ணக் கருக்கள் சம்பந்தப்பட்டவையாகவும் உள்ளன. மொழித்திறன் விருத்தியில் செவிமடுத்தல் மூலம் புதிய சொற்களைக் கற்றுக்கொள்வதும் அவற்றைச் சரியாக உச்சரிப்பதும் பொருத்தமான விதத்தில் உரையாடலில் பயன்படுத்துவதுமே விருத்தி செய்யப்பட வேண்டிய திறன்களான உளவியலாளர்களாலும் ஆய்வாளர்களாலும் இனங்காணப்பட்டுள்ளன. மொழியிலுள்ள எழுத்துக்களின் வரி வடிவத்தையும் ஒலி வடிவத்தையும் கற்றுக்கொள்வதும் அவற்றைப் பயன்படுத்துவதும் 5 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைக்குப் பொருத்தமான திறனாக அனைத்துலகிலும் அனைத்து மொழிகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே நமது பாடசாலைகளில் முதலாம் தரப் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் நடைமுறையில் இன்று பெரும்பாலான பெற்றாரின் எதிர்பார்ப்பு வேறுபட்டதாகவுள்ளது. பாடசாலைக் கல்வி போட்டித் தன்மை நிறைந்ததாகக் காணப்படுவதால் சகல விதத்திலும் தங்கள் பிள்ளை முன்னிலை அடைய வேண்டும் என்பதற்காக முன் பள்ளியிலேயே பிள்ளை தாய் மொழியில் மாத்திரமன்றி ஆங்கிலத்திலும் எழுதவும் வாசிக்கவும் பயிற்சி பெற வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய பயிற்சியை வழங்காத முன்பள்ளியை அவர்கள் தரக் குறைவாக நோக்குவதுமுண்டு. இப்படியான நிலைமையில் பிள்ளை விருத்திக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பெற்றோர்களைக் கேட்டால், "முதலாம் தரத்தில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது பாடசாலைகளில் நேர்முகப் பரீட்சை வைக்கின்றார்கள். அதன்போது பிள்ளையை எழுதும்படியும் வாசிக்கும்படியும் கேட்கிறார்கள். எழுத வாசிக்கத் தெரியாத பிள்ளையை அடிப்படை அறிவில்லாத பிள்ளையாக ஆசிரியர்கள் தீர்மானித்து விடுகிறார்கள். எனவே பிள்ளை எழுத வாசிக்கத் தெரிந்து கொண்டே முதலாம் வகுப்பிற்குச் செல்ல வேண்டியுள்ளது" என்கிறார்கள். அது மாத்திரமல்லாமல் எழுத வாசிக்கத் தெரியாமல் முதலாம் வகுப்பில் பிள்ளை சேர்ந்தால் "எந்த முன் பள்ளியில் படித்தாய்? அங்கே இரண்டு வருடமாக என்ன படிப்பித்தார்கள்?" என முன் பள்ளியைத் திட்டித் தீர்க்கின்ற முதலாம் வகுப்பு ஆசிரியர்களைப் பற்றியும் கேள்விப்படக்கூடியதாக உள்ளது. ஆரம்பக் கல்விப் பாடத்தின்படி அது தங்களுக்குரிய பொறுப்பு உணராமல் முன் பள்ளி ஆசிரியர்கள் மீது பொறுப்பைச் சுமத்துவது பொருத்தமற்றது. முன் பள்ளி ஆசிரியர்கள் அதற்குரிய பயிற்சி பெற்றவர்களுமல்ல. எனவே முன் பள்ளிக் கல்வியானது எதிர்கொள்கின்ற சவால்களை அறிவு பூர்வமாகப் புரிந்து கொண்டு எல்லா மட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது கல்வித்துறையில் ஈடுபாடு கொண்ட அனைவரினதும் பொறுப்பாகும்.

ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரை 1999 முதல் நடைமுறையிலுள்ள கலைத்திட்டம் பின்வரும் மூன்று முக்கிய விடயங்களை எமது கல்வி அமைப்பினுள் கொண்டு வந்துள்ளது.

1. பிள்ளை மையமான கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. செயற்பாடுகள் மூலமான கற்றல்
3. கற்றல் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட (competency based) கலைத்திட்டம்

இந்த மூன்று விடயங்களும் மேலே குறிப்பிடப்பட்ட முன் பள்ளிக் கல்வி தொடர்பான உளவியற் கோட்பாடுகள் சார்ந்த நடைமுறைகளின் தொடர்ச்சியாகவே உள்ளன. இவை அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் பாரம்பரியமான கற்பித்தல் கலாச்சாரத்திற்குப் புதிய அம்சங்களாக நோக்கப்பட்டன. ஏனெனில் நமக்குப்பழகிப் போய்விட்ட அக்கலாச்சாரத்தில் மேற்கூறியவற்றிற்கு எதிர்மாறான,

* ஆசிரியர் மையமான கல்வி
* பெருமளவில் விரிவுரை முறை மூலமான கற்பித்தல்
* பாட அடிப்படையிலான கலைத்திட்டம்

ஆகியனவே காணப்பட்டன. கற்பித்தல் கலாச்சாரத்திலிருந்து கற்றல் கலாச்சாரத்திற்கான மாற்றமானது கல்வித்துறை சார்ந்த சகலராலும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் நடைமுறையில் இன்னும் பல படிகளைக்கடந்து முன்னேறிச் செல்ல வேண்டியதாக உள்ளது. குறிப்பாகப் பெற்றார் மத்தியிலே இம்மாற்றம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இன்னும் தேவையாக உள்ளன என்பது உண்மையாகும்.

ஆரம்பக்கல்வி என்பது உண்மையில் தொடர்ந்து வர இருக்கின்ற முறையான கல்விக்குப் பிள்ளையைத் தயார்படுத்துகின்ற ஒரு பயிற்சியே எனக் கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். பிள்ளையின் கற்றல் எவ்வாறு நிகழ்கின்றது என்பதை உளவியற் கண்ணோட்டத்தில் பார்ப்போமாயின் பிள்ளை மையமான கல்வி என்பதன் அடிப்படையை நாம் இலகுவில் புரிந்து கொள்ளலாம். பிள்ளையின் உள வளர்ச்சி பற்றிக் கூறும் உளவியாளர் பியாஜேயின் கருத்து இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். பிள்ளை ஏற்கனவே பெற்ற அனுபவங்கள் அவனது உள்ளத்தில் ஒரு திரளமைப்பை உண்டாக்குகின்றன. ஒழுங்கற்றுக் கிடக்கும் அத்திரளமைப்பில் புதிய அனுபவங்களையும் உள்வாங்கி ஒழுங்கமைக்கும் போது தெளிவு ஏற்படுகின்றது. இதுவே பிள்ளையில் நிகழும் கற்றல் ஆகும். எனவே பிள்ளையின் இயலுமைக்கேற்ற அளவில் பொருத்தமான அனுபவங்களை அவன் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அவன் தானாகவே கற்றுக்கொள்ள வழி வகுக்கப்படுகின்றது. மாறாகப் பிள்ளையின் இயலுமைக்கு அப்பாற்பட்ட தூல சிந்தனைக்குரிய விடயங்களைப் போதிக்கும்போது அது பிள்ளைக்கு விரக்தியையும் பாடசாலைக் கல்வியில் வெறுப்பையும் தோற்றுவித்து விடும். உண்மையிலே தான் கற்க விரும்புவதைப் பிள்ளை தானே தீர்மானிப்பதே பிள்ளை மையமான கல்வியின் அடிப்படை என்று கூறப்படுகின்றது.

பிள்ளைக்குப் போதிய அனுபவங்களை வழங்குவதன் மூலம் இயல்பான கற்றல் இடம்பெறுவதற்கு வழிவகுக்கும் நோக்கிலேயே செயற்பாடுகள் மூலமான கற்றல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் செயற்பாடுகளோடு கூட விளையாட்டுக்கள், வினோதச் செயல்கள் ஆகிய அம்சங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கே விளையாட்டு எனும் போது பிள்ளைகள் வெறுமனே உடல் ரீதியான விளையாடுவது குறிப்பிடப்படவில்லை. கற்றலுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காகத் திட்டமிட்டு அவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். கணித விளையாட்டுக்கள், மொழி விளையாட்டுக்கள் போன்றன இதிலடங்கும். இதனால் எழுத்து வேலை மிகவும் குறைவாகவே இடம்பெறுகின்றது. குறிப்பாக 1ம், 2ம் வகுப்புக்களில் பிள்ளைகள் தமது அப்பியாசக் கொப்பிகளில் எழுதுவது மிகவும் குறைவு. இதைப் பெற்றார் பார்வையிடும்போது பிள்ளை பள்ளிக்கூடத்தில் ஒன்றும் படிக்கவில்லையே என அங்கலாய்ப்பதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டம் என்பது முந்திய கலைத்திட்டத்தை விட முற்றிலும் மாறுபட்ட ஒரு அம்சமாகும். தேர்ச்சி என்பது தேர்ச்சியடைதல் என்கின்ற வினைச்சொல்லை இங்கு குறிக்கவில்லை. மாறாக இது இயலுமை (competency) எனப் பொருள்படுகின்ற ஒரு பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது. தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் ஆகியன சார்ந்த ஒரு இயலுமை என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பாண்டித்தியம் (mastery) அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற தேர்ச்சிகளில் ஒவ்வொரு பிள்ளையும் பாண்டித்தியம் பெற்று விட்டானா என அறிவதற்குத் தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடுகள் ஆசிரியர்களால் செய்யப்படுகின்றன. கணிப்பீடுகள் வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்திச் செய்யப்படுகின்றன. அவைகள் கணிப்பீட்டுக் கருவிகள் எனப்படுகின்றன. உதாரணமாக.

வாய் மொழி மூல வினாக்கள் வினவுதல்,
அவதானித்தல்,
உற்று நோக்கல்,
எழுத்துப் பரீட்சை வைத்தல்,
ஒப்படைகள் செய்வித்தல்,
செயற்பாடுகள், குழு வேலைகளில் ஈடுபடும்போது மதிப்பிடல்

போன்ற பல்வேறு வகைப்பட்ட கணிப்பீட்டுக் கருவிகளைக் கொண்டு பிள்ளைகளின் அறிவு மாத்திரமல்லாமல் திறன், மனப்பாங்கு ஆகியனவும் தொடர்ச்சியாகக் கணிப்பிடப்படுகின்றன. இதனால்தான் எழுத்துப் பரீட்சை மூலம் அறிவை மாத்திரம் பரீட்சிக்கின்ற தவணைப் பரீட்சைகளுக்கு இப்போது ஆரம்ப வகுப்புக்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. இக்கணிப்பீட்டு முறை பற்றிப் பெற்றோருக்குப் போதிய அறிவூட்டம் வழங்கப்படாததால் தவணைப் பரீட்சை வைக்கவில்லையே என அவர்கள் ஆசிரியர்களைக் குறை காண்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. மேலைத்தேய நாடுகளிலிருந்து இப்போது நம்மவர்கள் பலர் குடும்பமாக வந்து போகிறார்கள். ஆரம்ப வகுப்புக்களில் கற்கும் அவர்களது பிள்ளைகளின் முன்னேற்ற அறிக்கைகளைப் பார்த்தால் அவை வெறும் எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளைத் தருவதாக இல்லாமல் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சி பற்றிய பல தகவல்களைத் தருவதாக இருப்பதைக் காணலாம். பரீட்சைப் புள்ளிகளை விட்டு விட்டு இது போன்ற முன்னேற்ற அறிக்கைகளையே வலியுறுத்திக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு நம் நாட்டுப் பெற்றோரும் முன்வருவார்களானால் அதுவே தற்போதைய ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தின் வெற்றியைக் குறிக்கும் சிறந்ததொரு சுட்டியாக அமையும்.

ஆரம்பக் கல்விக் கலைத்திட்டம் மேற்சொன்ன பல சிறப்பம்சங்களைக் கொண்டிருந்தாலும் பிள்ளைகள் 4ம், 5ம் வகுப்புகளுக்கு வரும்போது முன்பு இருந்தது போன்ற பரீட்சை மையமான கல்வி முறையின் அழுத்தங்களுக்குள் அகப்பட்டுத் திக்கித் திணறுவதையே காண்கிறோம். இதற்குக் காரணமாக இருப்பது 5ம் வகுப்பில் நடத்தப்படும் புலமைப்பரிசிற் பரீட்சையே ஆகும். இது உண்மையில் பொருளாதார வசதி குறைந்த பெற்றோரின் பிள்ளைகளைப் புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் தெரிவுப் பரீட்சை என்ற நிலை மாறிப் பெற்றோரின் கௌரவத்தை நிலைநாட்டப் பிள்ளைகளைக் கசக்கிப் பிழிகின்ற ஒன்றாக ஆகிவிட்டது. நடைமுறையிலுள்ள ஆரம்பக் கவலைக்குரிய இந்நிலை தொடரத்தான் வேண்டுமா என்பது கல்விக் கொள்கை வகுப்பாளர்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப்பிரிவு மாணவர்கள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொத்த மாணவர் எண்ணிக்கையில் புள்ளிகளின் இறங்கு வரிசை அடிப்படையில் நிதி ஒதுக்கீட்டைப்பொறுத்து முதல் பத்து முதல் பதின்மூன்று வீதத்தினர் மாத்திரமே வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுவர். உதாரணமாக ஒரு மாவட்டத்திலிருந்து ஆயிரம் மாணவர்கள் தோற்றினால் பத்து வீதமே தெரிவு செய்யப்பட வேண்டுமாயின் புள்ளி இறங்கு வரிசை அடிப்படையில் நூறாவது மாணவன் பெற்ற புள்ளியே வெட்டுப்புள்ளியாகும். இதனால்தான் வெட்டுப்புள்ளி மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகின்றது. வளங்களும் வசதிகளும் கூடுதலாகக் கொண்ட, அதிக எண்ணிக்கையில் மாணவர்களைப் பரீட்சைக்கு அனுப்புகின்ற நகர்ப்புறப் பாடசாலைகளைச் சேர்ந்த பிள்ளைகள் முதல் பத்து வீதத்திற்குள் வருவதற்கான சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருப்பது இயற்கையே அதற்காகக் கிராமப்புறப் பாடசாலைகளையும் அங்கிருக்கும் ஆசிரியர்களையும் குறைவாகப் பார்க்கின்ற சமூகக் கண்ணோட்டம் மாற்றப்பட வேண்டும். புலமைப் பரிசிற் பரீட்சைப் பெறுபேறுகள் தான் ஆரம்பக் கல்வியின் தரத்தைக் காட்டும் சுட்டி என்ற தவறான கருத்து பெற்றோரிடம் மாத்திரமன்றிக் கல்வித்துறையைச் சேர்ந்த சிலரிடத்தும் நிலவுகின்றது. இவ்வாறான காலங்கடந்த கருத்துக்களை அகற்றி முற்போக்குச் சிந்தனையை வளர்க்க வேண்டியது இன்று ஆரம்பக்கல்வித்துறை எதிர்கொள்கின்ற பாரிய சவாலாகும்.

ஆரம்பக் கல்வியில் கொண்டு வரப்பட்ட மறுசீரமைப்பு நடைமுறையில் பதினேழு ஆண்டுகளைக் கடந்து விட்ட நிலையிலும் அதன் உண்மையான அர்த்தம் பற்றிய புரிந்து கொள்ளலில் காணப்படுகின்ற வேறுபாடுகள் களையப்பட வேண்டும். அதன் மூலம்தான் சின்னஞ் சிறார்களுக்குப் பலவந்தமில்லாத, பாரபட்சமில்லாத, பயவுணர்வில்லாத, இயல்பான கற்றலுக்கு வழி வகுக்கின்ற பிள்ளை மையமான கல்வியை வழங்கி அவர்களைப் பூரண ஆளுமை வளர்ச்சி பெற்றவர்களாக உருவாக்க முடியும்.

மொத்தத்தில் முன் பள்ளிக் கல்வி, ஆரம்பக் கல்வி ஆகிய இரண்டு துறைகளும் முன் பிள்ளைப்பருவம் மற்றும் பிள்ளைப் பருவம் ஆகியவற்றிலுள்ள பிள்ளைகளின் விருத்தியைப் பொறுத்த வரை பிரித்துப் பார்க்கப்படக் கூடாதவை. இரண்டிலுமுள்ள அடிப்படையான கோட்பாடுகள் பற்றிய புரிந்துணர்வுடன் கூடிய செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும். இவ்விரு துறைகளையும் சேர்ந்தவர்கள் தமது குறிக்கோள்களின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து செயற்படத்தக்க வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப்பிரிவில் மாணவரின் இயல்பும் எமது பங்களிப்பும்

திருமதி.ஜொ.கே.ஸ்ரீகரன்,
பகுதித்தலைவர் - ஆரம்பப்பிரிவு
தி/தி/புனித சூசையப்பர் கல்லூரி
திருக்கோணமலை.

மாணவச் செல்வங்கள் நல்ல சூழலில் நல்ல உடல், உள சுகதேகிகளாக வாழ்வதையே எல்லோரும் விரும்புவர். இவை எல்லாம் அமையும் போது அவர்கள் மனதில் நல்ல சிந்தனைகளும், செயல்களும் உருவாகும். இவ்வாறு வாழும் பிள்ளைகள்தான் நல்ல கற்றலை மேற்கொள்வார்கள். இதனை பூர்த்தி செய்வது ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் கடமையாகும். இவைகள் தவறும் பட்சத்தில் அவர்களின் மனம் பாதிக்கப்பட்டு சகல இடங்களிலும் (குடும்பம், பாடசாலை, சமூகம்) நம்பிக்கை இழந்து சோர்வும், சஞ்சலமும், வன்முறைகளும் உருவாகும். எனவே அவர்களது ஆரோக்கியத்திற்கு உதவுவது எமது முதற் கடமையாக இருக்கின்றது. இதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பின்வருவனவற்றை முன்வைக்கலாம்.

* பிள்ளைகளை இனங்காணுதல்
* பிள்ளைகளின் தேவைகளை இனங்காணுதல்
* ஆரோக்கியத்தின் அவசியத்தை தெளிவுபடுத்துதல்
* பிரச்சினைகளை தாங்கவும், அதனை எதிர்நோக்கவும் வழிப்படுத்துதல்.
* உள, நல மேம்பாட்டை வழிப்படுத்துதல்
* வளர்ச்சிப்பருவங்களை இனங்கண்டு செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்
* பிள்ளைக்கு நம்பிக்கையை ஊட்டுதல்.
* பிள்ளையின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் குடும்பம், பாடசாலை, சமூகம் என்பவற்றிற்கு இசைந்து வாழ வழிபடுத்துதல்.

சகலதும் நிறைவாக அமைந்த பிள்ளைகளிடம் சில முக்கிய இயல்புகள் காணப்படும். தன்னை விரும்புவர், சுயாதீனமாக இயங்குபவர் நல்ல ஞாபசக்தி உள்ளவராக இருப்பர். கிரகிக்கும் ஆற்றல் உள்ளவராக இருப்பர். விதிகளை கடைப்பிடிப்பர். மகிழ்ச்சியாக விளையாடுவர். கல்வியில் ஆர்வம் காட்டுவர். புதிய விடயங்களை அறிய விரும்புவர்.

குற்ற உணர்வு, குடும்ப பிரிவு, சக மாணவர் ஒதுக்குதல், போர், எதிர்கால இலக்கு இல்லாமை, போஷாக்கு இன்மை, இயற்கை அனர்த்தம், தாழ்வுச்சிக்கல், வறுமை, கலாச்சார சீரழிவு, நோய்கள், வீட்டு வன்முறை அன்பானவரின் இழப்பு, கல்வியறிவற்ற பெற்றோர், பெற்றோரின் மது பாவனை, அன்பு, ஆதரவு பாதுகாப்பின்மை, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற காரணிகளும் ஒரு பிள்ளையை பாதித்து தாக்குகின்றன.

இவை யாவற்றிலும் இருந்து பிள்ளையை பாதுகாத்து வழிநடத்துவோமானால் நல்ல மாணவ சமுதாயம் உருவாகி அவர்களின் வாழ்க்கையும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு மாணவனுக்கு அவனது குடும்பம் முக்கியமான ஒரு தாக்கத்தை செலுத்துகின்றது. அவர்களின் வளர்ச்சியும், விருத்தியும் இங்கே முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது. ஆரம்பப்பிரிவு மாணவர்களில் இதன் தாக்கம் அளப்பரியது. குடும்பத்தின் அன்பும், ஆதரவும் மிக முக்கியமாகும். ஒரு பிள்ளையின் ஆரம்ப வளர்ச்சிப் பருவம் அவனது வாழ்க்கையில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பம் கட்டுப்பாடு உள்ளதாகவும், சுதந்திர செயற்பாட்டிற்கும் இடம் கொடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி தட்டிக்கொடுத்தல், புரிந்துணர்தல், நெகிழ்வுத்தன்மை, ஒழுக்கம் என்பனவும் இங்கே இருக்க வேண்டும்.

குடும்பங்களும் ஒரு பிள்ளையின் சுத்தம், உளத் தேவைகள், மருத்துவ வசதி, சுகாதார பழக்கவழக்கங்கள், நல்ல உணவு, தடுப்பூசிபோடுதல் போன்றவற்றிலும் கூடிய கவனம் எடுக்க வேண்டும். தற்போதைய காலகட்டங்களில் வாழ்ந்து வரும் சிறுவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களை சரியாக கட்டியெழுப்புவதில் பெற்றோரின் பங்கும் முக்கியமானதொன்றாகும். அவர்களின் பிரச்சனைகளை இனங்கண்டு நல்ல சூழலை ஏற்படுத்தி மகிழ்ச்சியுடன் சகலவற்றையும் அவர்களுக்கு சாதகமாக அமைத்தால் வெற்றி பெறலாம்.

இதே போன்று ஆரம்பப்பிரிவில் மாணவரின் வளர்ச்சிப்போக்கு பாரிய தாக்கத்தை செலுத்துகின்றது. ஆரம்பப்பிரிவிற்கு மாணவர்கள் வரும்போது பெரிய எதிர்பார்ப்புடன் காலடி எடுத்து வைக்கின்றார்கள். ஆகவே அவர்களை அணைத்துக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பும் ஆரம்ப்பிரிவினதே. கரிசனையும் சிறந்த மனநிலையும், உணர்வு சமநிலையும், தெளிவான சிந்தனையும், அமைதியான மனநிலையும், பொறுப்புணர்வும், பொறுமையும், நேர்மையான வாழ்க்கை முறையும், சுயமான விழிப்புணர்வும், சகல ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களிடமும் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி சிறிய மாணவர்களிடம் நல்ல பண்புகளை வளர்க்கவேண்டிய பொறுப்பும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களிடம் இருக்கவேண்டும். விளையாட்டு, கூட்டு முயற்சி, தலைமைத்துவ பண்பு, சேமிப்பு பழக்கம், பொறுப்புக்களை ஏற்று நடத்துதல் போன்றவற்றையும் வளர்த்து எடுக்க வேண்டும்.

இவர்களின் ஒவ்வொரு வளர்ச்சி பருவங்களிலும் அதாவது பிறப்பிற்கு முந்திய பருவம், குழந்தைப்பருவம், முன்பிள்ளைப் பருவம், பிள்ளைப்பருவம் என்பவற்றில் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். தேவையும், முயற்சியும் நேர்த்தியான கற்றலும் திட்டமிடலும் இருந்தால் குழந்தைகள் எங்கோ சென்று விடுவார்கள்.

முடிந்தளவு சிறுவயதிலிருந்து பிள்ளைகளை நல்லவர்களாக உருவாக்கும் செயற்பாடு மகத்தானது. இவர்களை குடும்பம், பாடசாலை, சமூகம் போன்ற சூழலில் சரியாக வளர்க்க வேண்டும். அவர்களில் காணப்படும் நல்ல செயல்களுக்கு பாராட்டு வழங்கி பரிசு கொடுத்து, ஆலோசனை வழங்கி வழிப்படுத்த வேண்டும். சிறு வயது முதல் பழக்கப்படும் ஒவ்வொரு செயல்களும் ஒரு ஒழுங்கு முறையாக இருக்க வேண்டும். பெற்றோர் ஆசிரியர்களின் பொறுமையும், முன்மாதிரியும், அன்பும், அரவணைப்பும் நேர்த்தியாக இருக்க வேண்டும். பிள்ளை ஆரோக்கியமாக இருக்கும் போது ஆரோக்கியமான பிரஜையாக மாறும். இவை சரியாக இருக்கும் போது நல்ல ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது திருமலை சாரணர் குழுவின் வளர்ச்சிப் போக்குகள்.

திரு.ந.வசந்தகுமார் (BA, Dip.In.Edu)
சாரண ஆசிரியர்
தி/புனித சூசையப்பர் கல்லூரி

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என வர்ணிக்கப்படும் இலங்கையின் கிழக்கிலே வெண்திரை கொஞ்சிக் குலாவும் இயற்கைத் துறைமுகமும், பாடல் பெற்ற திருகோணேஸ்வரமும் இணைந்த திருகோணமலையிலே தனக்கென ஒழுக்கம், கல்வி, விளையாட்டு ஆகியவற்றில் உயிர்ப்புக் கொண்ட கிறிஸ்தவ பாரம்பரியமிக்க கல்லூரி தி/புனித சூசையப்பர் கல்லூரி ஆகும்.

இக் கல்லூரியில் திருமலை மாவட்டத்திற்கான சாரணர் இயக்கம் 01.02.1920 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு பங்காற்றியவர் வணபிதா.ஜோன் பப்ரிஸ்ட் கிறேகொறி (அமதி) [Rev.Fr.John Bapist Gregory (OMI)] ஆவார். இதனால் இக் கல்லூரியினை 1ம் திருமலை சாரணர் குழு என அழைத்துக் கொள்கின்றனர். அக்காலத்திருந்து குருளைச் சாரணர்கள், சாரணர்கள், திரி சாரணர்கள், கடற் சாரணர்கள் என வளர்ந்து செல்லுகையில் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக கடற்சாரணர்களின் செயற்பாடுகள் இல்லாத போதும் ஏனைய துருப்புக்களின் பங்களிப்பும் கணிசமாகவே இருந்தன.

சாரணர்களின் உச்ச விருதான ஜனாதிபதி விருதையும் சில மாணவர்கள் பெற்றிருந்தனர். அது மாத்திரமின்றி சாரண ஆசிரியர்களின் உச்ச விருதான தருசின்னம் (WOOD BADGE) பெற்ற சில ஆசிரியர்களும் உள்ளனர். இவ்வாறான நிலையில் தற்போது குருளைச் சாரணர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள் என 60 சாரண மாணவர்களும், குருளைச்சாரண ஆசிரியர்கள், சாரண ஆசிரியர்கள் என 08 சாரண ஆசிரியர்களும் உள்ளனர். இவ் எண்ணிக்கையினை இரு மடங்காக இவ்வருடத்தில் அதிகரிப்பதற்கான செய்றபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது சாரணக்குழுவானது கல்லூரிப்பாசறை, மாவட்டப்பாசறை, தேசிய பாசறை, சர்வதேசப்பாசறை போன்றவற்றில் பங்குபற்றியுள்ளது. அதிலும் 27வது உலக சாரண ஜம்போறியானது 2011ம் ஆண்டிலே சுவீடனில் இடம்பெற்ற போது கல்லூரியின் சாரண ஆசிரியர்கள் திரு.சி.காண்டீபன், திரு.ந.வசந்தகுமார் ஆகியோர் பங்கு பற்றியுள்ளனர்.


உலகில் 2007ம் ஆண்டில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 100வது வருடத்தில் எமது சாரணர்க்குழு மாவட்டப்பாசறையில் 1வது நிலையினை பெற்றுள்ளதுடன் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட சாரணர் வார நிகழ்வுச் செயற்திட்டங்களை நிகழ்த்திய நிலையில் 3ம் இடத்தினையும் பெற்றுள்ளது வரலாற்றுச் சாதனை ஆகும்.

2017ம் ஆண்டில் 10 சாரணர்கள் மாவட்ட ஆணையாளர் நாடா விருதும், 05 சாரணர்கள் குருளைச் சாரண ஆசிரியர் விருதும், 04 சாரணர்கள் சாரண ஆசிரியர் விருதும் பெற்றுள்ளனர். அத்துடன் இலங்கை சாரணர் சங்கத்தின் 2012 – 2015 வரையான காலப்பகுதிக்கான சாரணர் சேவையில் பங்காற்றியவர்களுக்கான தேசிய விருது வழங்கல் 2017ல் இடம் பெற்ற போது கல்லூரியின் சாரண ஆசிரியர்களாக இருக்கும் திரு.சி.காண்டீபன், திரு.ந.வசந்தகுமார் ஆகியோர் விருதுகளைப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் சாரணர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமின்றி 2012வருட காலப்பகுதியில் ஆசிரியர் சேவையில் உயர் விருதான "பிரதீபா பிரபா" விருதினை சாரண ஆசிரியர் திரு.நா.கௌரிமேனன் அவர்கள் பெற்றுக்கொண்டதும் ஒரு சிறப்பான விடயமாகும்.இச்சாரணர் சேவையினை பாடசாலை மட்டத்தில் மேற்கொள்வதற்கு அதுவோர் இணைப்பாடவிதானச் செயற்பாடாகக் காணப்படுவதுடன் மாணவர்களை நற்பிரஜைகளாக்குவதும் ஆகும். அதனடிப்படையில், இலங்கைப் பாராளுமன்றத்தில் 1959ம் ஆண்டு அரசினால் நிறைவேற்றப்பட்ட 13ம் இலக்க சட்டத்தின் 4ம் பிரிவின் படி இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதான நோக்கம் கீழ்வருமாறு.

"சகல தரத்திலும் உள்ள சிறுவர்களுக்கு அவதானம், கீழ்ப்படிவு, தன்னம்பிக்கை ஆகிய பழக்க வழக்கங்களில் பயிற்சியளித்து அவர்களின் ஒழுக்கத்தை உருவாக்குவதன் மூலம் நற்பிரஜைகளாக விருத்தி செய்தல் பிறரைப் பற்றிய சிந்தனை, விசுவாசம், கட்டுப்பாடு ஆகியவற்றை ஊட்டுதல், பொதுமக்களுக்கு உதவும் சேவையையும் தங்களுக்கு உதவக்கூடிய கைவினைகளையும் பயிற்றுதல், உடல், உள, ஆன்மீக பொறுப்புக்களை வளர்த்தல் இவற்றின் மூலம் அவர்கள் இன, சமூக, சாதி, வர்க்க வேறுபாடு இன்றி இலங்கையின் நற்பிரஜைகள் ஆவர்" என்பதாகும்.

இப்பாரம்பரியத்தினைக் கொண்ட சாரணர் அமைப்பு நூற்றாண்டினைக் கடந்து அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. பல அமைப்புகள் தோற்றுவதும் மறைவதுமாக காணப்படும் நிலையில் "எப்பொழுதும் தயாராயிரு (Be Prepared) எனும் மகுடவாசகத்தினைக் கொண்ட சாரணியத் தந்தையான றொபேட் ஸ்ரீபன்சன் சிமித் பேடன் பவல் பிரபு (Robet Stephenson smyth Baden powell – 1857 – 1941) அவர்களால் உருவாக்கிய இவ் அமைப்பு தொடர்ந்தியங்கும் தன்மையினைக் கொண்டிருப்பதனை யாவரும் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி / புனித சூசையப்பர் கல்லூரியின் சென் ஜோன் அம்புலன்ஸ் படையணி

திரு.ஆ.ஜெயநேசன் (ஆசிரியர்)
கோப் சுப்ரிண்டன், முதலுதவி பயிற்றுவிப்பாளர்,
புனித ஜோண் அம்புலன்ஸ் பிரிவு,
புனித சூசையப்பர் கல்லூரி,
திருகோணமலை

திருக்கோணமலை மாவட்டத்தில் கல்வி பணியாற்றிவரும் கல்லூரிகளில் தனித்துவமானது புனித சூசையப்பர் கல்லூரி ஆகும். தனது 150வது ஆண்டு கல்வி பயணத்தில் பல சாதனைகளைப் படைத்து வெற்றிகளிப்பில் வீறு நடைபோடுகின்றது. இப் பயணத்தில் புனித ஜோண் அம்புலன்ஸ் படையணியும் கடந்த 19 ஆண்டுகள் பயணித்ததை இட்டு பெருமையடைகின்றோம்.

“மனித குலத்தின் சேவைக்காக” என்ற மகுட வாக்கியத்துடன் பணியாற்றும் இப்படையானது 1997ம் ஆண்டு திரு.ச. தேவசகாயம்அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதைய அதிபராக பணியாற்றிய அருட்சகோதரர் சூசைதாஸன் அவர்களின் வழிகாட்டலில் “எகட்” நிறுவனத்தின் நிதி அநுசரணையுடன் எமது கல்லூரியின் 17 மாணவர்கள் உட்பட 14 பாடசாலைகளை சேர்ந்த தமிழ் , சிங்கள மாணவர்கள் 94 பேருக்கு 1997ம் ஆண்டு பதுளையிலிருந்து அழைத்து வரப்பட்ட சிறப்பு பயிற்சியளார்களின் பயிற்சியுடன் இப் படையணியின் செயற்பாடுகள் ஆரம்பமானது. ஆரம்பத்தில் எமது கல்லூரியின் அங்கத்தவர்கள் சிறிய இடம் ஒன்றினைப் பெற்று பாடசாலையில் ஏற்படும் சிறு விபத்துக்களுக்கான முதலுதவி பணியினை மேற்கொண்டனர். இது அதிபர், ஆசிரியர்களின் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்றது. இதனைத்தொடர்ந்து பாடசாலையின் விளையாட்டுப்போட்டிகள் , மாவட்ட மட்டத்திலான விசேட நிகழ்வுகள் , சுதந்திர தின விழாக்கொண்டாட்டங்கள், பிரசித்தி பெற்ற கோவில்களின் திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகளில் தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றனர்.

முதல் தடவையாக 1998ம் ஆண்டில் தேசிய பாசறையில் இருவர் மட்டுமே கலந்துக்கொண்டனர். அதில் திரு. முருகையா என்பவர் எமது கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தினார். பின் 2000ஆம் ஆண்டு ஹங்வெல்லையில் நடைபெற்ற தேசிய பாசறையில் எமது கல்லூரியின் படையினர் பல போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளை தமதாக்கிக்கொண்டனர். முதலாவது மாவட்ட பாசறை எமது கல்லூரியில் 2010ஆம் ஆண்டு நடைபெற்றது சிறப்பு அம்சமாகும். இதனையும் தாண்டி சர்வதேச பாசறை மலேசியாவில் நடைபெற்றது. இதில் திருமலை மாவட்டத்திலிருந்து நான்கு பேர் பங்குப்பற்றினர். அவர்களில் ஒருவர் எமது கல்லூரி மாணவர் திரு. எஸ். சொரூபன் பங்குபற்றியது சிறப்பம்சமாகும். இப் படையினை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு பணியாற்றி உதவி மாவட்ட ஆணையளாராக பதவி உயர்வு பெற்று தற்போதும் பணியாற்றிக்கொண்டு இருக்கும் திரு. யூட் நிலோஜ் , திரு. ஜெய பிரகாஸ் (தற்போதைய மாவட்ட ஆணையாளர்) , திரு. எஸ். பிரகாஸ் என்போர் இப்படையணியின் இணைந்த முதற் தொகுதியில் இணைந்த மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது படையணியின் பிராந்திய அத்தியட்சகளை நோக்குவோமானால் முதலாவது ஆரம்ப கர்த்தாவாக திரு. ச. தேவசகாயம் அவர்கள் சிறப்பாக பணியாற்றினார். அவர் பதவி உயர்வு பெற்று செல்ல திரு. உமா மகேஸ்வரன் அவர்கள் அப்பணியினை ஏற்று நடாத்தினார். சம காலத்தில் அவர் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவாகிச்செல்ல திரு. தா. கௌரிமேனன் அவர்கள் அப் பொறுப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்று சிறப்பாக செயற்பட்டார். இக் காலப்பகுதியில் புனித ஜோண் அம்புலன்ஸ் படையணியின் கிட்டி எனப்படும் சிறுவர் பிரிவினையும் ஆரம்பித்து திருகோணமலை மாவட்டத்தின் கிட்டி படையணிகளுக்கான இணைப்பாளராக செயற்பட்டார். திருமலை மாவட்டதின் முதன் முதலில் கிட்டி ஆரம்பிக்கப்பட்டது எமது பாடசாலையில் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து திரு. தா. கௌரிமேனன் உதவி மாவட்ட ஆணையாளராக செல்ல திரு. சி. சிவகாந்தன் அவர்கள் அப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டு சிறப்பாக படையணியை வழி நடத்தி சென்றார். பின் அவரும் பதவி உயர்வு பெற்று உதவி மாவட்ட ஆணையாளராகி செல்ல திரு. ஆ. ஜெயநேசன் அவர்கள் அப் பொறுப்பனை ஏற்று சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ் படையணி, கிட்டி படையணி போன்றவற்றை வழிநடத்தி சென்றார். இக் காலப்பகுதியில் எமது படையணியின் உதவி மாவட்ட ஆணையாளர்யான திரு. அ. அகிலன் அவர்களும் இச் செயற்பாடுகளுக்கு பக்க துணையாக செயற்பட்டார். பின் திரு. ஆ. ஜெயநேசன் அவர்கள் கோப் சுப்பிரண்டனாக பதவி உயர்வு பெற திரு. எ. சில்வஸ்டர், திரு. என். எம் அஹிப் போன்றோர் பிராந்திய அத்தியட்சகராக பதவி ஏற்று இன்று வரை சிறப்பாக செற்பட்டு வருகின்றனர்.

எமது கல்லூரியின் புனித ஜோண் படையணியின் வெளியிடுகளை நோக்கின் உதவி மாவட்ட ஆணயைாளர்களாக திரு. தா. கௌரிமேனன், திரு. சி. சிவகாந்தன், திரு. அ. அகிலன் போன்றோரும் கோப் சுப்பிரண்டனாக திரு.ஆ.ஜெயநேசனும் பிராந்திய அத்தியட்சகர்களாக திரு.எ.சில்வஸ்டர், திரு. என்.எம்.ஆஹிப் போன்றோரும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மாவட்ட முதலுதவி பயிற்றுவிப்பாளர்களாக திரு.ஆ.ஜெயநேசன். திரு.தா.கௌரிமேனன், திரு.அ.அகிலன் போன்றோர் செயற்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு பொறுப்பாக எமது கல்லூரியின் முன்னை நாள் மாணவர் திரு.ஜெ.ஜெயப்பிரகாஸ் அவர்கள் மாவட்ட ஆணையளாராக கடமையாற்றுவதும் எமது கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். தொடர்ந்து 17 பேருடன் ஆரம்பித்த எமது கல்லூரியின் புனித ஜோண் அம்புலன்ஸ் படையணி தற்போது 120ற்கு மேற்பட்ட அங்கத்தவாகளுடன் சிறப்பு மிக்க ஒரு படையணியாக செயற்படுவதற்கு ஆதரவளிக்கின்ற கல்லூரி அதிபர் மாவட்ட ஆணையாளர் உதவி மாவட்ட ஆணையாளர்கள், கல்லூரி சமூகத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோரின் மேலான ஆதரவுடன் இன்னும் சிறப்பாக செற்படும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால இலக்கை அடைவதற்கான தொழில் வழிகாட்டல்

**Mr.G.Thaveendran (MBA)**
**H.R.D.O**
**District Labour Office,**
**Trincomalee.**

வழிகாட்டலினதும் ஆலோசனை வழங்குவதினதும் குறிக்கோளானது ஒருவருக்கு தமது பிரச்சனையைத்தாமாகவே தீர்த்துக்கொள்ள உதவி புரிதலாகும். அத்துடன் தமக்கு தேவையான அனைத்து தகவல்களையும் பெறுவதாகும். ஒருவர் தான் தீர்மானித்துக்கொண்ட பாதையில் செல்வதற்கு தேவையான தகவல் கிடைக்காமை, ஆற்றல், தன்னம்பிக்கை இல்லாமல் இருக்கக்கூடும். இவ்வாறான சந்தர்பத்தில் தொழில் வழிகாட்டல் மூலம் கிடைக்கும் உதவி மூலம் அவரது ஊக்கம், மனோதிடம் அதிகரித்து அந்நபர் தனது தான் தீர்மானித்துக்கொண்ட பாதையில் திடமாக செல்லலாம்.

தொழில் வழிகாட்டல் எனும் எண்ணக்கருவானது சிறந்த ஒரு கற்கைநெறியாக அல்லது தொழில் இலக்கினை அடிப்படையாக கொண்டதாகும். Career guidance & Development என்பது தொடர்ந்து செல்லும் நடைமுறையாகும். அறிவினையும் திறனையும் வளர்ப்பதனுடாக ஒருவர் தனது தொழில் இலக்கினை அடையமுடியும்.

ஏன் தொழில் வழிகாட்டல் தேவைப்படுகின்றது.

தற்போது பெரும்பாலான இளம் சந்ததியினரிடையே/ மாணவர்களிடையே பல குறைபாடுகள் காணப்படுகின்றன அவையாவன........

* **எதிர்காலத்திற்கான திட்டம் இன்மை**
* **ஏனையோரை பின்பற்றுகின்ற கலாச்சாரம்**
* **ஏனையோரின் செல்வாக்கினூடான தெரிவுகள்**
* **பெற்றோருடைய திணிப்பினூடான தெரிவுகள்**
* **தற்கால தொழில் போக்கினூடான தெரிவுகள்**
* **குறைந்தளவிலான ஊக்கப்படுத்தல்கள்**
* **ஏதாவது ஒன்றுக்கு பாய்தல்**
* **தனது வாழ்கையை/ தொழிலை கண்டுபிடிக்க தவறுகின்றமை**
* விநோத உலகத்தை நோக்கிய வாழ்கை விருப்பம்.

மேலும் தற்போதைய இளைஞர்களிடையே காணப்படுகின்ற போக்குகளான பெற்றோர் ஆசிரியருடன் கொண்டிருக்கின்ற குறைந்தளவிலான ஈடுபாடுகள், இலக்கற்ற செயற்பாடுகள், பொறுப்புணர்வும், மன ஒருமைப்பாடும் குறைவடைந்தமை, அதிகரித்து வருகின்ற போட்டித்தன்மையை கவனத்திலெடுக்காமை போன்ற காரணங்களால் தொழில் வழிகாட்டல் தேவைப்படுகின்றது. புதிய துறைகள், புதிய தொழில் நுட்பதுறைகள்இஎதிர்கால தொழில்கள் மற்றும் மாணவரின் தொழில் விருப்பம் போன்றவற்றை கருத்திற்கொண்டு சரியான பிரிவுகளில் தங்களை இணைத்து தமது உயர்கல்வியை மாணவர்கள் படித்து வருகின்றார்கள். உயர் கல்வியின் பின்பு தாங்கள் சேரக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை, எது பல்கலைக்கழகம் எது என்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபடத்தொடங்குவது வழக்கம். நாளுக்கு நாள் மாறிவரும் தொழில் நுட்பம் புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய கற்கைநெறிகள் உருவாகிவரும் இன்றைய காலத்தில் மாணவர்கள் எதை தேர்ந்தெடுப்பது எதில் இணைவது என குழப்பத்தில் இருக்கும் நிலையில் காணப்படுவர்.

இது போன்ற சமயங்களில் தமது விருப்பம், பெற்றோரின் விருப்பம், அதிக பிரபல்யமான, கிராக்கியான தொழில், சம்பளம் கூடிய தொழில் போன்றவற்றை கவனத்தில் எடுத்து தமது கற்கை நெறிகளை தெரிவு செய்யலாம். அல்லாது விடின் மாறிவரும் வருங்கால வேலைவாய்ப்புக்குறித்து ஆலோசனைகளை, ஆசிரியர், பெற்றோர், கல்வி ஆலோசகர்கள், தொழில்வழிகாட்டல் ஆலோசகர்கள் போன்றோரிடம் பெற்று தமது கற்கைநெறி தெரிவினை மேற்கொள்ள முடியும்.

பொறியியல் தொழில் நுட்ப பிரிவு, உயிர் முறைமைகளை தொழில் நுட்ப பிரிவு ஆகிய துறைகளில் படிப்பதன் மூலம் மேற்படிப்பு, பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் அதேபோல் அரச துறை, தனியார்துறை என பெரும்பாலான துறைகளில் வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. எதிர்காலத்தில் அதிக வேலைவாய்ப்பு உள்ள பிரிவு இவைதான்.

இளைஞர்களின் மனங்களில் உயர்கல்வியினைப் பெறுவதே இறுதிக்கனவாக காணப்படுகின்றது. நவீன அறிவு திறமைகள் நல்ல மனோ நிலை போன்றவற்றை மட்டுமல்லாமல் அவர்கள் தெரிவு செய்த தொழில் முன்னேறுவதற்கான புத்தி கூர்மையும் கொண்ட அறிவாளிகளாக உருவாக்குவது பல்கலைக்கழகங்களினதும் உயர்கல்வி நிறுவனங்களினதும் பொறுப்பாகும். இலங்கையின் இலவசக்கல்வி எனும் வரப்பிரசாதம் பல்கலைக்கழக பட்டப்படிப்பு வரை தொடர்கின்றது. இதனால் இங்கே பல்கலைக்கழக தெரிவு என்பது மிகவும் போட்டிக்குரியதாக காணப்படுகின்றது. 2014ம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 27605 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டார்கள். விண்ணப்பித்த 60,000 மாணவர்களில் 27605 மட்டுமே தெரிவுசெய்யப்பட்டார்கள்

இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழுவானது பின்வரும் அரச பல்கலைக்கழகங்களுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்களை தெரிவுசெய்தலை மேற்கொள்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1 | கொழும்பு பல்கலைக்கழகம் | 13 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் |
| 2 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 14 | கட்டிட அரங்கேற்ற பல்கலைக்கழகம் |
| 3 | சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 15 | சிறீ பாளி வளாகம் |
| 4 | களனி பல்கலைக்கழகம் | 16 | திருகோணமலை வளாகம் |
| 5 | மொறட்டுவ பல்கலைக்கழகம் | 17 | வவுனியா வளாகம் |
| 6 | யாழ்ப்பாணப பல்கலைக்கழகம | 18 | சுதேச மருத்துவ நிறுவனம் |
| 7 | உறுகுணைப் பல்கலைக்கழகம் | 19 | கம்பகா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவனம் |
| 9 | கிழக்கு பல்கலைக்கழகம் | 20 | கொழும்பு பல்கலைக்கழக கனணிக் கல்லூரி |
| 10 | இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் | 21 | சுவாமிவிபுலானந்த அழகியற் கற்கை |
| 11 | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 22 | இராமநாதன் நுன்கலைக்கழகம் |
| 12 | வயம்ப பல்கலைக்கழகம் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் விண்ணப்பம் கோரப்படும் போது விண்ணப்பிக்க முடியும். பல்கலைக்கழக ஆணைக்குழுவின் மேற்பார்வையில் பாரளுமன்ற விசேட சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும் வருமாறு,

1. மனிதவள மேம்பாட்டு நிறுவகம் - கொழும்பு பல்கலைக்கழகம்
2. தொழில் நுட்ப நிறுவகம் - மொறட்டுவ பல்கலைக்கழகம்
3. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
4. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
5. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
6. தொழில், தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
7. இலங்கை கடல் சார் பல்கலைக்கழகம்
8. இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (SLIATE)
9. எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் (IET-NAITA)

மேற்குறிப்பிட்டுள்ள கல்வி நிறுவகங்களுக்கு அவற்றால் விண்ணப்பங்கள் கோரப்படும்போது விண்ணப்பிக்க முடியும்.

• அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான அனுமதி க.பொ.த (உ.த)
பரீட்சையில் உள்ள பாடங்கள் பின்வருமாறு ஆறு(6) முக்கிய பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

1. கலைப்பிரிவு
2. வணிகவியல் பிரிவு
3. உயிரியல் விஞ்ஞான பிரிவு
4. பௌதீக விஞ்ஞான பிரிவு
5. பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
6. உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு

கலைப்பிரிவிற்கு மாத்திரம் தீவளாவிய திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும். இருப்பினும் பின்வரும் கலைப்பிரிவு கற்கை நெறிகளுக்கு மாணவர்களை தெரிவு செய்வதில் விதிவிலக்கு காணப்படுகின்றது.

இக்கற்கைநெறிகளுக்கான தெரிவு, மாவட்ட திறமை மூலப்பிரமாண அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

1. சங்கீதம்
2. நடனம்
3. நாடகமும் அரங்கியலும்
4. கட்புலக்கலை
5. கட்புல மற்றும் தொழில்நுட்ப கலை
6. சித்திரமும் வடிவமைப்பும்

வணிகப்பிரிவு, உயிரியல் விஞ்ஞானபிரிவு, பௌதீக விஞ்ஞானபிரிவு, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப பிரிவு, மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு போன்ற சகல பிரிவுகளுக்குமாண அனுமதிகள் பின்வரும் மூலப்பிரமாண அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தீவளாவிய திறமை அடிப்படையில் Z புள்ளி நிரலின் வரிசை ஒழுங்கில் கிட்டுகின்ற இடங்கள் 40% வரை நிரப்பப்படும்.

2. மீதமுள்ள 60% த்தில் 55% வரையிலான இடங்கள் நாட்டின் மொத்த சனத்தொகையின் பிரிவிலும் ஒவ்வொரு மாவட்ட சனத்தொகையின் விகிதாசாரப்படி 25 மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்படும்.

3. எஞ்சிய 5% வரையிலான இடங்கள் விசேட ஒதுக்கீடாக கல்வியில் பின் தங்கிய 16 மாவட்டங்களுக்கு மாவட்ட சனத்தொகை விகிதாசாரப்படி ஒதுக்கப்படும்.

கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்ட மாவட்டங்கள் வருமாறு,

| | |
|---|---|
| 1. நுவரெலியா | 2. மட்டக்களப்பு |
| 3. அம்பாந்தோட்டை | 4. அம்பாறை |
| 5. யாழ்ப்பாணம் | 6. புத்தளம் |
| 7. கிளிநொச்சி | 8. அநுராதபுரம் |
| 9. மன்னார் | 10. பொலநறுவை |
| 11. முல்லைத்தீவு | 12. பதுளை |
| 13. வவுனியா | 14. மொனராகலை |
| 15. திருகோணமலை | 16. இரத்தினபுரி |

பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதிகள்

1. க.பொ.த உயர்தரத்தில் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 35 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.
2. பொது அறிவில் ஆகக்குறைந்தது 30 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த.(உ/த) பரீட்சையில் **கலைப் பாடப்பிரிவில்** பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் பின்வரும் கற்கை நெறிகளுக்கும் அனுமதியை நாடலாம் என்பதைக் கவனத்திற்கெடுக்கவும். ஆயினும், அக்கற்கை நெறிகளுக்கான அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | சட்டம் | 14 | உடற்றொழில் கல்வி |
| 2 | கட்டடக்கலை | 15 | விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் |
| 3 | வடிவமைப்பு | 16 | பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் |
| 4 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும | 17 | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் |
| 5 | முகாமைத்துவ கற்கைகள் (TV) | 18 | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் |
| 6 | கணிய அளவையியல் | 19 | சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் |
| 7 | தகவல் தொழில்நுட்பம் | 20 | தகவல் முறைமைகள் |
| 8 | பட்டினமும் நாடும் திட்டமிடல் | 21 | நிலத்தோற்றக் கட்டடக்கலை |
| 9 | தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | 22 | மொழி பெயர்ப்பு கற்கைகள் |
| 10 | கணக்கிடலும் முகாமைத்துவமும் | 23 | திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் |
| 11 | தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | 24 | செயற்திட்ட முகாமைத்துவம் |
| 12 | கைத் தொழில் தகவல் தொழில்நுட்பம் | 25 | உணவு வியாபார முகாமைத்துவம் |
| 13 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.(உ/த) பரீட்சையில் **வணிகவியற் பாடப்பிரிவில்** பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் பின்வரும் கற்கை நெறிகளுக்கும் அனுமதியை நாடலாம் என்பதைக் கவனத்திற்கெடுக்கவும். ஆயினும், அக்கற்கை நெறிகளுக்கான அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | முகாமைத்துவம் | 16 | கணக்கிடலும் முகாமைத்துவமும் |
| 2 | முகாமைத்துவம் (பொது சிறப்பு) | 17 | தொழில் முயற்சியும் முகாமைத்துவமும |
| 3 | சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடு | 18 | கைத் தொழில் தகவல் தொழில்நுட்பம் |
| 4 | வணிகவியல் இவற்றுடன் | 19 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) |
| 5 | சட்டம் | 20 | உடற்றொழில் கல்வி |
| 6 | கலை (SAB) | 21 | விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் |
| 7 | கணிய அளவையியல | 22 | விருந்தோம்பல்இசுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் |
| 8 | தகவல் தொழில்நுட்பம் | 23 | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் |
| 9 | கட்டடக்கலை | 24 | சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் |
| 10 | வடிவமைப்பு | 25 | தகவல் முறைமைகள் |
| 11 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | 26 | நிலத்தோற்றக் கட்டடக்கலை |
| 12 | பட்டினமும் நாடும் திட்டமிடல் | 27 | மொழி பெயர்ப்பு கற்கைகள் |
| 13 | சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 28 | திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் |
| 14 | தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | 29 | செயற்திட்ட முகாமைத்துவம் |
| 15 | வசதிகள் முகாமைத்துவம் | 30 | உணவு வியாபார முகாமைத்துவம |

க.பொ.த.(உ/த) பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானப் பாடப்பிரிவில்** பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் பின்வரும் கற்கை நெறிகளுக்கும் அனுமதியை நாடலாம் என்பதைக் கவனத்திற்கெடுக்கவும். ஆயினும், அக்கற்கை நெறிகளுக்கான அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| 1 | மருத்துவம் | 33 | கட்டடக்கலை |
| 2 | பல் அறுவைச் சிகிச்சை | 34 | வடிவமைப்பு |
| 3 | விலங்கு மருத்துவ விஞ்ஞானம் | 35 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் |
| 4 | விவசாய தொழிநுட்ப முகாமைத்துவம் | 36 | முகாமைத்துவ கற்கைகள் (TV) |
| 5 | விவசாயம் | 37 | தகவல் தொழில்நுட்பம் |
| 6 | விவசாய விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 38 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் |
| 7 | உணவுஇ விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 39 | கட்டடக்கலை |
| 8 | ஆயுர் வேதம் | 40 | வடிவமைப்பு |
| 9 | யுனானி | 41 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் |
| 10 | சித்த மருத்துவம் | 42 | முகாமைத்துவ கற்கைகள் (TV) |
| 11 | உயிரியல் விஞ்ஞானம் | 43 | பட்டினமும் நாடும் திட்டமிடல் |
| 12 | பிரயோக விஞ்ஞானம் | 44 | சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் |
| 13 | சுகாதாரவிருத்தி | 45 | தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் |
| 14 | தாதியர் | 46 | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| 15 | மருந்தகவியல் | 47 | |
| 16 | மருத்துவ ஆய்வுடைய விஞ்ஞானம் | 48 | கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| 17 | ஊடு கதிர்ப்படமெருப்பு | 49 | தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் |
| 18 | இயன் மருத்துவம் | 50 | கைத் தொழில் தகவல் தொழில்நுட்பம் |
| 19 | மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் | 51 | கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் |
| 20 | உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும். | 52 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) |
| 21 | விவசாய வள முகாமைத்துவமும் தொழில் நுட்பமும் | 53 | உடற்றொழில் கல்வி |
| 22 | விவசாய வியாபார முகாமைத்துவம் | 54 | விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் |
| 23 | பசுமை தொழில்நுட்பம் | 55 | பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் |
| 24 | விலங்கு விஞ்ஞானம் | 56 | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் |
| 25 | ஏற்றுமதி விவசாயம் | 57 | பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் |
| 26 | நீர்வழங்கள் தொழில்நுட்பம் இவற்றுடன் | 58 | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் |
| 27 | மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானங்களும் | 59 | சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் |
| 28 | சூழல் பேணலும் முகாமைத்துவம் | 60 | தகவல் முறைமைகள் |
| 29 | விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் | 62 | நிலத்தோற்றக் கட்டடக்கலை |
| 30 | சட்டம் | 63 | மொழி பெயர்ப்பு கற்கைகள் |
| 31 | திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் | 64 | கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானம் |
| 32 | செயற்திட்ட முகாமைத்துவம் | 65 | உணவு வணிக முகாமைத்துவம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.(உ/த) பரீட்சையில் **பௌதீக விஞ்ஞானப் பாடப்பிரிவில்** பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் பின்வரும் கற்கை நெறிகளுக்கும் அனுமதியை நாடலாம் என்பதைக் கவனத்திற்கெடுக்கவும். ஆயினும், அக்கற்கை நெறிகளுக்கான அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | பொறியியல் | 27 | தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் (ICT) |
| 2 | பொறியியல் (நில வளங்கள் பொறியியல்) | 28 | வசதிகள் முகாமைத்துவம் |
| 3 | பொறியியல் (புடவை மற்றும் துணி தொழில்நுட்பம்) | 29 | கணக்கிடலும் முகாமைத்துவமும் |
| 4 | பௌதீக விஞ்ஞானம் | 30 | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| 5 | கணிணி விஞ்ஞானம் | 31 | கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| 6 | பிரயோக விஞ்ஞானம் | 32 | தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் |
| 7 | போக்குவரத்தும் ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும் | 33 | இயன் மருத்துவம் |
| 8 | கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் இவற்றுடன் | 34 | தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் |
| 9 | புள்ளி விபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் | 35 | கைத் தொழில் தகவல் தொழில்நுட்பம் |
| 10 | கணக்கிடலும் தகவல் முறைமைகளும் | 36 | கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் |
| 11 | பௌதீக விஞ்ஞானமும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | 37 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) |
| 12 | கணிய அளவையியல் | 38 | உடற்றொழில் கல்வி |
| 13 | கட்டடக்கலை | 39 | விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் |
| 14 | வடிவமைப்பு | 40 | பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் |
| 15 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | 41 | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் |
| 16 | சட்டம் | 42 | பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் |
| 17 | முகாமைத்துவ கற்கைகள் (TV) | 43 | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் |
| 18 | அளவையியல் விஞ்ஞானம் | 44 | சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் |
| 19 | தகவல் தொழில்நுட்பம் | 45 | தகவல் முறைமைகள் |
| 20 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | 46 | நிலத்தோற்றக் கட்டடக்கலை |
| 21 | பட்டினமும் நாடும் திட்டமிடல் | 47 | செயற்திட்ட முகாமைத்துவம் |
| 22 | சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 48 | மொழி பெயர்ப்பு கற்கைகள் |
| 23 | அளவையியல் விஞ்ஞானம் | 49 | திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் |
| 24 | மென்பொருள் பொறியியல் | 50 | உணவு வணிக முகாமைத்துவம் |
| 25 | கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானம் | | |

நாட்டில் உயர்தரம் கல்விபயிலும் மாணவர்களில் மூன்றில் இரண்டு வீதமானவர்கள் கலைப்பிரிவு மாணவர்களாக உள்ளனர். கலை துறையினை மாணவர்கள் தெரிவுசெய்வதில் இரண்டு வகையான பண்புகள் தற்போது காணப்படுகின்றன. அதில் ஒன்று மாணவர்கள் ஏனைய துறைகளை தெரிவு செய்வதற்கான தகைமை குறைந்தவர்களாக காணப்படல். மற்றது இலகுவாக சித்தி அடையலாம் என்று எண்ணுவதாகும். இதனால் அரசு எதிர் நோக்கும் பாரிய சவாலாக கலைத்துறையில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு உரிய வேலை வாய்ப்பினை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே புதிய துறையான தொழில்நுட்ப துறையினை அறிமுகப்படுத்தியுள்ளனர். தொழில்நுட்ப துறையின் சிவில் தொழில்நுட்பம், மெக்கானிக்கல் தொழில்நுட்பம், உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பம், உயிர்வள தொழில்நுட்பம்தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதே போல் கலை பிரிவு மாணவர்கள் தெரிவு செய்வதற்கு சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும், கட்புலக்கலை, கட்புல மற்றும் தொழில்நுட்ப கலை, சித்திரமும் வடிவமைப்பும் போன்ற பாடங்களும் இருக்கின்றன.

எனவே இம் மாணவர்கள் தொழில்நுட்ப பாடங்களில் புள்ளிகளை அதிகமாக பெறுவதன் மூலம் தமக்கான Z புள்ளியினை அதிகரித்துக் கொள்ள முடியும்

## பொறியியல் தொழில்நுட்பம்

**அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் பொறியியற் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் "S" சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் "S" சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| 1 | பொருளியல் | 7 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் |
| 2 | புவியியல் | 8 | சித்திரக் கலை |
| 3 | மனைப்பொருளியல் | 9 | வணிகக் கல்வி |
| 4 | ஆங்கில மொழி | 10 | விவசாய விஞ்ஞானம் |
| 5 | கணக்கீடு | 11 | கணிதம் |
| 6 | தொடர்பாடல் ஊடகக் கற்கைகள் | | |

க.பொ.த (உ/த) பரீட்சையில் பொறியியில் தொழில்நுட்ப பிரிவில் தோற்றிய பரீட்சார்த்திகள் கீழே நிரற்படுத்தப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்குரிய அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின், பின்வரும் கற்கைநெறிகளுக்கு அனுமதியை கோரலாம் என்பதைக் கவனத்திற்கெடுக்கவும்

| | | | |
|---|---|---|---|
| 1 | முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 10 | தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் |
| 2 | தகவல் தொழில்நுட்பம் | 11 | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் |
| 3 | சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 12 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) |
| 4 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) | 13 | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் |
| 5 | விளையாட்டும் விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | 14 | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் |
| 6 | உடற்றொழில் கல்வி | 15 | மொழி பெயர்ப்பு கற்கைகள் |
| 7 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | 16 | திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் |
| 8 | வடிவமைப்பு | 17 | செயற்திட்ட முகாமைத்துவமும் |
| 9 | கணக்கிடலும் முகாமைத்துவமும் | 18 | ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் முறைகள் தொழிநுட்ப பிரிவு

### அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிர் முறைமைகள் தொழிநுட்ப பாடத்திற்கு தகுதிபெறுவதற்கு விண்ணப்பதாரிகள் தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் ஆகிய "S" சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் "S" சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| 1 | பொருளியல் | 7 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் |
| 2 | புவியியல் | 8 | சித்திரக் கலை |
| 3 | மனைப்பொருளியல் | 9 | வணிகக் கல்வி |
| 4 | ஆங்கில மொழி | 10 | விவசாய விஞ்ஞானம் |
| 5 | கணக்கீடு | 11 | கணிதம் |
| 6 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி | | |

க.பொ.த (உ/த) பரீட்சையில் **உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல் பிரிவில்** தோற்றிய பரீட்சார்த்திகள் கீழே நிரற்படுத்தப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்குரிய அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின், பின்வரும் கற்கைநெறிகளுக்கு அனுமதியை கோரலாம் என்பதைக் கவனத்திற்கெடுக்கவும்

| | | | |
|---|---|---|---|
| 1 | முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 10 | தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் |
| 2 | தகவல் தொழில்நுட்பம் | 11 | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் |
| 3 | சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 12 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) |
| 4 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் (ICT) | 13 | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் |
| 5 | விளையாட்டும் விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | 14 | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் |
| 6 | உடற்றொழில் கல்வி | 15 | மொழி பெயர்ப்பு கற்கைகள் |
| 7 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | 16 | திரைப்படமும் தொலைக்காடசி கற்கைகள் |
| 8 | வடிவமைப்பு | 17 | செயற்திட்ட முகாமைத்துவமும் |
| 9 | கணக்கிடலும் முகாமைத்துவமும் | 18 | ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

## அனுமதிக்கான ஆகக் குறைந்த தகமைகள்

க.பொ.த (உ/த) பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல் (ICT), மற்றும் தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT) மற்றும் பொறியியற் தொழிநுட்பவியல் (ET) அல்லது உயிர் முறைமைகள் தொழினுட்பம் (BST) ஆகிய பாடங்களில் "S" சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த (உ/த) பரீட்சையில் **தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவில்** தோற்றிய பரீட்சார்த்திகள் கீழே நிரற்படுத்தப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்குரிய அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின், பின்வரும் கற்கைநெறிகளுக்கு அனுமதியைக் கோரலாம் என்பதைக் கவனத்தில் எடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 8 | தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் |
| 2 | சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 9 | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் |
| 3 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் (ICT) | 10 | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) |
| 4 | விளையாட்டும் விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | 11 | விருந்தோம்பல்இ சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் |
| 5 | உடற்றொழில் கல்வி | 12 | மொழி பெயர்ப்பு கற்கைகள் |
| 6 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | 13 | திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் |
| 7 | வடிவமைப்பு | 14 | செயற்திட்ட முகாமைத்துவமும |

குறித்த ஆண்டில் பல்கலைகழகம் செல்ல முடியாத மாணவர்களில் குறிப்பிட்ட வீதத்தினர் கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்படுவர். இலங்கை ரீதியான 17 கல்வியியல் கல்லூரிகள் இயங்குகின்றன. அவற்றில் 6 கல்வியல் கல்லூரிகளில் தமிழ் மொழி மூலம் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தமிழ் மொழி மூலம் செயற்பாடுகின்ற கல்வியல் கல்லூரிகளாவன...

1. வவுனியா கல்வியல் கல்லூரி
2. சிறீபாத கல்வியல் கல்லூரி
3. அட்டாளைச்சேனை கல்வியல் கல்லூரி
4. மட்டக்களப்பு கல்வியல் கல்லூரி
5. யாழ்பாணம் கல்வியல் கல்லூரி
6. தர்க்கா நகர் கல்வியல் கல்லூரி (காலி)

எனவே கல்வியல் கல்லூரிகளுக்கான விண்ணப்பம் கோரப்படும் போது மாணவர்கள் தமது ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து தமது புள்ளிகளுக்கேற்ற பொருத்தமான பாடநெறிகளுக்கு தகுதியான கல்வியல் கல்லூரிகளை தேர்ந்தெடுத்து விண்ணப்பிக்கலாம்.

மேலும் இலங்கையில் நிபுணத்துவ கல்வியின் ( Profissional Education) பட்டைய சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களும் செயற்படுகின்றன. அவையாவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Profissional Charters Institutes**

1. Institute of Chartered Accountant of Sri Lanka.
2. Institution of Engineers Sri Lanka
3. Sri Lanka Institute Of Architects
4. Institute of Quantity Surveyors Sri Lanka
5. Institute of Chimstry Ceylon
6. Institute of Certified Managemnet Accountant of Sri Lanka

## தொழில்கல்வியை நாடும் மாணவர்களுக்கு...

பாடசாலையை விட்டு விலகும் மாணவர்கள் பல வழிகளில் தமது தொழில் விருத்தி பாதையை தீர்மானிக்கலாம். அவற்றை பின்வரும் 03 பிரிவுகளில் உள்ளடக்கலாம் அவையாவன,

1. கற்கை நெறியில், உயர் கல்வியில் இணைதல்
2. தொழில் கல்வியை பெறல்
3. வேலையில் இணைதல்

**01. கற்கை நெறியில் முசு உயர் கல்வியில் இணைதல்**

தற்காலத்தில் இலங்கையில் பல கல்வி நிறுவனங்கள் பட்டப்படிப்புக்களையும் நிபுணத்துவ கல்வியையும் வழங்குகின்றன.

- அரச கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் (NIBM , SLIDA,SLRTE)
- தனியார் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் (SAITAM, ICBT)
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் இணை நிறுவனங்கள்
- திறந்த பல்கலைக்கழகங்கள்
- நிபுணத்துவ கற்கைநெறி வழங்கும் நிறுவனங்கள் (CA,ACCA, CIMA, QS, SLTA,SLCA,BCS)
- இணையவசதி பல்கலைக்கழகங்கள்

இவற்றில் Z score இல்லாமலே பட்டப்படிப்புகளை பெறலாம். வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் பட்டங்கள் இங்கே பெறலாம்.

**02. தொழிற் கல்வியைப் பெறல்**

இலங்கையில் அனைத்து வகையான தொழில்களுக்குமான தொழில் கல்வியை வழங்குவதற்காக, தொழில் நுட்ப கல்லூரிகள், தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள் என்பன அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்றன. அதேபோல தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும், அரசசார்பற்ற நிறவனங்களின் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்குகின்றன. இவ் அனைத்து தொழில் பயிற்சி நிலையங்களும் தேசிய மட்ட சான்றிதலையே வழங்குகின்றன. (NVQ)

இப்பயிற்சி நிலையங்களில் NVQ Level 1- Level 5 வரை கற்க முடியும் பின்னர் N.V.Q Level 6, 7 மட்டங்களில் படிப்பதற்கு இரத்மலானையில் உள்ள தொழில் நுட்ப பல்கலைக்கழகத்திற்கு சென்று பட்டம் பெற முடியும்.

**03.வேலையில் இணைதல்**

வேலையில் இணைவதற்கு தயாராகும் மாணவர்கள் தமது திறன், அறிவு, தகுதி என்பவற்றை கருத்திலெடுத்து தமக்கான தொழிலுக்கு தயாராக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் எனும் போது பலவகையான தெரிவுகள் காணப்படுகின்றன அவையாவன,

1. பயிலுநர் - Trainee
2. வேலை செய்து கொண்டே பயிலுநர் - Apprentices
3. தன்னார்வ வேலை - Volunteer
4. சம்பளம் பெறாத வேலை – Unpaid Work
5. சம்பளத்துடனான வேலை – Paid Work
6. பொழுதுபோக்கான வேலை - Hobby Job
7. முழுநேர வேலை – Full time Job
8. பகுதி நேர வேலை – Part time Job
9. ஒப்பந்த அடிப்படையிலான வேலை – Contract Job
10. சுய வேலை – Contract Job
11. குறித்த காலப்பகுதிக்கான வேலை – Seasonal Employment
12. வீட்டிலிருந்தவாறே இணையத்தினூடான வேலை – Internet Job
13. Frencies job

வேலையில் இணையவிருக்கும் தொழில் தேடுவோர் பின்வரும் திறன்களை அவசியமாக வளர்த்துக்கொள்ள வேண்டும்.

1. தொடர்பாடல் திறன்
2. குழு வேலை இணைந்து வேலை செய்யும் திறன்
3. தீர்மானம் எடுத்தல்
4. பிரச்சனையை தீர்த்தல்
5. ஆங்கிலம், கனணி
6. ஆக்கபூர்வமாகச் சிந்தித்தல்
7. தலைமைத்துவமும் தன்னம்பிக்கையும்
8. நேர முகாமைத்துவமும் நேர் எண்ணங்களும்

தொழில் தேடும் ஒருவர் பின்வரும் செயன் முறையில் தொழிலுக்கான தயார்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.

1. ஆர்வமுள்ள துறையினை (தொழிலை) தெரிவு செய்தல்
2. பொருத்தமான பிரதேசத்தை தொழில் இடத்தினை தெரிவு செய்தல்
3. சுய விபரக்கோவை தயாரித்தல்
4. வெற்றிடங்களை தெரிந்து விண்ணப்பித்தல்
5. நேர்முகப்பரீட்சைக்கு தயாராகுதல்

தொழில் தேடுபவர்கள் தொழில் தகவல்களை பின்வரும் தகவல் மையங்களினூடாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

- இணையம்
- விளம்பரம்
- பத்திரிகை
- நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வர்த்தமானி
- பாடசாலை/ ஆசிரியர்
- பிரதேச செயலக தொழில் வழிகாட்டல் அலுலகர்
- வேலை செய்பவர்கள்
- சமூக நிறுவனங்கள்

ஒரு மாணவர் தன்னை ஒரு தனித்துவமானவனாக உருவாக்க வேண்டும். ஏனெனில் நாம் ஒரே ஒரு தடவை மாத்திரம் பிறக்கின்றோம். எனது வாழ்வில் 18 வருடத்தை கடந்துவிட்டேன் மேலும் 50 வருடங்கள் உயிர்வாழ்வேன் என்றால் இப்பொழுது உங்களை கேளுங்கள் மிகுதி 50 வருடங்களையும் இறப்பதற்கு முன்னர் எவ்வாறு பிரயோசனப்படுத்தப்போகின்றீர்கள்?

அப்படியாயின் உங்களின் எதிர்காலத்தை நீங்கள் திட்டமிடவேண்டும். ஒரு மாணவன் தனது எதிர்கால இலக்கினை தீர்மானித்து அதை அடைவதற்கான தொழிலத் திட்டத்தை பின்வருமாறு தயாரிக்கலாம்.

## தொழில்சார் அபிவிருத்தி திட்டம் : Career Development Plan

தொழில்சார் அபிவிருத்தி திட்டம் ஒன்றினை 04 படிமுறையினூடாக தயாரிக்க முடியும்.

1. ஏற்கனவே உங்களிடம் உள்ள திறமைகள் என்ன (நீங்கள் தற்போது எந்த இடத்தில் இருக்கின்றீர்கள்)
2. உங்கள் தொழில்சார் முன்னேற்றத்திற்கு தேவைப்படுவது என்ன? (நீங்கள் அடைய எதிர்பார்க்கும் இடம் எது)
3. அவ்விடத்தை நீங்கள் எவ்வாறு அடைவீர்கள் (அவ்விடததததை அடைவதற்கு எவ்வாறான படிமுறைகளை பின்பற்றல் வேண்டும்.)
4. உங்களுக்கு உதவிகள் வழங்கக்கூடியவர்கள்யார்? (எவ்வாறான வளங்களை நான் பயன்படுத்துவேன்)

மேற்கூறிய விடயங்களை நிதானமாக ஆராய்ந்து அவற்றினூடாக தொழில்சார் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கமுடியும். இதன் மூலம் தற்போது நீங்கள் இருக்கின்ற நிலைமை மற்றும் நீங்கள் அடைய வேண்டிய நிலைமையை பற்றிய தெளிவான விளக்கம் உங்களுக்கு வந்திருக்கும். இதன் மூலம் உங்களுடைய தொழில் சார் அபிவிருத்தி திட்ட இலக்கினை அமைப்பதற்கான காலம் ஏற்பட்டுள்ளது. உங்களுடைய தொழில்சார் இலக்கினை தீர்மானிக்கும் போது அதனை வெற்றிகரமான நிலைமைக்கு கொண்டு செல்லக்கூடிய வகையில் அமைத்துக்கொள்வது முக்கியமானதாகும். இலக்கினை அமைக்கும் போது **SMART** எனும் முறையினூடாக அமைத்துக்கொள்வது மிகவும் பொருத்தமானதாகும். இலக்கானது எளிமையானதாகவும் தன்னால் முகாமைத்துவம் செய்யக்கூடியதாகவும் இலகுவில் அடையக்கூடியதாகவும் வளங்கள் வாய்ப்புக்கள் கொண்டதாகவும் குறிப்பிட்ட காலத்தினுள் அடையக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
O/L, A/L ன் பின்பு பல்கலைக்கழகம் மற்றும் இதர அரச கல்வி வாய்ப்புக்களை கிடைக்காமல் பாடசாலையில் இருந்து விலகும் மாணவர்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிப்பதில் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர்.

ஒரு மாணவன் முன்னால் பல வகையான உணவுகள் விருந்திற்காக வைக்கப்பட்டுள்ளது இதில் எது உங்களுக்கு தேவை என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும் உணவை தேர்ந்தெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சுவை, தரம், ஆரோக்கியம் ஜீரணிக்கக்கூடியதாக இருத்தல் போன்றவற்றை கருத்திலெடுத்து முடிவெடுப்பீர்கள். அது போலவே பலவிதமான படிப்புக்கள் தொழில்கள் உள்ளன அவற்றில் உங்களுக்கு பொருத்தமானது எது என்பதை தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது பின்வரும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு அமையலாம்.

* உங்களின் விருப்பத்திற்கு ஏற்றதாக அமையலாம்.
* உங்களின் திருப்திக்கு ஏற்றதாக அமையலாம்.
* எதிர்காலத்தை மனதில் வைத்து அமையலாம்.
* மாணவரின் திறமை அறிவை பொறுத்து அமையலாம்.

அண்மைகாலமாக தொழில்நுட்ப மற்றும் வியாபார சூழல்கள் உலகலாவிய ரீதியாக துரித வளர்சிசி அடைந்துவருகின்றன. இந்த வளர்ச்சியினால் கிடைக்கும் முக்கிய பலன்களில் ஒன்று முகாமைத்துவ மற்றும் நிறைவேற்று பதவிகளுக்கு திறமையும் புதுமையும் உள்ள தொழில் அறிஞர்களுக்கான கிராக்கி அதிகரிக்கின்றது. விசேடமாக வேகமாக வளர்ந்து வரும் இலத்திரனியல்இ தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் காரணமாக தொழில் உலகில் புரட்சிகரமான மாற்றங்கள் இடம் பெறுகின்றன. மாணவர்கள் இந்த மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு விசேட திறமைகளை கொண்டவர்களாகவும் சவால்களை எதிர்கொள்ளக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

எனவே மாணவர்கள் தமது கற்கைநெறியினை / தொழிற் கல்வியை தெரிவு செய்யும் போது தமது பலம், பலவீனம், விருப்பம், தொழில்துறை வாய்ப்புகள், தமக்கான இடையூறுகள், போன்றவற்றை கவனத்திலெடுத்து தமக்கான தெரிவுகளை மேற்கொண்டால் வெற்றி கிடைப்பது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கலைத்திட்டத்தின் நோக்கமும் பாடசாலைக் கல்வியில் ஆசிரியர் வகிபாகமும்.

திரு.ம.திருச்செல்வம் (அருள்)
வரலாறு ஆசிரியர்
தி/ புனித சூசையப்பர் கல்லூரி
திருக்கோணமலை.

இலங்கையில் கல்வியூடாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகப் பாடசாலைகளில் கலைத்திட்ட மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பூகோளமயமாதல் மூலம் புதிதாகத் தோன்றியுள்ள தகவல் தொழில்நுட்ப யுகத்தில் இளைஞர் சக்தியை பாடசாலையூடாக நாட்டுக்கு வழங்குவதற்காக பாடங்களிலும் ஆசிரியர்களிலும் பல மாற்றங்களைக் கல்வி மறுசீரமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்கால சமூகத்தின் வாழ்க்கையை வெற்றிகரமாக நடாத்துவதற்கு இன்றியமையாததாகவுள்ள சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், தனியாள் வேறுபாடுகள் என்பவற்றை அடுத்த சந்ததிக்கு ஒப்படைக்கும் நோக்கில் கலைத்திட்ட மறுசீரமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது.

நமது நாட்டின் கல்வித்துறையானது இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. பொதுக்கல்வி
2. உயர்கல்வி

பாடசாலைகளூடாக மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி பொதுக்கல்வி ஆகும். பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களுக்காக உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்து வழங்கப்படும் பல்கலைக்கழகக் கல்வி உயர்கல்வி ஆகும்.

எமது நாட்டில் கட்டாயக் கல்வியூடாக 5 வருடங்கள் தொடக்கம் 14 வருடங்கள் வயதெல்லையை உடைய மாணவர்களுக்குக் கட்டாயக்கல்வி முறையொன்று உள்ளது. கட்டாயக்கல்வியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் இடைநிலைக் கல்வி, உயர்கல்விகளில் பங்கேற்கலாம். இன்றேல் தொழில்சார் கற்கைநெறிகளைத் தேர்ந்தெடுக்கலாம். அல்லது நேரடியாக தொழில் உலகில் பிரவேசிக்கலாம்.

நாட்டுக்குப் பயனுடைய நல்லறிவும் நற்பண்பும் நற்குணமும் உடைய மாணவர்களை உருவாக்குவதே பாடசாலைகளது பிரதான பணியாகும். இவ்வாறான பொதுக்கல்வியை வழங்குவதே பாடசாலைகளது குறிக்கோளாகும்.

பாடசாலைகளில் பொதுக்கல்வியை வழங்குவதில் ஆசிரியரது வகிபாகம் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. காலத்துக்குக் காலம் மாணவர்கள் கற்பது வேறுபட்டுக் காணப்படுவதால் பொருத்தமான வகையில் ஆசிரியரின் வகிபாகமும் மாற்றமடைந்து செல்வது அவசியமானதாகும்.

தற்கால பாடசாலைகளுக்குப் பொருத்தமான வகையில் ஆசிரியர்களின் வகிபாகம் அமைதல் வேண்டும். ஆசிரியர் வகிபாகமானது காலத்துக்குக்காலம் மாற்றமடைந்து செல்கின்றது. ஆசிரியர் வகிபாகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை 3'T' மாதிரியைக் கொண்டு (3 T Model) அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கடத்தல் (Transmission)
2. கொடுக்கல் - வாங்கல் (Transaction)
3. நிலைமாற்றல் (Transformation)

**கடத்தல் (Transmission) :**

ஆசிரியரையும் கற்பித்தலையும் வலியுறுத்தும் ஆசிரிய வகிபாகம் கடத்தலாகும். கடத்தல் ஆசிரிய வகிபாகம் விரிவுரையை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கடத்தல் வகிபாகத்தில் ஆசிரியர் அறிவைக் கடத்துவதால் ஆசிரியர் கடத்துபவர் (Transmitter) என அழைக்கப்படுவர். இங்கு மாணவர்கள் செவிமடுப்பவர்களாக (Listener) இருப்பர்.

விரிவுரை மூலம் ஆசிரியர் அறிவைக் கடத்துபவராக இருப்பர். நிரம்பிய குடமாக ஆசிரியர் தொழிற்படுபவார். வெறும் கிண்ணமாக மாணவர்கள் கிண்ணத்தை நிரப்ப முயற்சிப்பர். கடத்தல் வகிபாகத்தில் வினாக்கள் வினவி தமது விளக்கத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைப்பத்தில்லை. இதனால் மாணவர்கள் தொழிற்படாது செவிமடுப்போராகவே இருப்பர்.

**கொடுக்கல் - வாங்கல் (Transaction)**

கொடுக்கல் - வாங்கல் வகிபாகத்தில் ஆசிரியர் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவர். இங்கு சம்பாஷனைகளுக்கும் உரையாடல்களுக்கும் அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஒரு புறத்தே ஆசிரியருக்கும் மறுபுறத்தே மாணவர்களுக்கும் இடையே சம்பாஷனைகள் நடைபெறும். சிறிது நேரத்தில் மாணவர்கள் வெவ்வேறு மட்டங்களில் உரையாடல்களில் ஈடுபடுவர். கொடுக்கல் - வாங்கல் வகிபாகத்தில் ஆசிரியர் வசதி செய்து கொடுப்பவராக (Facilitator) இருப்பார். மாணவர்கள் துலங்கல் காட்டுவோராக இருப்பர். வினாக்களைக் கேட்பதன் மூலம் ஆசிரியரும் விடைகளைக் கூறுவதன் மூலம் மாணவர்களும் தொழிற்படுவர்.

**நிலைமாற்றல் (Transformation) :**

நிலைமாற்றல் வகிபாகம் என்பது கடத்தல், கொடுக்கல் வாங்கலில் இருந்து வேறுபட்டது. குறிக்கோளுக்கும் பதிலாக தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகச் செயற்படுவதனையே நிலைமாற்றல் வகிபாகம் குறிக்கின்றது. செவிமடுப்பதற்கும் துலங்குவதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்பு நிலைமாற்று ஆசிரியர் வகிபாகத்திலேயே காணப்படுகின்றது.

நிலைமாற்று வகிபாகம் இரு சந்தர்ப்பங்களில் நிகழலாம்.

1. வகுப்பு மாணவர் ஆசிரியர் கூறுவதைச் செவிமடுக்கும் போது.
2. மாணவர்கள் சிறு குழுக்களாக தேடலில் ஈடுபடும் போது.

பண்டைய காலத்தில் நடைமுறையில் இருந்த கடத்தல் வகிபாகம் இடைக்காலத்தில் கொடுக்கல் - வாங்கல் ஆசிரிய வகிபாகமாக மாற்றம் பெற்ற பின் நிலைமாற்ற ஆசிரிய வகிபாகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இன்று நாம் எதிர்நோக்கும் பூகோளமயமாக்கலின் முன்னிலையில் வெற்றிகரமான பாடசாலைக் கல்விக்கு இன்றியமையாத வகிபாகமாக நிலைமாற்றல் வகிபாகம் காணப்படுகின்றது. மரபு ரீதியான ஆசிரிய வகிபாகங்களுடன் ஒப்பிடும் போது நிலைமாற்றல் ஆசிரிய வகிபாகமானது கற்றல் - கற்பித்தல் தொடர்பான கணிசமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. எனவே ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பித்தல் வகிபாகத்தில் நிலைமாற்றத்தில் பின்பற்றுவதன் மூலம் சிறந்த ஆசிரியராக வளர்வது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிர்விலுதவி

Mr.K.Paskaran
B.Sc.(Agric),PGDE
SLPS – II (V.Principal)

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு.

என தெய்வப்புலவர் கூறுவதற்கிணங்க வானம் எவ்வாறு கைம்மாறு கருதாமல் மழையை பொழிகிறதோ அவ்வாறே முதியோரும் கைம்மாறை எதிர்பார்த்து உதவுவது இல்லை. எம்மை அன்புடன் வளர்த்து நல்வழிகாட்டிய பெற்றோர்களை,ஆசிரியர்களை, பெரியோர்களை கௌரவபூர்வமாக மதித்து முன்மாதிரியான நற்பிரஜையாகுவோம்.

மற்ற குழந்தைகளை விட எனது குழந்தை எப்போதும் சிறந்தவனாக இருக்க வேண்டும் அதற்காக எந்த தியாகத்தையும் செய்யத் தயார் என்ற மனநிலை தான் பெரும்பாலான பெற்றோரிடம் உள்ளது. அதுமட்டும் அல்ல வயதான காலத்தில் நம் குழந்தைகள் நம்மை கவனிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் சில பெற்றோர்களிடம் இருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் குழந்தைகள் வளர்ந்தபின் பெற்றோர்களின் தியாகத்தை மறந்து அழுக்கான பெற்றோர் தம்முடன் இருந்தால் தமது சமூக அந்தஸ்து குறைந்துவிடும் என்பதால் முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்றனர். இதனால் தான் முதியோர் இல்லங்கள் அதிகரித்துச் செல்கின்றன.

தனது குழந்தையின் நலனை முன்னிறுத்தி இரவு பகலாக சம்பாதித்த தந்தையும் கண்துஞ்சாது கவனித்த தாயும் தமது வயதான காலத்தில் ஒன்றாக சேர்ந்து வாழ முடியாமல் அவதிப்படுவதை காணமுடிகின்றது. அன்பு, பாசம், அரவணைப்புக்கு ஏங்கும் அந்த மதிப்பிற்குரிய சிரேஷ்ட பிரஜைகள் சடப்பொருட்களாக முதியோர் இல்லங்களில் கையாளப்படுகின்றனர். இதைவிடக் கொடுமை அவர்களுக்கு மாறாட்டம் ஏற்படும் போது அங்குள்ளவர்களால் ஏற்படுத்தப்படும் தொல்லைகள் சொல்ல முடியாதவை. இலங்கையில் நடந்த சம்பவம் ஒரு மகன் தனது 80 வயதுக்கு மேற்பட்ட தந்தையுடன் காரில் வந்து நடுரோட்டில் தனது தந்தையை இறக்கி விட்டுச் செல்ல இதை அவதானித்த நல் உள்ளம் படைத்த ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்து நல்ல தீர்வை அந்த தந்தைக்கு பெற்றுக் கொடுத்தார். இவ்வாறான விடயங்கள் பத்திரிகைகளில் தொலைக்காட்சிகளில் வரும் போது நெஞ்சம் பதறுகிறது கடுமையாக விமர்சிக்கிறோம். ஆனால் நமது வீட்டில் உள்ள முதியவர்களைப்பற்றி நாம் ஏன் சிந்திப்பது இல்லை. இவை சமூகப்பிரச்சினையாக வருவதற்கு நாம் ஒவ்வொருவரும் காரணம் என நாம் ஏன் சிந்திப்பது இல்லை. ஏனெனில் நம்மில் பலபேருக்கு சுயநலமாய் இருந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்ற கணக்கில்தான் வாழ்க்கை ஓடிக்கொண்டு இருக்கிறது.

முதியோர் துஷ்பிரயோகம் காரணமாக அவர்கள் சமூகத்தில் இருந்து விலகி நடக்கின்றனர், குழப்ப நிலையில் உள்ளனர், மறதி, மனஅழுத்தம், கோபம், உதவி அற்ற நிலை,மற்றவர்களுடன் கதைப்பதற்குத் தயங்குதல், மனம் விட்டு பேசாதவர்களாக. பயந்தவர்களாக உள்ளனர். முதியோர் துஷ்பிரயோகம் எனும் போது அவர்களை ஏசுதல், ஒரு முறை அல்லது தொடர் தாக்குதல், அவர்களது உடமைகளை விருப்பமின்றி அபகரித்தல், அவர்களது நம்பிக்கைகளை தகர்த்தல். இது அவர்களது உறவினர்களாலே நடாத்தப்படுகின்றது என்பதே கொடுமையான விடயம். இது எதற்காகவெனில் தம்மை அலட்சியப்படுத்தல், வேண்டுமென்ற நோக்கத்தோடு, புறக்கணிப்பு போன்ற காரணங்களிற்காகவே முதியோர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடித்த தம்பதியினர் சிலகாலம் வாழ்ந்த பின் ஏதோ ஒரு காரணத்தைக் கூறி விவாகரத்து பெறுகின்றனர். இதில் மனைவி கணவனிடம் தாபரிப்பு பணம் கோருவது போன்று பெற்றோரும் பிள்ளைகளால் கைவிடப்படும் போது நீதிமன்றம் சென்று பிள்ளைகளை வளர்க்க செலவு செய்த பணத்தை அறவிடமுடியும்.

முதியோருக்குரிய 04 உரிமைகள் 2000 இல. 9/2011 இல. 05 பாராளுமன்ற சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

01. பெற்றோர்கள் தமது பிள்ளைகளிடமிருந்து பாதுகாப்பையும் தேவைகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.

02. பிள்ளைகள் அற்ற அல்லது தனிமையுற்ற முதியோர்கள் அரசாங்கத்தினால் பொருத்தமான இருப்பிட வசதிகளை பெறும் உரிமை.

03. ஏனைய பிரஜைகள் செல்லும் இடத்திற்கு அல்லது பயன்படுத்த உரிமை உள்ள இடங்களிற்கு செல்வதற்கு, பயன்படுத்துவதற்கான உரிமை.

04. ஏனைய பிரஜைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை சமமாக பெற்றுக்கொள்ளும் உரிமை.

மனிதனுக்கு 60 வயதுக்கு மேல் முதுமை வருகின்றது. அச்சமயம் அவர்களுக்கு மரணபயம், ஆதரவற்ற நிலை, ஞாபகமின்மை, நித்திரையின்மை ஏற்படுகின்றது. இதில் தானாகவே சிறுநீர் போகுதல், மலம் கழித்தல், எலும்பு தேய்மானம், புற்றுநோய், நீரழிவு நோய் போன்ற நாள்பட்ட வியாதிகள், இரத்தக் கொதிப்பு மற்றும் உணவு உட்கொள்ளாமை போன்ற யாவும் முதுமையில் பலபேரிற்கு தொடர்வதாக இருக்கின்றன.

முதியோர் என்போர் 60 வயதுக்கு மேற்பட்டோர் உலக மக்கள் தொகை 2020 ஆம் ஆண்டு 7.6 பில்லியனைத் தாண்டும் என மக்கள் தொகை புள்ளியியல் ஆய்வு தெரிவிக்கின்றது. இவற்றில் கால் பாகம் (23%) 60 வயதுக்கு மேல் உள்ள முதியவர்களாக இருப்பார்கள். தற்சமயம் இலங்கையில் 12.7% முதியோர்கள் உள்ளனர். இவர்கள் 2040 ஆம் ஆண்டளவில் 28% ஆக உயரலாம் என கணித்துள்ளனர்.

முதியோர்களை பாதுகாக்க அரசாங்கம் புதிய சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. அதாவது பாதுகாவலர்கள் அல்லது பொறுப்பேற்கக் கூடியவர்கள் எவருமின்றி அனாதரவான நிர்க்கதியான நிலையில் விடப்படும் முதியவர்களின் சொத்துக்கள் அரசுடமையாக்கப் படக்கூடியவகையில் சட்டம் கொண்டுவரப்பட உள்ளமை வரவேற்கப்படவேண்டிய விடயமே. இதனால் இவர்கள் இறந்த பின் இவர்களது சொத்துகளுக்கு யாருமே உரிமை கோரமுடியாது. முதியோர் சுகாதாரம், மருத்துவ வசதி, பாதுகாப்பு, இருப்பிடம் இது போன்ற தேவைகளையும் அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டிய தேவைப்பாடு உள்ளது. முதியோர்களைக் கவனித்துக் கொள்வது பிள்ளைகளின் கடமை மற்றும் பொறுப்பும் கூட. பிள்ளைகளுக்கு உறவுகளின் முதுமை என்பது என்றும் பாரமாக இல்லாமல் இருக்க வேண்டும். இதை நல்ல உள்ளங்கள் ஏற்பார்கள் என நம்புகிறேன்.

இருப்பினும் முதியோரை பேணுவதில் நாம் உலகளவில் 36ம் இடத்திலும் ஆசியாவில் 4ம் இடத்திலும் தெற்காசியாவில் முதலாம் இடத்திலும் உள்ளோம் என்பதில் நாம் பெருமைப்பட வேண்டும்.

"முதியோரை பேண் நாளை நீயும் முதியவரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் ஒன்றியம்











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் ஆளுமை விருத்தியில் இணைப்பாட விதான செயற்பாடுகளின் பங்களிப்பு.

R.S.Kajendran
Experince Center Manager
Dialog

எம்மில் அதிகமானோர் அல்லது அனைவருமே வாழ்க்கையில் வெற்றியாளர்களாக, சாதனையாளர்களாக மாற வேண்டும் என ஆசைப்படுகின்றோம். அது அடைய முடியாத அல்லது சாதிக்க முடியாத விடயம் ஒன்றல்ல. நிச்சயமாக அந்த ஆசையை, இலக்கை அடைந்து கொள்ளலாம். ஆனால் அதற்காக எம்மை பயிற்றுவிக்க வேண்டும். சுய ஆளுமை குறித்து மிக அதிக கவனம் செலுத்தி தொடர்பயிற்சியில் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நாம் அடைய விரும்புகின்ற, சாதிக்க விரும்புகின்ற இலக்கை அடைந்து கொள்ளலாம், சாதனைகள் புரியலாம்.

எனவே ஆளுமை விருத்தியை பற்றி ஒரு சிறிய அலசல், ஆளுமை விருத்தி என்றால் என்ன என்பதற்கு பலர் விளக்கங்களை கூறியுள்ளனர். "ஆளுமை எனப்படுவது யாது எனின் யாவரையும் தமை நாடி ஈர்க்கும் திறன்" ஆளுமை என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்தில் "Personality" என்றுதான் சொல்கிறார்கள். அது சரியான வார்த்தை தான். ஆனால் "Personality" என்பதை பெரும்பாலானவர்களிடம் கேட்டுப்பாருங்கள். அவர்களிடம் இருந்து கிடைக்கும் பதில் வேறொன்றாக இருக்கும். ஆளுமை என்பது ஒருவரை மற்றவர்களிடம் இருந்து பிரித்து காட்ட கூடியது. ஒருவன் தனது தனித்தன்மை வாய்ந்த நடத்தையால் தன்னை சூழ்நிலைக்கு ஏற்ப அமைத்து கொள்வதே ஆளுமை எனப்படுகின்றது.

இதே போல் தன் மாணவர்களும் தங்களது பள்ளி காலத்திலே தங்களது ஆளுமையினை விருத்தி செய்து கொள்வதற்கு பல்வேறு விதமான செயற்பாடுகள் பரந்து காணப்படுகின்றது. ஆனால் காலம் தொட்டு இன்று வரை எமது சமுதாயத்தை சார்ந்த பெரும்பான்மையான பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கற்றல் விடயத்தினை தவிர வேறு எந்த ஒரு பாட இனைவிதான செயற்பாடுகளிலும் தமது பிள்ளைகள் ஈடுபடுவதற்கு விருப்பம் காட்டுவதில்லை. இதனால் தான் இன்று அனேக புத்தக பூச்சிகளை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு மாணவன் ஒரு சமுதாயத்தில் முழுமை பெற்ற மனிதனாக வெளிவரவேண்டும் என்றால் அவனுக்கு பன்முறை ஆளுமை மிக அவசியம்.

பன்முறை ஆளுமை என்றால் என்ன?

- உடல் சார்ந்த ஆளுமை
- உளம் சார்ந்த ஆளுமை
- அறிவு சார்ந்த ஆளுமை
- ஆன்மீகம் சார்ந்த ஆளுமை

தனிமனித உயர்விற்கும் வெற்றிக்கும் தேவை ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடல் சார்ந்த ஆளுமை.**

உடல் வாகு, உடல் தோற்றம், உடல் நோயின்மை, உடல் வளர்ச்சி ஆகியவை உடல் சார்ந்த ஆளுமையை வளர்பன. இதற்குதான் "பாரதி" சிறு வயது முதற்கொண்டே சில நல்ல பழக்கங்களை வளர்த்து கொள்ள வேண்டும் என பாடல் பாடியுள்ளார்.

ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா – எனவும் தமது புதிய ஆத்தி சூடியில் "இளைத்தல் இகழ்ச்சி" "உடலினை உறுதி செய்" "ஓய்தல் ஒழி" "வீரியம் பெருக்கு" என்று சொல்லி கொண்டே போகலாம். எனவே மாணவர்கள் இவ் உடல் சார்ந்த ஆளுமையினை விருத்தி செய்து கொள்வதற்கு பாடசாலையில் காணப்படும் மெய்வல்லுனர் விளையாட்டு போட்டிகள், குழு விளையாட்டுக்கள், சாரணர் குழுக்கள் என்பவற்றில் பங்கு கொள்வதன் மூலம் உடல் சார்ந்த ஆளுமையினை விருத்தி செய்து கொள்ளலாம்.

**உளம் சார்ந்த ஆளுமை**

அச்சம் இன்மை ஆளுமை வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. அன்பு அனைவரையும் தம்பால் ஈர்க்கும் கருவி, ஏழ்மை கண்டு இரங்குதல், மன உறுதி படைத்தல், ஊக்கமுற வாழ்தல் உயர்ந்த உள்ளத்தை உருவாக்கிகொள்ளுதல் ஆகியவை உள்ளம் சார்ந்த ஆளுமை விருத்திக்கு இன்றியமையாதது ஆகும்.

**அறிவு சார்ந்த ஆளுமை**

கல்வி கற்றல் அதையும் சரியான முறையில் திறம்பட மாற்றல், தேடல் கற்றல் என்பன அறிவு சார்ந்த ஆளுமை வளர்ச்சிக்கு முக்கியமானவைகள் ஆகும்.

எனவே தனிமரம் தோப்பாகாது, தனிமனிதன் சமுதாயம் ஆவதில்லை, சமுதாயத்தின் ஓர் அங்கமே தனி மனிதன், தனி மனித வளர்ச்சியே சமுதாய வளர்ச்சி ஒரு சமுதாயம் நன்கு வளரவேண்டுமென்றால் தனி மனித ஆளுமை வளர்ச்சி மிகவும் முக்கியமான ஒன்றாகும். மாணவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு கல்வி மட்டுமல்ல ஏனைய துறைகளும் அவசியமாக அமைந்துள்ளது.

எதிர்காலம் பற்றி ஏக்கங்களோடும் கனவுகளோடும் சாதனைகளை நிலை நாட்டப்போகின்ற மாணவ செல்வங்களினுடைய முழுமையான மனித ஆளுமை வளர்ச்சிக்கு கல்வி மாத்திரம் போதுமானதாக இல்லை அதனோடு இனைந்து காணப்படுகின்ற பாட இனைவிதான செயற்பாடுகளும் மிக மிக அவசியம்.

நவநாகரிக போக்கில் மூழ்கி கிடக்கின்ற சமூகத்தின் மத்தியில் மாணவர்கள் தமது கற்றலுக்கும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் இருக்கின்ற அனைத்து சவால்களையும் தடைகளையும் எதிர்கொண்டு சாதனை மிக்க மனிதர்களாக சரித்திரம் மிக்க மண்ணிலே புதிய வரலாறுகளைப் படைக்க வேண்டும் எனவாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் மன்றங்கள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரக் கண்காட்சி








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற் பந்தாட்டம் தோன்றிய விதமும் குறிப்புகளும்.

எஸ்சுபைர்டீன்
கல்விமாணி (B.Ed)
தி/புனித சூசையப்பர் கல்லூரி

இன்றைய உதைபந்தாட்டம் 157 ஆண்டுகளுக்குள் நிறைவு பெற்றதாகும். 4000 ஆண்டுகளுக்கு முன் ஏதோ ஒரு வகையில் காலால் உதைத்தாடும் பந்தாட்டமாக உதைப்பந்தாட்டம் இருந்து வந்தது. முதலில் சீனாவில் கி.மு.400ஆம் ஆண்டளவில் உதைப்பந்தாட்டம் இருந்ததாக கூறினாலும் கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன் எகிப்தில் இருந்ததாக எகிப்திய கல்லறைகளில் (Tomb) ஓவியங்கள் விளங்குகின்றன. கி.மு.3ம் நூற்றாண்டில் சீன மன்னர்களின் படை வீரர்கள் தோலால் செய்யப்பட்டு, இறகுகளாலும், மயிர்களினாலும் நிரப்பப்பட்ட உருண்டையான பந்தால் உதைபந்தாட்டம் விளையாடியுள்ளனர்.

கி.பி. 6ம், 7ம் நூற்றாண்டில் ஜப்பானில் "கெமாறி" (Kemary) எனும் பெயரில் உதைப்பந்தாட்மட இருந்துள்ளது. உரோமமர் கி.பி.200ம் ஆண்டளவில் உதைப்பந்தாட்டம் ஆடியுள்ளனர். உரோமரின் பிரித்தானிய படையெடுப்பின் பின்னர் தான் பிரித்தானியாவில் உதைபந்தாட்டம் நிலை கொண்டது. இதன் பின்னர் தான் 1863ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் இன்றைய உதைப்பந்தாட்டம் (Modern soccer) உருவானது. எனவே இன்றைய உதைப்பந்தாட்டத்தின் பிறப்பிடம் பிரித்தானியா எனலாம். கி.பி 8ம் நூற்றாண்டில் பிரித்தானியாவிலும், ஸ்கொட்லாந்திலும் உதைபந்தாட்டம் அதிகமாக காணப்பட்டது. 1100ம் ஆண்டில் ஆடப்பட்ட உதைபந்தாட்டம் மிகவும் முரட்டுத்தனமானதும், ஒழுங்கு – முறையற்றதாகவும் காணப்பட்டது. இதனால் இது "விசராட்டம்" (Useless foot ball) என அழைக்கப்பட்டது.

1800ம் ஆண்டளவில் பிரித்தானியாவில் எற்றொன் (Eton), ஹறோ (Harrow), வின்செஸ்ரர் (Winchester) போன்ற பல பாடசாலைகளில் இன்றைய உதைப்பந்தாட்டம் போன்ற உதைபந்தாட்டம் காணப்பட்டது. இப்பாடசாலைகள் 1848இல் ஒன்றுகூடி தமக்கென சில உதைப்பந்தாட்டச் சட்டங்களை ஏற்படுத்திக் கொண்டன. இதற்கு முன் "றக்பி"யை சேர்ந்த Dr.தோமஸ் ஆர்னல்ட் (Dr. Thomas Arnold) எனப்வர் சில சட்டத்திட்டங்களை ஏற்படுத்தினார்.

1863ம் ஆண்டில் பந்தைக் காலால் உதைத்து ஆடியதை "புட்போல்" (Foot ball) என்று அழைத்தனர். ஆனால் மேல் நாடுகளில் முக்கியமாக அமெரிக்காவில் "புட்போல்" என்றால் "றகர்" ஆட்டத்தையே கருதுவர். அக்காலத்தில் ஆடப்பட்ட உதைபந்தாட்டம் இன்றைய ஆட்டம் மாதிரி இல்லாமல் றகர் ஆட்டம் போல் இருந்தது. இது மிகவும் முரட்டுத்தனமானது. இவ்வாறு இருந்த உதைபந்தாட்டம் காலஞ் செல்லச்செல்ல அதிலிருந்து முரட்டுத்தனங்களான பந்தை கையாடல் (Handling – கையால் அடித்தல்), கையால் ஆளை தடுத்தல் (Fackling with arms) மேண்டுமென்று காலால் உதைத்தல் (Hacking) என்பன தடை செய்யப்பட்டன. இதனால் உதைப்பந்தாட்ட ஆட்டக்காரர்கள் வன்மையான ஆட்டக்காரர்கள், மென்மையான ஆட்டக்காரர்கள் என இரு வகையினராக பிரிந்தனர்.

இதில் மென்மையான ஆட்டக்காரர்கள் 1863ஆம் ஆண்டு ஃபிறிமேசன் சத்திரத்தில் (Freemasons Tavern) கூடி உலகில் முதலாவது உதைபந்தாட்ட சங்கத்தை ஆரம்பித்தனர். இதன் வழிவந்த ஆட்டமே இன்று நாம் விளையாடும் "அசோசியேசன் புட்போல்" (Association Football) அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொக்கர்" (Soccer) என அழைக்கப்படுவது. எனவே 1863ஆம் ஆண்டுடன் இன்றைய நமது உதைப்பந்தாட்டம் வளர்ச்சி பெற்றது எனலாம். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சங்கததினால் 1871, 1872ம் ஆண்டுகளில் முதலாவது உதைப்பந்தாட்ட சங்கத்துக்கான உதைப்பந்தாட்டப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் "வோன்டர்ஸ்" (Wonderers) வெற்றி பெற்றது. 1872ம் ஆண்டு நாடுகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது. இதில் பிரிதானியாவும், ஸ்கொட்லாந்தும் பங்குபற்றியது இதன் முடிவு சமநிலையில் முடிந்தது.

1873ஆம் ஆண்டிலிருந்து பிரித்தானியாவின் ஒவ்வொரு நாடும் தமது நாடுகளில் உதைப்பந்தாட்ட சங்கங்களை ஆரம்பித்தனர். 1889ஆம் ஆண்டில் பிரித்தானியாவைச் சாராத உதைப்பந்தாட்ட சங்கங்கள் (Non British Association) ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு நாடுகளிலும் உதைப்பந்தாட்ட சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதனால் 1904ஆம் ஆண்டு உதைப்பந்தாட்டத்தின் பொற்காலம் ஆரம்பமானது. 21.05.1904ம் ஆண்டு பிரான்சின் தலைநகர் பரீஸில் கூடிய பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், ஒல்லாந்து, டென்மார்க், சுவிட்சலாந்து போன்ற ஏழு நாடுகளும் அனைத்துலக உதைபந்தாட்ட சங்கத்தை (Federation International de foot ball Association) ஏற்படுத்தியன. இது (FIFA) என சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. இது உலகில் உதைபந்தாட்டம் தொடர்பான சகல விடயங்களையும் கண்காணித்து வருகின்றது. இதன் பின்னணியில் தான் 1930ஆம் ஆண்டு முதலாவது உலக கிண்ணத்துக்கான உதைப்பந்தாட்டப்போட்டி (World Cup) உருகுவேயில் மொன்ரிவீடியோ நகரில் (Montevideo) நடைபெற்றது. இப்போட்டியின் இறுதியாட்டத்திற்கு உருகுவேயும் ஆர்ஜென்ரினாவும் மோதின இதில் உருகுவே வெற்றி பெ்று முதலாவது உலக கிண்ணத்தை சுவீகரித்தது உலக சம்பியன் பட்டத்தையும் பெற்றது. கடைசியாக உலகக் கிண்ணப்போட்டி பிறேசில் நாட்டின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்றது. இந்தப்போட்டியில் சம்பியன் பட்டத்தை ஜேர்மன் அணி பெற்றுக்கொண்டது உதைபந்தாட்டத்தில் ஜாம்வான் என வர்ணிக்கப்படும் பிறேசிலுடனான போட்டியில் ஜேர்மன் அணி 7 – 1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி கொண்டது. சொந்த மண்ணில் சாதிக்க தவறிய வீரர்கள் சோகத்தில் ஆழ்ந்து கண்ணீருடன் மைதானத்தை விட்டு வெளியே சென்றது உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. இப்போட்டி உதைப்பந்தாட்ட வீரர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவே கொள்ளவேண்டும். இருந்த போதும் பிறேசில் வீரர்கள் துண்டு போகவில்லை ஒலிம்பிக்போட்டியில் வீரர்கள் துவண்டு போகவில்லை ஒலிம்பிக்போட்டியில் சிறப்பாக விளையாடினர். இவ்வாறு உருவாகியதே இன்று நாம் ஆடிக்கொண்டிருக்கும் உதைபந்தாட்டமாகும்.

இங்கு விசேடமாக நாம் குறிப்பிடப்போவது என்னவென்றால் 1867ல் எமது பாடசாலை உருவானது ஆரம்பத்தில் மிசனரிபாடசாலையாகவே இருந்தது. அக்காலத்தில் பல அருட்தந்தையர்கள் அதிபராக அவர்களுக்கு இருந்தனர். 1893ஆம் ஆண்டு Rev.Fr.மேரி கிட்டிங் அடுத்ததாக வந்தவரின் காலத்தில் பிரித்தானியர் எமது பாடசாலையை பார்வையிட வந்தபோது பாடசாலை மாணவர்கள் இடைவேளையின் போது பேப்பர்களை காலல் உதைத்து விளையாடியதைக் கண்டனர். இதைக்கண்ட பிரித்தானியர்கள் நாம் அடுத்த முறை இப்பாடசாலைக்கு வரும் போது (Ball)பந்து கொண்டு வந்து தருவதாக கூறிவிட்டு சென்றனர். 4 மாதங்களின் பின் வந்தவர்கள் இரண்டு பந்துகளை பாடசாலைக்கு வழங்கினர் அன்றிலிருந்து இன்றுவரை எமது பாடசாலையில் உதைபந்தாட்டம் விளையாடிக்கொண்டே இருக்கின்றனர். எமது பாடசாலை பல சாதனையாளர்களை உதைபந்தாட்டத்தின் மூலம் உருவாக்கியுள்ளது. அன்று முதல் இன்றுவரை எமது பாடசாலை உதைபந்தாட்டத்தில் முன்னனிப்பாடசாலை என்ற நாமத்தை தக்கவைத்து நிற்கின்றது. சுமார் 150 வருடமாக உதைபந்தாட்டம் எமது பாடசாலையில் விளையாடப்படுகின்றது. இந்த உதைபந்தாட்டத்திற்காக உழைத்த அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், நலன் விரும்பிகள், பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள், நிறுவனங்களின் உத்தியோகத்தர் அனைவருக்கும் 150வது வருட நூல் வெளியீட்டில் நன்றி கூறுவதோடு சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கிய இறைவனுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குறிப்புகள்.**

1) நடுவர் இல்லாமல் ஆட்டம் நடைபெற முடியாது இறுதி முடிவு எடுக்க ஒருவர் தேவை அவர்தான் நடுவர்.
2) இரு அணி வீரர்களும் நடுவரின் முடிவுகளை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நோக்கத்தோடுதான் நடுவர் கடமை புரிய வருகிறார்.
3) நடுவரின் பங்கு முக்கியமானது அதை நடுவரும் உணர வேண்டும்.
4) நடுவர் எவ்வாறு சட்டத்தையும் அதன் நுணுக்கத்தையும் கடைப்பிடிக்கின்றாரோ அதன்படிதான் விளையாட்டில் மகிழ்ச்சியுமிருக்கும்.
5) சில எழுதப்படாத பிரச்சினைகள் எழலாம் அவைகளைத் தீர்ப்பது நடுவரின் புத்திசாலித்தனமாகும். அதுதான் 18வது சட்டம் பொது அறிவைப்பாவி என்பதாகும் 19வது சட்டம் நீ நீயாகவே இரு (Be your self) 20வது சட்டம் நீதிபதியாக இரு (Be Judge)
6) வீரரின் நோக்கம் வெற்றி பெறுவது நடுவரின் நோக்கம் நெறிபடு ஆட்டம் (Fair play) நோக்கம் நெறிபடு ஆட்டம் (Fair Play) நடைபெறுகின்றதா என்பதை கவனிப்பது.
7) கோபம் கொள்ள நடுவருக்கு உரிமையில்லை.
8) நடுவரின் மனத்தன்மையை எல்லோரும் மதிக்க வேண்டும். அவருக்கும் சுயமரியாதை உண்டு.
9) நடுவருக்கான மூன்று நிலைகள்.

    Fit – தகுதி　　Fast – வேகம்　　Fair - நடுநிலை

10) நடுவரின் தீர்ப்பை நன்மனத்துடன் ஏற்றுக்கொள் ஆட்டவிதிகளைப் பொறுத்தவரை நடுவரின் முடிவு இறுதிமுடிவானது.
11) நடுவர் உன்னை எவ்வாறு மதிக்க வேண்டுமென்று நீ நினைக்கிறாயோ அவ்வாரே நடுவரையும் நீ மதி.
12) எனக்குச் சார்பாக நடுவர் முடிவு கூறும்படி நடுவரிடம் விண்ணப்பிக்காதே.
13) எதிரணியினருக்கு ஆபத்தில்லாத வகையில் நெறிப்படு ஆட்டம் ஆடு.
14) எந்த சந்தர்ப்பத்திலும் உனது உணர்வுகளை கட்டுப்படுத்திக்கொள்.
15) பிரச்சினைகள் எழும் வேளைகளில் எப்போதும் நடுவரை ஆதரி
16) விளையாட்டு மனப்பான்மைக் கெதிராக நடந்து கொள்ளாதே.
17) முறைப்படி வராத வெற்றி வெற்றியல்ல.
18) வெற்றியைக் கண்டு குதூகலமடையாதே, தோல்வியைக் கண்டு துக்கமடையாதே.
19) நீர் ஆடுவது விளையாட்டு அது போராட்டமல்ல.
20) நல்ல பார்வையாளர்கள் உனக்கு நீதிபதியாக இருப்பர்.
21) வெற்றியானாலும் தோல்வியானாலும் எதிரணியினரை பாராட்டத் தவறாதே.
22) வீரனுக்கு அழகு நல்லடக்கம்.
23) விளையாட்டை அதற்காகவே ஆடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) உனக்காகவன்றி உன்னணிக்காக ஆடு.

25) விளையாட்டு வீரர் வெற்றியிலும் நல்லவன் தோல்வியிலும் நல்லவன்.

26) வெற்றியின் போது தன்னடக்கம் கொள் தோல்வியின் போது பெருந்தன்மையாக நட.

27) விளையாட்டின் போது உனது திறமையை மட்டுமல்ல நேர்மை, ஒழுக்கம், மனப்பக்குவம் என்பவற்றையும் காட்டு.

28) வெற்றியன்று பங்கு கொள்ளலே முக்கியம்.

29) ஒருவரின் விளையாட்டில் காட்டும் ஒழுக்க தன்மையே அவனது வாழ்விலும் பிரதிபலிக்கும்.

30) நீ சார்ந்துள்ள அணியை உற்சாகப்படுத்து ஆனால் எதிரணியை கேலி செய்யாதே. (Cheer yout own side. But to not jeer at the other side)

31) எதிரனியினர் நன்றாக ஆடும் பொழுது அவர்களுக்கு பாராட்டுத்தெரிவி.

32) நல்ல பார்வையாளர்கள் நல்ல வீரர்களை உருவாக்க முடியும்.

33) நீ சார்ந்துள்ள அணி முறைகேடாக ஆடுவதற்கு ஊக்கமளிக்காதே.

34) ஆடுகளத்தில் நடப்பது விளையாட்டு போரல்ல. பின் ஏன் நீர் கல்லையும் பொல்லையும் எடுக்க வேண்டும்.

35) நடுவருக்கு சுயமரியாதை உண்டு என்பதை மறவாதே.

36) நடுவரும் ஒரு மனிதப்பிறவி தவறு செய்யக்கூடியவர் என்பதை மறவாதே.

37) நடுவர் அழைக்காமல் ஆடுகளத்தினுள் நுழையாதே.

38) நடுவர் சுமக்கும் பாரத்தை நீ தூக்கும் வரைக்கும் அதன் கஷ்டம் உனக்கு தெரியாது.

39) ஆடுகளத்தினுள் அல்லது எல்லைக் கோட்டில் நின்று துணை நடுவருக்கும் வீரர்களுக்கும் தொல்லை கொடுக்காதே.

40) ஆட்டக்காரர்களுக்கிடையில் விளையாட்டில் பிரச்சினை ஏற்பட்டால் அதனை தீர்த்து வைக்க நடுவர் இருக்கிறார் என்பதை மறவாதே.

என்னைப் பொருத்தவரையில் பாடசாலை மாணவர்கள் மட்டுமல்ல எனது ஊர் திருகோணமலை மாவட்டம் முழுவதும் மட்டுமல்ல நாடு பூராகவும் வீரர்களில் பலர் உதைப்பந்தாட்ட சட்டத்தை மதிக்காது விளையாடிக் கொண்டுதான் இருக்கின்றனர். நடுவர்களில் சிலர் நடுவர் என்பதை மறந்து செயற்படுவதும் நடுநிலமை தவறுவதும் நான் கண்ட உண்மை பார்வையாளர்கள் தமது பணியை மறந்து செயற்படுவது வீரர்கள் தமது பணியை மறந்து செயற்படுவது. இதை அவர்கள் தெரிந்து செய்கின்றார்களா? அல்லது தெரியாமல் செய்கின்றார்களா? என்பது புரியாத புதிராக உள்ளது. இங்கே நான் சில குறிப்புகளை எழுதியுள்ளேன் எனக்கு தெரிந்த குறிப்புகள் இதனை எமது கல்லூரியின் 150வது வருட பூர்த்தி நூலில் வெளியிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு இறைவனுக்கு நன்றி கூறியவனாக இதனை பார்த்த பிறகு உதைப்பந்தாட்டம் விளையாடுபவர்களில் சிலர் வந்து என்னிடம் இனிமேல் நான் உதை பந்தாட்ட விதிகளை கடைப்பிடித்து விளையாடுவேன் எனக் கூறினாலே போதும் பயனடையக்கூடியவர்கள் பயனடையட்டும் என்ற நோக்கத்தில் இதனை நான் எழுதி இருக்கின்றேன். எனது பாடசாலை மாணவர்களும் எனது ஊர் இளைஞர்களும் இதனை புரிந்து சட்டத்தை புரிந்து நியதிகளை கடைப்பிடித்து நேர்மையான கடமையை நடுவர்கள் புரிந்து பார்வையாளர்கள் தமது பணியை சிறப்பாக செய்து நாளைய சமுதாயம் விளையாடி வெற்றிதோல்விகளை சகித்து சிறந்த உதைப்பந்தாட்ட சமூகம் உருவாக வேண்டும் எனக் கேட்டு நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதத்தின் தேவைகள்.

திரு.க.உமாபதிசிவம் B.Sc.Dip.in.Edu
ஆசிரியர்
தி/சண்முக இந்து மகளிர் கல்லூரி

"எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என்ற வள்ளுவர் வாக்கியத்திற்கு இணங்க எமது கண்களில் ஒன்று எழுத்தென்றால் மற்றொரு கண் எண் என்பதில் எதுவித ஐயமுமில்லை. ஆகவே இவ்வெண்ணானது ஆரம்பகாலத்திலிருந்து இறுதிக்காலம் வரைக்கும் மிகவும் முக்கியமானதாகும். குழந்தைப்பருவத்தில் இருக்கின்ற பிள்ளையானது ஒன்று இரண்டு மூன்று என்று எண்களை கூற ஆரம்பிக்கிறது. அங்கு கணிதம் துளிர்விட ஆரம்பிக்கின்றது. தொடர்ந்து பிள்ளை வளர கணிதமும் வளர்ச்சியடைந்து பிள்ளைக்கு கணிதம் தேவையான ஒன்றாகிவிடுகிறது. தொடர்ந்து சமூகத்துடனும் தொடர்புறுகிறது.

# ஏரிக்கரையில் ஓர் கடிதம்.

ஏனோ புரியவில்லை ...
எரிகின்றது உடலெல்லாம்!
நா குழறுகின்றது...
நரகமாகிப் போன உலகைப் பார்த்து!

வயிற்று நரம்புகள் வீங்கி வெடிக்குமோ
வலியோடு உருவாகும் பசியின் வதையால்!
உடலின் ஈரத்தை குடித்த வெயில்
உயிரின் ஈரத்தையும் உறிஞ்சுகின்றது!

இறுகிப் போன கைகளில்
ஏதோ உரசுகின்றது
இறுக்கிப் பிடிக்கின்றேன் நானும்
இது அவள்தானென்று...
குத்திய வலியில்
குருதி பிசுபிசுக்கின்றது
கூடவே உணர்கின்றேன் - இது
அவளில்லை முள்ளொன்று...!

இருட்டடித்த ஞாபகங்களை
இத் துயரில் மீட்டுகின்றேன்...
இருண்ட உலகம் அது...
இதற்கு முன் இருந்த இடம் ...

உலகைக் கண்டு உதைத்தேனா நான்? இல்லை ...
அவளைக் கண்டே மகிழ்ந்தேன்!
உடலால் வருந்திப் பின் - எனை
உற்று நோக்கி விறைத்தாள்!

ஏனென்று தெரியவில்லை
எடுத்துச் சென்றாள் என்னை...
அவள் அழவும் இல்லை
அவரசமாய்ச் சென்றுவிட்டாள்...
ஏரிக்கரையின் கற்குவியலில் - எனை
இன்னொரு கல்லாய் வீசிவிட்டு !

தாயவள் என்பவள் அவள் தானே?
தேவைக்காய் எதற்கும்
சென்றிருப்பாள் - என்
கருவறை வாசம் மாறவில்லையே
கட்டாயம் வந்து கட்டியணைப்பாள்

அழுகுரல் அவள் நெஞ்சில்
ஆழமாய் ஊன்றும் - என்னை
பருந்தும் நரிகளும் சூழ்கின்றதே...
பசியோ அவற்றுக்கும் - இல்லை
பரிதாபமோ என்னில்

காத்திருப்பேன் எனை சுமந்தவளை
வழிப்போக்கனாய் கூட – அவள்
வழி திரும்பும் என்று ...

இப்படிக்கு
ஏரிக்கரையில் வீசப்பட்ட
ஏற்பாரற்ற அவளின் குழந்தை!

திருமதி.யெளவனா வசந்தன்
ஆசிரியர்
தி/புனித சூசையப்பர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பொன் விழாவிலே கால்பதிக்கும் சாலை.

எங்கள் காவலாம் சூசை தந்தையே!
மங்களங்கள் என்று சொல்லி
இன்று பாடுவோம்.

கல்லூரிக்கு ஒரு தந்தை
எவர்க்கும் இனிய தந்தை
பாதுகாவலின் தந்தை
இயேசுவை வளர்த்த தந்தை
அவரே எங்கள் தந்தை

எமது கத்தோலிக்க குருக்களின் உழைப்பில் எழுந்த – சாலை
மாணவர்களை மகத்தாக உயர்த்த உதித்த – சாலை
முப்பொன் விழாவிலே கால்பதிக்கும் - சாலை
சகல துறைகளிலும் ஈடுபட்டு முன்னேறும் - சாலை
அதுவே திருமலை புனித சூசையப்பர் - பாடசாலை

மாணவர் உயர்வுக்கு வழிசமைக்கும் - சாலை
மாணவர்க்கு நற்பெயர் பெற்றுக்கொடுக்கும் - சாலை
இடையூறுகளை தகர்த்தெறிந்து முகம் கொடுக்கும் - சாலை
நல்லோர்களை தன்னகத்தே கொண்டிருக்கும் - சாலை
மாணவர்களை சாதனை புரியவைக்கும் - சாலை

பல்லாண்டுகள் கடந்துவந்த உன்னத – சாலை
புனிதராம் சூசையப்பரின் பெயர்கொண்ட – பாடசாலை

அதுவே திருமலையில் தலைநிமிர்ந்து நிற்கும்
எமது, திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரிச்சாலை.


வாழ்க வாழியவே...

திருமதி.மே.சு.பயஸ் அமலநாதன்
ஆசிரியர்
தி/புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rev. Fr. Gregory Donesan



**Born**
**21.09.1970**

**Died**
**04.01.2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண.பிதா டொனேசன் அவர்களின் மறைவையொட்டி ஆசிரியர் சி.காண்டீபன் அவர்களால் எழுதி 05.09.2001 அன்று வாசிக்கப்பட்ட அஞ்சலிக் கவிதை

## நெஞ்சம் குமுறுதைய்யா உம்பிரிவு கண்டு

நெஞ்சம் குமுறுதய்யா
உம் பிரிவு கண்டு!

நீர் ...
கடந்து வந்த பாதையெல்லாம்
முட்களாய் இருந்ததால்
கடக்க இருக்கும் மாணவர்களின் பாதையை
பூக்களாய் மாற்ற முனைந்தீரே !

அதிபராய் ஆசிரியராய் பெற்றோராய்
பங்கெடுத்தே பாடசாலையில்
சேவையைச் செய்வார்கள் பலபேர்
ஆனால் நீரோ ...
எந்தப் பதவியும் இன்றி
எம் பாடசாலையில் சேவை ஆற்ற வந்தீரே!

நெஞ்சம் குமுறுதய்யா
உம் பிரிவு கண்டு!

ஒழுக்க நடவடிக்கைக்குப்
பொறுப்பாக இருந்து
அதனால் வந்த துன்பங்களைத் தாங்கி
"மாணவரின் முன்னேற்றமே
எனது முன்னேற்றம்"
என்ற கொள்கையின்
கைகளைப் பிடித்துக்கொண்டு
மாணவர் சமூகத்திற்கு
ஒளி ஏற்ற வந்தீர்களே!

நெஞ்சம் குமுறுதய்யா
உம் பிரிவு கண்டு!

குவலயம் போற்றும்
குருத்துவப் பணியில்
உதவிப் பங்குத்தந்தையாய்
பரிணமித்தீரே!

உடையில் சுத்தமும்
நடையில் வீரமும்
குரலில் கம்பீரமும் - செய்
திறனில் தீரமும்
நெஞ்சினில் ஈரமும்
கொண்டு திகழ்ந்தீரே
எங்கு இனிக் காண்போம் உம்மை

நெஞ்சம் குமுறுதய்யா
உம் பிரிவு கண்டு!

வறண்ட நிலத்திற்கு
மழை மேகம் போல்
எம் மாணவர் மேல்
தளராத அன்பு கொண்டீரே
உம் பிரிவால்
துடுப்பில்லாப் படகுபோல்
துடிக்கின்றோம் நாமெல்லாம்

அழுகின்றோம் அழுகின்றோம்
உம் பிரிவு கண்டு
தொழுகின்றோம் தொழுகின்றோம்
உம் ஆத்மா சாந்தியடைய ...

மனிதர்கள் மரிக்கலாம்
புனிதர்கள் மரிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆக்கங்கள்

## எனது பாடசாலை

என்னைப் பெற்ற அன்னை என்னை வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டு பாசத்தை கொட்டி சீராட்டி பாடசாலையில் ஒப்படைத்தார்.

ஆரம்பத்தில் சிறிது குழம்பியும், ஒரு கிழமைக்குள் மிகுந்த களிப்புடன் பாடசாலை சென்றேன். அதற்குக் காரணம் எனது பாடசாலை புனித சூசையப்பர் கல்லூரியே. அதனையும் விட எமக்குப் படிப்பித்த சகல ஆசான்களினும் எம் சக பிள்ளைகளினும் பால் கொண்ட அன்பும், பாசமுமே. எம்மை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் எமக்குக் கல்வி புகட்டுகின்றனர். அதிபர் முதல் ஆசிரியர் வரை எம்மை வழிநடத்தியமையே மேலும் எமக்குப் பாடசாலை மீது கொண்ட பற்றை அதிகரிக்கச் செய்துள்ளது. இது எமக்குப் பாடசாலை மீது கொண்ட பற்றை அதிகரிக்கச்செய்துள்ளது. இது எமக்குக் கிடைத்த ஆசீர்வாதமாகும். அதற்கும் மேலாக 150ம் வருட காலத்தில் காலடி எடுத்து வைத்த எமது பாடசாலை சகல துறைகளிலும் முன்னேறி முப்பொன்விழாவை சிறப்பாகக் கொண்டாடவும், எமது அதிபர், ஆசிரியர், மாணவர், உதவிபுரியும் நல்லெண்ணம் கொண்டோர் அனைவரையும் புனித சூசையப்பரின் ஆசீர் நிறைவாக கிடைக்கப்பிரார்த்திக்கின்றோம். வணங்குகின்றோம்.

கொலின் பயஸ் நிரோஷன்
தரம் 3A

---

## அன்னை

மூன்றெழுத்தின் முத்து இரத்தினம் என் அன்னை
அன்பு எனும் ஆணி வேரின் அடித்தளம் என் அன்னை
உயிர் எனும் உன்னதத்தின் உண்மையாளர் என் அன்னை
கடல் கொண்ட சீர்கொடியின் முத்தாவாள் என் அன்னை

கவிபாடும் குயிலும் இனியாள் என் அன்னை
வண்ண மயிலின் தோகையின் வர்ணங்கள் என் அன்னை
பச்சைப் பசுங்கிளியின் கொஞ்சு தமிழ் என் அன்னை
உருண்டோடும் நீர்த்துளி சேரும் சமுத்திரம் என் அன்னை


ஈகையின் இருப்பிடம் என் அன்னை
பாரதம் போற்றும் குலவது என் அன்னை

நீ என்னை கருவறையில் சுமந்த வலிக்கு ஈடாகுமோ?...
என் நெஞ்சறையில் உன்னை சுமக்கும் வரம்.

ஜெ.அரிநாஸ்
தரம் - 4B




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 01 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 02 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 03 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 04 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 05 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 06 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 07 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 08 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 09 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 10 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 11 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 12/ 13 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித சூசையப்பர் கல்லூரி...

இன்று நேற்று அல்ல ...
கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்...
நமது இலங்கைத்தீவில் நாடுபிடிக்கவென ...
கப்பல்களில் வந்த வெள்ளையர்களும்
மதம் பரப்பவென அதே கப்பலில் வந்த
வெள்ளைப் போதகர்களும் ஒதுங்கிய இடங்களில்
நமது திருமலைப்பட்டணமும் ஒன்றாகும்
மதத்தைப்பரப்ப கல்விதனை மூலகமாகக் கொண்டு
தொடங்கப்பட்டன கல்விக்கூடங்கள்
இந்த அடிப்படையில் அடித்தளமிடப்பட்டதே
நமது புனித சூசையப்பர் கல்லூரியாகும்.
எத்தனையோ குருமார்களின் தியாக உழைப்பில்
உருவானதே நம் கல்லூரி.
வாழ்வுக்கு வழிகாட்ட வடிவமைக்கப்பட்ட
நமது கல்லூரியில் பொறியிலாளர், வைத்திய கலாநிதிகள்
சட்டவல்லுனர் என உயர் பதவிகளுக்கு
மாணவச் செல்வங்களை உருவாக்கிய பெருமை
நம் கல்லூரிக்கே உரித்தானதாகும்.
இன்னும் சொல்லப் போனால் எமது உடலமைப்பையும்
உருவாக்கவென உதைபந்தாட்டமும் பல்வேறு
சந்தர்ப்பங்களில் அகில இலங்கையிலும்
வெற்றிவாகை சூடி, அடுத்தடுத்து சம்பியன்களாக
திகழ்ந்தவர்கள் 'யோசப்பியன்ஸ்' ஆவார்
இதே புகழில் நிலைத்து நிற்க, பல்கலைகளிலும்
சிறந்தோங்க மாணவர்களாகிய நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

கிறிஸ்ரி ருக்சான் திருமரூபன்
ஆண்டு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெத்தமனம் பித்து! பிள்ளை மனம் கல்லு!!

அன்றும் அவள் எதிர்பார்ப்புடனேயே வாசலில் மணிக்கணக்காய் நின்றாள். ஆனால் அன்று ஞாயிற்றுக்கிழமையென்றும் கடிதக்காரர்களுக்கு விடுமுறையென்றும் அவளுக்கு தெரியவில்லைபோலும், இல்லையெனில் குமரன் மேல் கொண்ட பாசமும், ஏக்கமும் அதை மறைத்து விட்டன போலும். மதியம் வரை குட்டிபோட்ட பூனையாக வாசலையே வலம் வந்த அவளை எவரும் தடுக்கவும் இல்லை, காரணம் கூறி அவளின் எதிர்பார்ப்பை கலைக்கவும் இல்லை. ஏனெனில் இன்று அவளது பிறந்தநாள். சிறிது நேரத்திலேயே தன் சகாக்கள் ஏற்பாடு செய்த பிறந்தநாள் விழாவை எந்தவித ஈடுபாடுமின்றி நிறைவேற்ற சென்றாள் அவள். அவள் தான் கண்ணம்மா.

கண்ணம்மா யாழ் மண்ணை பூர்வீகமாக கொண்டவள். வசதி மிக்க குடும்பத்தில் பிறந்தவள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்ந்தவள். இத்தனையும் அவளுக்கு தன் பெற்றோர் வாகன விபத்தில் இறக்க முன்னரே கிடைத்து வந்தன. பன்னிரண்டு வயதில் தன் பெற்றோரை பறிகொடுத்த அவளிடமிருந்த சொத்துக்களை சொந்தங்கள் போட்டிபோட்டுக்கொண்டு சூறையாடின. இதனால் அவள் தன்படிப்பை தொடர்வதற்குப் பதில், வீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டாள். இவ்வாறு இருக்கையில் உறவுகளாலேயே ஒதுக்கப்பட்ட இவளுக்கு இரு நல்ல உள்ளங்களின் மூலமாக ஒரு சிறந்த துணை அமையப்பெற்றது. அவனுடைய பெயர் கிருஷ்ணமூர்த்தி அவனும் சிறுவயதிலேயே பல இன்னல்களின் மத்தியில் வளர்ந்ததால் இருவருக்கிடையான அன்புப்பரிமாற்றத்தில் எந்தக் குறையுமிருக்கவில்லை கிருஷ்ணமூர்த்தியும் தன்னால் இயன்றவரை கண்ணம்மாவை மகிழ்ச்சியாக வைத்திருந்தான். இதற்கு அடையாளமாக கண்ணம்மாவிற்கு ஒரு ஆண்குழந்தையொன்று கிடைக்கப்பெற்றது. ஆண் பிள்ளையென்பதால் அன்று அவள் அடைந்த மகிழ்விற்கு அளவில்லை. மேலும் குழந்தை குமரக்கடவுள் போல அழகாக இருந்ததால் அன்றே அவள் குழந்தைக்கு பெயர் குமரன் என்று சூட்டிவிட்டாள் குழந்தை பிறந்தபின் அவளும் கிருஷ்ணமூர்த்தியும் குழந்தைக்காக அதன் எதிர்காலத்திற்காக பாடுபட்டு உழைத்தனர். இவ்வாறு இவர்கள் சொந்தமான சிறிய வீட்டை வைத்திருக்கும் அளவிற்கு நிலை உயர்ந்தனர். மேலும் ஐந்து மாடுகளையும் கடனுக்கு வாங்கியிருந்தனர். இவ்வாறு இவர்களது வாழ்க்கை ஓரளவு சீராக செல்கையில் தான் சனீஸ்வரனின் பார்வை விழ தொடங்கியது வடக்கு மண்ணில் பல யுத்தப்பிரகடனங்கள் மேற்கொள்ளப்பட்டன. தமிழர்கள் பலர் பல சித்திரவதைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக நேர்ந்தது. இப்படி ஒருநாள் இரவு கண்ணம்மாவின் வீடமைந்திருந்த பிரதேசத்திலும் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது பல மக்களோடு மக்களாக கண்ணம்மா தன் குழந்தையை தூக்கியபடி கணவனோடு தப்பியோடினாள் அன்று அவர்கள் தமக்கென்று இருந்த அந்த சிறிய ஆதாரத்தையும் இழந்துவிட்டனர். தினம் ஓர் இடத்தில் அடைக்கலம் புகும் நிலை ஏற்பட்டது. அன்று ஒரு பாடசாலையில் இரவு உறங்கிக்கொண்டிருந்தனர். திடீரென தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் நிலையறியாது அனைவரும் ஓடினர். இதில் கிருஷ்ணமூர்த்தி வானதாக்குதலிற்கு இரையானான். இருட்டில் நிற்கக்கூட முடியாமல் கண்ணம்மா கதறியபடி குழந்தையை தாங்கியபடி ஓடினாள். இதனால் அவள் மனம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இருந்தும் தன் பொறுப்பை அவள் மறக்கவில்லை.

காலங்கள் உருண்டோடி பதினைந்து வருடங்கள் கழிந்துவிட்டன. பல மாற்றங்கள் ஏற்பட்டன. இருந்தும் கண்ணம்மாவின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. அவள் குமரனிற்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தாள். இரவு பகல் பாராது பல வீடுகளில் வேலைகள் செய்து குமரனின் கல்விக்கு போதும் என்ற வகையில் பணம் சம்பாதித்தாள். குமரனும் சிறப்பாகக் கல்வி கற்றுவந்தான். குமரனுக்கு இந்நிலையில் நல்ல வாய்ப்பொன்று வந்தது. உயர் கல்வியை வெளிநாட்டில் தொடரும் சந்தர்ப்பம் அது, நல்ல எதிர்காலத்தை காட்டி அது நின்றது ஆனால் அதற்கு குறித்த தொகை பணத்தை செலுத்தவேண்டும். அப்பொழுது யுத்தத்தால் காணியை இழந்தோருக்கு நட்டஈடு வழங்கப்பட்டிருந்தது. கண்ணம்மாவும் தனக்குரிய பணத்தை பெற்றிருந்தாள். அவள் சிறிதும் யோசிக்காது அப்பணத்தை கொண்டு அச்சந்தர்ப்பத்தை குமரனுக்கு ஏற்படுத்திதந்தாள். தாங்கள் பட்டபாட்டிற்கு பலன் கிடைக்கப்போகுதென சந்தோஷமடைந்தாள். ஆனால் இன்றுடன் குமரன் சென்று 5 மாதமாகிறது எந்தவித கடிதமும் அவளுக்கு வரவில்லை. அவளும் தினம் தினம் வாசலில் தவம் கிடக்கிறாள் எந்த பலனும் இல்லை. இதுதான் பிள்ளைப் பாசமும் பிள்ளையின் பாசமும்.

செல்வன்.சிசேதுராகவன்
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயயோசப் வாசின் பிறப்பும் வாழ்க்கைப் பணியும்.

இற்றைக்கு 2017 வருடங்களுக்கு முன் இயேசுவின் போதனைகள் உலகெங்கும் போதிக்கப்பட்டு வருவதற்கு பல தடைகள் உருவாக்கின. சுதந்திரமாக போதனைகள் செய்வதற்கு பலரும் இடர்களாக இருந்தனர். ஆயினும் கிறிஸ்து இயேசுவின் மேல் அதிகளவு தாகம் கொண்டவர்கள். தம் உயிரை துட்சமாக மதித்து இயேசுவின் போதனைகளை மேற்கொண்டனர். இந்த வகையில் நம் நாடும் சுமார் 30 வருடங்களாக ஆயன் இல்லா ஆடுகளாக அவதிப்பட்டு கொண்டிருந்தநிலையில் இதனை உணர்ந்து இந்தியாவின் குருவானவர் ஒருவர் இலங்கை மண்ணில் கால்வைக்க முன்வந்தார். அவர் வேறுயாரும் அல்ல இலங்கையின் திருத்தூதராம் தூய யோசப்வாஸ் அடிகளார் ஆகும்.

இவர் கிறிஸ்துவிற்கு பின் 1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி இந்தியாவின் யோவா மறைமாவட்டத்தைச் சேர்ந்த பெனாலி நகரில் சென் கோவா எனும் கிராமத்தில் கிறிஸ்தோபர்வாஸ் மரியமிரன்டாவிற்கு நான்காவது மகனாகப் பிறந்தார். இளமையிலே இறைபக்தி கொண்டவராக திகழ்ந்தார். அடிகளார் சிறுவயதில் இருந்தே குருவாக வரவேண்டும் என்ற ஆர்வம் கொண்டு ஆண்டவரின் குரலுக்கு செவி சாய்த்தார். இதற்கமைய அடிகளார் 1676ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார் இதன் பின் பாதணிகளே இல்லாது பணிபுரிந்தார்.

இறைவனின் குரலுக்கு செவிகொடுத்து அடிகளார் இறைவனுக்கு பணிசெய்ய வேண்டும் என சிந்தனை கொண்டு தன் பணியினை ஆரம்பித்தார். 1685ம் ஆண்டு புராட்டாதி மாதம் 21ம் திகதி தியாகசம்பிரதாய சபையில் சேர்ந்து சில காலம் சிரேஷ்டராகவும் கடமையாற்றி பின் 1686ல் இறைவனின் அன்பினை சுவைத்திட தவிக்கும் மக்களைத்தேடி பணிசெய்திடவே கோவை அதிமேற்றாணிமாரின் அதிகாரம் பத்திரம் பெற்று ஓர் யாசகனாக வேடம் பூண்டு இலங்கைக்கு இரகசியமாக புறப்பட்டு நம் நாட்டிற்கு வந்திட அடியெடுத்த இறைமுத்தே எம் தூய யோசவாஸ் முனிந்திரர்.

லூக்கா 10:6 கூறப்பட்டுள்ளது போல "உங்களுக்குச் செவி சாய்ப்பவர் எனக்கு செவி சாய்க்கிறார் உங்களைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பியவரை புறக்கணிக்கிறார்" என்பது போல இலங்கைத்திருச்சபையில் குருவாம் தூயயோசவ்வாஸ் முனிந்திராரின் போதனைகளையும் பணியினையும் தாகத்தோடு ஏற்றவர்கள் மத்தியில் அவரை வெறுப்பவர்கள் பலரும் காணப்பட்டனர்.

கி.பி. 1687ல் இலங்கைத்தீவின் வடபகுதிக்கு ஜோன் என்ற இளைஞனுடன் வந்த அடிகளார் மக்களோடு ஒருவராக இணைந்து அவர்களிடம் இருந்து பெற்ற எஞ்சிய உணவினை உண்டு தன் பசியினைப் போக்கினார். இது மட்டுமல்ல அடிகளாரை வேவுகாரன் என்று சந்தேகம் கொண்டு அவரை இரண்டு வருடம் சிறையில் போட்டனர். ஆயினும் ஆண்டவரின் பணிசெய்ய எனக்கு சிறை போதுமானதே என்று தம் பணியினை அங்கு செய்தார்.

அடிகளாரின் வாழ்வில் கடவுளின் அனுக்கிரகம் எப்போது இருந்தது என்பதற்கு அடிகளார் தன்வாழ்நாளிலே நடந்தேறியுள்ளது. ஒரு தடைவ இலங்கை முழுவதும் வரட்சி ஏற்பட்டபோது கடவுளை நோக்கி நம்பிக்கையுடன் செபித்து மழையினை வரவித்தார். இந்த நம்பிக்கை அடிகளாருக்கு சிறுபராயம் முதலே இருந்தது. அடிகளார் தனது வாழ்வில் பல பயணங்களைச் செய்தாலும் இரவு நேரங்களில் ஆலயங்களுக்குள்ளே இருந்து திவ்வியநற்கருணை முன்இருந்து அதிகமான நேரங்களை செபத்தில் செலவழித்தார். இந்த வலிமையினாலேயே கண்டியில் அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரித்தார். இவ்வறான அடிகளாரின் வாழ்க்கையினால் அவரது வாழ்வு எளிமை துரவு நிலைகளால் அடையாளப்படுத்தப்பட்டு அடிகளார் கீழத்தேய சந்நியாசியாகவும், தூய மனிதராகவும் கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கரல்லாதோராலும் மதிக்கப்பட்டார். அடிகளாரை "சம்மனசுசாமி" என்று அறிவிக்கப்பட்டது.

அடிகளார் ஒரு நற்கருணையின் மனிதனாகவும் சிந்தரிக்கப்படுகிறார். அவர் இதனை தனது வாழ்விலும் நிரூபித்துள்ளார் ஞாயிறு நற்கருணை கொண்டாட்டமின்றி எம்மால் எமது கிறிஸ்தவ வாழ்வு வாழ முடியாது என்பதை கூறியே இவர்கள் மரித்த மறைசாட்சிகளைப்போல் சிதறிப்போன மந்தைகளை ஒன்றுகூட்டி திருப்பலியை ஒப்புக்கொடுத்த போதே இலங்கைத்திருச்சபையானது மீண்டும் புத்துயிர் பெற்றது. இதற்காகவே தான் வாழும் போது தன் கையில் கொண்டுவந்த ஒரேஒரு பொருள் திருப்பலி பாத்திரங்களாகும்.

இத்தகைய இதே நம்பிக்கையுடன் வாழ்ந்த அடிகளார் மக்களுக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படும் மூப்பர்களை தேர்வுசெய்து பொது நிலையினரின் தலைமைத்துவத்தை அதிகமாக பயன்படுத்தி இலங்கையை திரு அவையினை சிறப்பாக கட்டியெழுப்பி மறைபோதகத்தினை ஏற்படுத்தி மறைஆயன்களுக்கு சிறப்பான உதாரணமாகவும் திகழ்ந்து இலங்கை மக்களுக்காகவே வாழ்ந்து அவர்களுக்காவே பல இன்னல்கள் துன்பங்களை அனுபவித்து கி.பி 1711ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி கண்டியில் ஓர் சிற்றாலயத்தில் தன்னுயிரைத்துறந்தார்.

அடிகளாரின் உன்னத பணியின் நிமித்தம் 1995ம் ஆண்டு தைமாதம் 21ம் திகதி அருளாளராக தூய ஜோன்போல் அடிகளாரால் உயர்த்தப்பட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் 2015ம் ஆண்டு தைமாதம் 14ம் திகதி புனிதராக இலங்கை நாட்டின் திருஅவையின் தூதுவனாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

அடிகளாரின் சேவை எம்மண்ணிலும் நிகழ்தேறியுள்ளது. என்பதற்கு அடையாளமே இன்று நாம் வேதத்தீவு என்ற இடத்தில் அவரது பெயரால் எழுப்பும் ஆலயமும் அடிகளாருடன் உடன்பணியாளராக இருந்த அருட்தந்தை விமல்லோவாவின் கல்லறையும் ஆகும். எனவே தூய யோசவ்வாசின் பண்புகள் நம்ஒவ்வொருவர் வாழ்விலும் மலர அவர் நமக்காக இறைதந்தையிடம் பரிந்து பேசுவார்.

அடிகளாரின் புகழ்வளர வேண்டும். நம் வாழ்வு சிறக்க அவர் வழியாக இறைவனிடம் மன்றாடுவோம்.

செல்வன்.D.சனோஜ் அன்ரனி
தரம் 12 வர்த்தகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கூடைக் கொழுந்து – திறனாய்வு

மனதிலே ஒளிக்கீற்றைப்போல் கணப்பொழுதில் தோன்றி மறையும் சிறு நிகழ்வு கூட சிறுகதையாக உருமாறலாம். அந்தவகையிலே என்.எஸ்.எம். இராமையாவின் சிறுகதையும் மனதிலே ஆழமான தார்ப்பரியத்தை ஏற்படுத்துவதைப்போல் உள்ளது. கதையின் வேகமும் எதிர்பார்ப்பும் சற்றும் குறைவடையாமல் நகர்த்தி செல்வது ஆசிரியரின் திறனாகும். அந்தவகையில் என்.எஸ்.எம்.இராமையா அவர்கள் 1960களில் மலையகத்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பற்றி எடுத்துரைக்க முயன்ற முதற்சிறுகதையே ஒரு கூடைக்கொழுந்து ஆகும்.

கதைக்கரு, கதைக்களம், கதாபாத்திரங்கள், கதைச்சுருக்கம், கதையின் மொழிநடை, தொனிப்பொருள் என்பனவற்றை இக்கதையினுடாக பிரித்து நோக்கப்படவேண்டும்.

- **கதைக்கரு**

இக்கதையில் ஒரு மலையக இளம் பெண்ணான லட்சுமி என்ற ஒருத்தியின் திறமைக்கு இடப்படுகின்ற சவாலும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மீதான அதிகாரமும் அடக்குமுறையும் அதனால் அவர்கள் அடைகின்ற துயரங்கள் என்பனவற்றை எடுத்துக்காட்டுவனவாக இக்கதையின் கரு அமைந்திருப்பதை உணரக் கூடியதாக உள்ளது.

- **தலைப்பின் பொருத்தப்பாடு**

கதையாசிரியர் தங்கள் கருத்தினை தெளிவுபடுத்தும் வகையில் கருப்பொருளை கயன்படுத்துவது போலவே தலைப்பையும் பயன்படுத்துவார். 'ஒரு கூடைக்கொழுந்து' என்ற தலைப்பானது மலையகப் பிரதேசத்தை பிரதிநிதிப்படுத்துவதாகவும் அப்பிரதேசத்து மக்களுடைய அன்றாட தொழிலில் தொடர்புபடுவதாகவும் விளக்கி இருக்கின்றார். கதையில் மையப்பகுதி ஒரு கூடைக்கொழுந்தை மையமாக கொண்டது என்பதனால் தலைப்பு பொருத்தமானது எனக் குறிப்பிடலாம். ஏனெனில் பிரதான பாத்திரமான லட்சுமி ஒரு கூடைக்கொழுந்து என்பதைக் கொண்டே அவளின் செயற்பாடுகள் மாற்றமடைகின்றன.

தேயிலைத் தோட்டத்திலே பணி செய்கின்றவர்கள் கொழுந்து கிள்ளும் சந்தர்ப்பத்தில் ஒரு கூடையையே நிரப்பவேண்டும். இதனால் அங்கு ஒரு கூடைக்கொழுந்து என்ற தலைப்பு இயல்பாகவே உள்ளது.

- **கதைக்களம்**

இக்கதை இடம்பெறும் களங்களாக லட்சுமியின் வீடு, கொழுந்தெடுக்கும் மலை, கொழுந்து நிறுக்குமிடம் என்பனவாகும். இக்கதை ஆரம்பமாகும் போதே மலையில் கொழுந்தெடுக்கும் நிறை உடன் தொடர்புபட்டதாக அமைகின்றது. "அக்கா எனக்கு எது நெறை?" என்பதனுடாக இதனைக் காணலாம்.

பறிக்கப்பட்ட கொழுந்தை நிறுக்குமிடமாக ஸ்ரோருக்கு முன்னால் உள்ள இடம் அமைந்திருக்கின்றது. இச்சிறுகதையின் முக்கியமான பகுதிக்குகளமாக இவ்விடம் அமைந்திருக்கின்றது. இவ் இடத்திலேயே கங்காணி, கணக்குப்பிள்ளை, கொழுந்து நிறுப்பவர் லட்சுமி ஆகிய கதாபாத்திரங்கள் சங்கமிக்கின்றன.

மற்றுமொரு களமாக லட்சுமியும் ஆறுமுகமும் சந்திக்கும் இடமாக லட்சுமியின் லக்குடிசை அமைகின்றது. ஆறுமுகம் மாலையில் லட்சுமியின் வீட்டிற்கு வந்தால் மாலை ஏழரை எட்டு மணிவரை பேசிவிட்டுத்தான் போவான். இவ்வாறாக மேற்கூறப்பட்ட களங்கள் கதைக்ககளங்களாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• லட்சுமி பாத்திரமும் குணவியல்புகளும்

கதையின் பிரதான பாத்திரம் லட்சுமி என்பதனால் கதையோட்டத்திலேயே லட்சுமி என்ற பாத்திரப்போக்கு முக்கியம் பெறுகின்றது. கதையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரைக்குமாக லட்சுமியியினுடைய செயற்பாடுகள் தொடர்புபட்டதாக அமைந்திருக்கிறது. தோட்டத்தில் வேலைசெய்யும் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியாக இருந்தால் என்பதை அடையாளப்படுத்தினாலும் பின்னர் அவள்மீது பழி சொல்வதாக அவளை யாருமே மதிக்காத நிலையுள்ளதாக எடுத்துக்காட்டியிருக்கிறார். இவ்வாறான நிலையிலுள்ள லட்சுமி பின்னரும் குண இயல்புகளை பெற்றிருக்கின்றார். அதனை பின்வருமாறு காணலாம்.

**தன்மானமுடையவள்**

வழமைக்கு மாற்றமாக தேயிலைக் கொழுந்தின் எடையாவது அதிகரித்து விட்டது கூடையிலே அதேயளவு மீண்டும் எடுக்க வேண்டும் என்பதில் தன்மானத்தை காக்கும் வரையில் செயற்பட்டிருக்கிறாள்.

குனிந்திருக்க தலை சட்டென்று நிமிர்ந்து ஐயாவை
கங்காணியை அப்புறம் ஆட்களை ஒருமுறை சிலித்துப்
பார்த்தது தூங்கிக்கொண்டிருக்கும் புலியை விலாவில்
குத்தினால் இப்படித்தான் துள்ளி எழுந்து முறைந்திருக்கும்.

என்பதனூடாக தன்மீது சந்தேகத்தினையும் தன் திறமையின் மீதும் சந்தேகத்தினையும் கணக்குப்பிள்ளை முன்வைத்த போது அவள் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சி வெளிப்பாடை எடுத்து காட்டியதினூடாக அவளின் தன்மானம், மன உறுதி என்பன வெளிப்பட்டு நிற்கின்றன.

**விடாமுயற்சி உடையவள்**

தன்மீது சுமத்தப்படுகின்ற பழிச்சொல்லை தவிர்க்க வேண்டுமென்ற வகையில் 57 இறாத்தல நிறையுள்ள கொழுந்துகளை ஒரு கூடையிலெ எடுக்கின்றாள். இது அவள் தனக்கு ஏற்பட்ட சங்கடமான நிலையிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக முற்ச்சி செய்திருக்கின்றாள். பெண்ணுக்கேற்ற பயந்த சுபாவம் என்பதை கொண்டு ஒடுங்கி இருக்காது விடாமுயற்சி செய்திருக்கின்றாள்.

**தன்னம்பிக்கை உடையவள்**

ஆறுமுகத்தின் உதவியோடு வழமைக்கு மாற்றமான முறையில் நிறையினை பெற்றுக்கொண்டாலும் அதே போன்ற அளவினை மீண்டும் தன்னால் பெறமுடியும் என்ற தன்னம்பிக்கையோடு செயற்பட்டு 61 இறாத்தல் எடையினை பெறுகின்றாள். ஆகவே அவள் தன்னம்பிக்கை மிக்கவள் என்று குறிப்பிடலாம்.

**பிடிவாதக்குணமுடையவள்**

லட்சுமியின் மீது ஏற்பட்டு இருக்கின்ற அவலமான நிலையிலிருந்து தன்னை காத்து கொள்ளவேண்டும் என்பதில் ஆர்வமுள்ளவளாக இருந்தாலும் ஆறுமுகத்தின் உதவியாலேயே ஏற்பட்டது என்பதை அறிந்திருந்தும் அதனை நிறைவு செய்வது என்ற பிடிவதத்தோடு காணப்படுகின்றாள். ஆறுமுகம் அவளிடத்தில் வந்து அதை தவிர்த்துக்கொள்ள கூறியபோதிலும் தனது பிடிவாதக்குணத்தினால் அதனை நிறைவேற்றி விடுகின்றாள்.

**சுவாரஷ்யமானவள்**

இளமையான தோற்றத்திலுள்ள லட்சுமி வேலை செய்யும் இடத்திலே சுவாரஷ்ய தன்மையோடு காணப்படுவாள். வயது முதிர்ந்த தொழிலாளர்கள் அவளை அழைத்து தொழிலின் போது பக்கத்திலே வைத்துக்கொள்வது இயல்பாகும். உதாரணமாக "லட்சுமிக்குட்டி என்கிட்ட வாடி என்று பலரும் அழைத்தல்" என்பதனுடாக இதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மொழிநடை

இக்கதையில் இடம்பெறும் மொழிநடையானது மலையகப் பிரதேசத்தை கொண்டதாக செல்வாக்கு செலுத்துகிறது. கதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை மலையகப் பேச்சு வழக்குச் சொற்கள் நிரம்பி காணப்படுகின்றன.

"என்கிட்டே நிறை தாரேன், தொரைச்சாணி அம்மா, அவுகளுக்கு, சம்முகா, ஒப்புராணை, பொம்புளை, வதிலு, புள்ளே, போறாக, பொடசக்களி, சுப்பிறாரு, அம்பத்தி, காலங்காத்தாலே"

கதையின் இடையிடையே ஆசிரியரும் கூறிச்சொல்லும் பாங்கினைக் காணமுடிகின்றது. ஆசிரியர் கூறிச்செல்லும் பகுதியானது பொதுவான எழுத்து வழக்கிலேயே அமைந்திருப்பதும் நோக்கத்தக்கது ஆகும். கதையோட்டத்தின் பல இடங்களில் சூழலுக்குப் பொருத்தமான உவமைத் தொடர்களை இடையிடையே கையாட்டிருப்பது நயக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

"முதல்நாள் சம்பளம் வாங்குபவளை எரிச்சலோடு பார்க்கும் பிள்ளைக்காரி மாதிரி"
"ஆடி அசைந்து அம்மன் பவனி வருவது போல"

கதையாசிரியர் என்.எஸ்.எம்.இராமையாவின் வசனநடையில் கற்பனைகளோ, வர்ணனைகளோ அற்றதாக தன் கதைக்கு உயிரோட்டமானதொரு யாதார்த்தப் போக்கான நடையினையே கையாண்டுள்ளார். கதையை தொங்கவிடாததும் எந்தவொரு இடத்திலும் கதையில் சோர்வு காணப்படவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கதையின் ஆரம்பம் தொடக்கம் முடிவு வரை இவ்வாறான போக்கையே ஆசிரியர் அவர்கள் கையாண்டுள்ளார்.

- ஆசிரியரின் உத்திகள்

ஆசிரியர் கதையை கூறிச்செல்லும் பகுதிகள் யாவும் இவ்வாறாக அமைந்திருக்க பாத்திரங்களின் உரையாடல் யாவுமே பேச்சுமொழியில் அமைந்திருப்பது ஆசிரியர் கதையை நடாத்திச்செல்வதில் கையாண்ட உத்தியாகவே கருதக்கிடக்கின்றது.

கதையைப் படிப்போருக்கு தொடர்ந்து இடைவிடாது படித்துமுடிப்பதற்கு விரும்பம் ஏற்படத்தக்க வகையில் ஆசிரியர் கையாளும் திறன்களில் இதுவும் ஒன்றாகும் இப்பகுதியில் கதையின் போக்கு வாசகருக்கு ஆவலைத்தூண்டிச் செல்லும் ஒரு பகுதியாகும். "ஒற்றைக்காலில் நிற்றல்" என்ற மரபுத்தொடர்தான் கொண்ட கொள்கையில் பிடிவாதமாய் நிற்றல் எனப் பொருள் படும். எனவே ஆசிரியர் நாசுருக்காக எமக்கு முன்னமேயே கதை முடிவினை எடுத்துக்காட்டியுள்ளார். என்றே எண்ணத்தோன்றுகின்றது.

இக்கதையினை பொருத்தவரையில் இடையிடையே கதையாசிரியர் பல விடயங்களுக்கு அழுத்தங்கொடுக்க முற்படுகின்றார்.

"பெரிசா அத்தனை கூட்டத்திற்கும் மத்தியிலே வீறாப்பு பேசிடப்புலே பத்தாது சொன்ன மாதிரி செய்யணும் முடியுமா உன்னாலே?".........."
என்ற பகுதியும் இதற்கு எடுத்துக்காட்டக்கூடியதாக உள்ளது.

- முடிவு

இக்கதைக்கு ஓரளவு எதிர்பார்த்த முடிவினையே வாசகர்கள் பெற்றுள்ளார்கள் என்ற கருதக் கிடக்கின்றனது. "ஒரு கூடைக்கொழுந்து" என்ற தலைப்பு கதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை இனைந்தே காணப்படுகின்றது. என்.எஸ்.எம்.இராமையாவின் வெளிப்படையாக கூறவிளைந்த விடையத்தை கூறமுற்பட்டு இருப்பதைக்காணலாம். எவ்வாறாயினும் மலையக மக்களின் வாழ்வியல் ஓர் சிறு துவாரத்தினூடாக நோக்கப்பட்ட தொண்டு என்பதை வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரித் தாய்க்கு ஒருமடல் ...

சஜிந்தன்
12 கலைப்பிரிவு

மழையிலும் வெயிலிலும் மறக்காமல்
பாடங்கள் பத்தையும் பழுதுறாமல்
கற்றுத்தந்த என் பள்ளிக் கூடமே!
மழையென்றால் மண்ணைத்தான் சேரும்
கல்வியும், பண்பாடுமென்றால் - நாம்
உன்னைத்தான் வந்து சேர்வோம்

தோல்வி என்று சோர்ந்த எங்களைத்
தோளில் போட்டுத் தேற்றினாயே
நன்றி சொல்லிப் போற்றிடவேண்டும்
அதற்கொரு வாய்ப்பு தரமாட்டாயா – உன்
முப்பொன் வருடத்திருநாளில்

விடுகதையாய் வந்த எங்களை
விழுதுகளாய் சமூகத்தில் உயர்த்தினாயே
என் கனவுகளை நனவாக்க
களஞ்சிய சாலையாகத் தோன்றினாய் - நாம்
கருவில் இருக்கும் போதே கையில்
ரேகையாய் வரைந்து வைத்தாயோ
உன்னைப் புகழ்பாட ஒருவரம்தான்
நூற்றிஐம்பதாவது இன்பத்திருநாள்

தாகம் என்று வந்த எங்களை
கல்வி எனும் தண்ணீர் தந்துதவினாயே
அருமை சூசைத் தந்தையே
ஆசை ஆசையாய் அரவணைத்து
அழகிய முத்துமாலையாய்க் கோர்த்தாயே – உன்னைப்
புகழ்வோம் இந்த நூற்றைம்பதாவது நாளில்

புகழ்பாட ஒரு பாடல் வேண்டும்
அப்பாட்டாக நீ வேண்டும்
விருந்தினரை வெகு விமர்சையாய்
உபசரிக்கும் உன்னை விரிவுரையாக
கவிதை கூறி விருந்தளிக்கப் போகின்றேன்
உன் நூற்றிஐம்பதாவது விழாநாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் என் நன்றிகள்

(கல்லூரி வாழ்வில் இறுதி நாள் எழுதிய கவிதை ...)

போராடும் உலகில் நான்வாழ்கின்றேன்
போர்க்களம் இங்கு இல்லையா?
போராடிப் போராடி ஜெயிக்கின்றேன் - உன்னாலே
என் ஆசானே! என் ஆசானே!

ஆபத்திலே அவசரத்திலே உதவும்
என்னுயிர் நண்பனே உன்னை
நான் நினைக்க மாட்டேன்
மறந்தால் தானே நினைப்பதற்கு

உதிரம் உழைக்கும் எந்தன்
தந்தையே உனக்கு என்நன்றிகள்
அல்லும் பகலும் அரவணைத்துக் காப்பவரே
என் நன்றிகள் என்றென்றும் உங்களுக்கு

வாழ்வு தந்து வாழ்த்தும் அன்னையே!
உன்னை நான் மறவாமல் எந்நாளும்
இதயக் கமலத்துக்குள் இருத்தி
நன்றி சொல்வேன் என் தாய் நீ

ஆக்கம்
A.D.D.பிரசாத் (மடிந்த மலர்)
2013 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E (O/L) Best Result 1992 – 2015

| Year | Result | Students Name |
|---|---|---|
| 1992 | 3D, 4C, S | Mr.Sinnaththuraj – Sabesan |
| | 3D, 2C, 3S | Mr.Balendra - Sanjeevan |
| 1993 | 5D, 2C, S | Mr.Mariathas – Belarmine |
| 1994 | 3D, 5C | Mr.Selvanayakam – Gowreeswaran |
| | 3D, 5C | Mr.Pathmanathan - Amalan |
| 1995 | 3D, 4C, S | Mr.Thevendran – Thayaparan |
| | 3D, 2C, 2S | Mr.Anthonymuthu – Rajeskanna |
| 1996 | 5D, 3C | Mr.Sobinothan – Tharanga Sanjeevan |
| 1997 | 7D, 1C | Mr.Thomaspilla – Alan Niroshan |
| 1998 | 5D, 2C, S | Mr.Anantharaja – Hariharan |
| 1999 | 9D, C | Mr.Pakiyarajan – Kamalraj |
| | 9D, S | Mr.Yogaraja – Prasanthan |
| | 8D, C, S | Mr.Petor Benny Xavier |
| | 8D, 2C | Mr.Balasubramaniam Sanjeyan |
| | 8D, 2C | Mr.Neminathan - Ratnaraj |
| 2000 | 10D | Mr.Sathasivam Kirishanthan |
| | 9D, C | Mr.Sivananda Soban |
| | 6D, 4C | Mr.Tayajothinathan Mohamed saeel Antony Regan |
| | 6D, 3C, S | Mr.Antony Regan |
| 2001 | 9A, B | Mr.Sivapalasundram Raguram |
| | 8A, 2B | Mr.Selvaratnam Pratheepan |
| | 8A, 2C | Mr.Thevesigamany Dishanthan |
| 2002 | 6A, 2B, 2C | Mr.Thuraisamy Ragubaran |
| 2003 | 8A, B | Mr.Mohamed Sahardeen Mohamed Faiz |
| | 8A, 2B | Mr.Thankavadivel Tharshanth |
| | 9A, B | Mr.Sebaratam Sebatheepan |
| 2004 | 10A | Mr.Sivapalasundram Shageram |
| | 7A, 2B, C | Mr.Thajudeen Mannan Mohamed Imran |
| | 7A, 2B, C | Mr.Diroshan Hippolit fenando |
| 2005 | 9A, B | Mr.Jerome Satheesan |
| | 9A, B | Mr.Poopalaratnam Branatheesh |
| 2006 | 10A | Mr.Antonyrojan Annrestan |
| | 8A, B, C | Mr.Ketheeswaran Roshanthan |
| | 8A, B, C | Mr.Sivananthan Soroopan |
| 2007 | 6A, 2B, 2C | Mr.Mathews Niroshan |
| 2008 | 5A, B, 3C | Mr.Soundaradas Dhineeshan |
| 2009 | 6A, 2B, C | Mr.Camilus Phelician Sanjik |
| 2010 | 8A, C | Mr.Suthakaran Shankarnath |
| | 8A, C | Mr.Edword Ravindraraj Edman Godfrey |
| 2011 | 4A, 3B, 2C | Mr.Aboo thahir Asfak Ahamed |
| 2012 | 8A, B | Mr.Lavakumar Rishikeshan |
| | 8A, C | Mr.Thiyakeswaran Kobishangar |
| 2013 | 9A | Mr.Mohamed Aflal Mohamed Afham |
| 2014 | 8A, B | Mr.J.M.Sakkoop Mohamed Sabith |
| | 7A, 2B | Mr.Unthayakumaran Harishkumar |
| | 7A, 2B | Mr.Gunalan Dilushan |
| 2015 | 7A, B, C | Mr.Kamalathasan Antony |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University Entrance since 1992

1992 Mas.Kanthasami Samaiyadas - Faculty of Engineering
Mas.Jegasothy Mathan - Faculty of Medicine
Mas.Rasiah Kumaran - Faculty of Medicine
Mas.Joseph Silvester Jeyamaran - Faculty of Engineering
Mas.Xavir Sarathdany - Faculty of Medicine
Mas.Braian Rex Fernando - Faculty of Engineering
Mas.Thamotharampillai Gajendarn - Faculty of Engineering

1993 Mas.Selapillai Kamalatheepan - Faculty of Medicine
Mas.Asirvatham Amalaraja - Faculty of Commerce

1994 Mas.Ganesapillai Yuvaraj - Faculty of Engineering
Mas. Antony Jonson Jerriton - Faculty of Quantity Surveying
Mas.Mohamed Salihu Mohamed Shaheel - Faculty of Science

1995 Mas.Mohamed Thameem Mohamed Soufan - Faculty of Medicine
Mas.Sachithananthasivam Saiyolipavan - Faculty of Medicine
Mas. Joseph Antonias wimelesh - Faculty of Science
Mas.Mohamed Salimu Mohamed Shameel - Faculty of Medicine
Mas.Jesuraj Antony Robinson Fernando - Faculty of Engineering
Mas.Jegasothy Prathees - Faculty of Medicine
Mas.Supaiya Rajeshkanna - Faculty of Science
Mas.Balachandran jeyakumar - Faculty of Science
Mas,Jeevaratnam Jeevagan - Faculty of Agriculture Sciences
Mas.Sinnathurai Sabesan - Faculty of Science

1996 Mas.Christy Candeepan - Faculty of Engineering
Mas.Kulenthiraja Lester Jerald Chrishanthan - Faculty of Engineering
Mas.Mohamed Sufras - Faculty of Medicine
Mas.Mohamed Hasbulla Mohamed Hillmy - Faculty of Medicine
Mas.Rasalingam Pulenthran - Faculty of Science
Mas.Sivakanesamoorthy Thanushanthan- Faculty of Science
Mas.Konamalai Amalanathan - Faculty of Science
Mas.Mohamed Bazeer Irfan - Faculty of Agriculture Sciences
Mas.Anthony Samykuthelan Atputhan Antonraj - Faculty of Management
Mas.Thillainatha Krishnan Terrance - Faculty of Management

1997 Mas.Pathmanathan Amalan - Faculty of Science
Mas.Selvanayakam Gowreesvaran- Faculty of Engineering
Mas.Sittampalam Satheeshkumar- Faculty of Engineering



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 Mas.Nadarajar Jude Roshanth- Faculty of Engineering
Mas.Selvanayakam Gowreesvaran- Faculty of Engineering
Mas.Mohamed Hasim Mohamed Uzaith - Faculty of Management
Mas.Vincet Rajathurai Francis Jeevarajan - Faculty of Commerce

1999 Mas.SanthaKumar Umarajan - Faculty of Engineering
Mas.Johnpillai Charls Godfried - Faculty of Engineering
Mas.Mohideen Muhaijeer - Faculty of Agriculture Sciences
Mas.Thiyakaraja Benziger - Faculty of Agriculture Sciences
Mas.Ananthavel Prashanthan- Faculty of Commerce
Mas.Velayutham Sritharan - Faculty of Management

2000 Mas.Benjamin Christopaul - Faculty of Science
Mas.Saminathan Tharanka Sanjeeva - Faculty of Engineering

2001 Mas.Thomaspillai Alan Niroshan - Faculty of Medicine
Mas.Yokanathan Thierumaran - Faculty of Engineering
Mas.Jerald Thilakshan Alexander - Faculty of Engineering
Mas. Alfrick Gorj Sagayaraja - Faculty of Science
Mas.Sithamparapillai Thayanesan - Faculty of Commerce
Mas.Jamoon Mohamed Natheer - Faculty of Commerce
Mas.Thanasalasingan Prabakaran - Faculty of Arts
Mas.Sivarasa Kobinath- Faculty of Management
Mas.Marimuthu Vigneshvaran - Faculty of Arts

2002 Mas.Pakiyaraja Kamalaraj - Faculty of Engineering
Mas.Jokaraja Prashanthan - Faculty of Medicine
Mas.Piyathasa Jude Niroshan - Faculty of Commerce
Mas.Mohamed Saheer Imran - Faculty of Engineering
Mas.Bejamin Jeeva Christon - Faculty of Management
Mas.Jamil Rizam - Faculty of Commerce

2003 Mas.Sivanantha Sopan- Faculty of Medicine
Mas.Janachanthiran Sutharshan - Faculty of Science
Mas.Neminathan Ratnarajan- Faculty of Agriculture Sciences
Mas.Peter Beni Xavier - Faculty of Agriculture Sciences
Mas.Ponnusami Jekan- Faculty of Agriculture Sciences
Mas.Abubucker Mohamed Nasli- Faculty of Agriculture Sciences
Mas.Selvaratnam Prathas- Faculty of Agriculture Sciences
Mas.Vrathan Vasanthakumar- Faculty of Science
Mas.Mohamed Nizar Mohamed Zafarullah - Faculty of Management Studies and Commerce
Mas. Mohamed Nizar Mohamed Ramzan - Faculty of Management Studies and Commerce



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mas. Mohamed Salyhu Mohamed Jesmin- Faculty of Management Studies and Commerce
Mas.Mahalingam Thatsayanan – Faculty of Management Studies and Commerce

2004 Mas. Sivapalasuntharam Raghuram - Faculty of Medicine
Mas.Sathasivam Crishanthan - Faculty of Medicine

2005 Mas.Anislebbei Muneer- Faculty of Agriculture Sciences
Mas. Devasigamani Dhishanthan - Faculty of Agriculture Sciences
Mas.Jesuthasan Jenittan - Faculty of Agriculture Sciences
Mas.Yoganathan Pooncalalon - Faculty of Engineering

2006 Mas.Mohamed Shrdeen Mhamed Faiz -Faculty of Medicine
Mas.Claud Andrew Arunan- Faculty of Medicine
Mas.Thangavadivel Thanujan- Faculty of Engineering
Mas.Abdul Farid Mohamed Nafeel - Faculty of Engineering
Mas.Liaqat Ali Mohamed Musthaq Ali - Faculty of Engineering
Mas.Santhyapillai Rajeevan Paul - Faculty of Science
Mas.Selvaraja Sanjith - Faculty of Science
Mas.Satkunaraja Sanjeevraj - Faculty of Science
Mas.Mohamed Ali Firnas Ali- Faculty of Science

2007 Mas.Sivaganasuntharam Thasan - Faculty of Management
Mas.Nakaraja Jokiraj - Faculty of Management Studies and Commerce
Mas.Prabakaran Sabeskumar - Faculty of Management Studies and Commerce
Mas.Thajudeen Mannan Mohamed Imran - Faculty of Engineering
Mas.Jeyaseelan Dinojan- Faculty of Engineering
Mas.Thevasikamani Arunshankar - Faculty of Engineering
Mas.Aaldeen Mahatheer Mohamed - Faculty of Engineering

2008 Mas.Poopalaratnam Branatheesh - Faculty of Science
Mas.Sivapalasuntharam Shageram- Faculty of Medicine
Mas.Nasarain Diroshan Hipolite Fernando- Faculty of Food And Nutrition
Mas.Jerom Satheesan- Faculty of Management Studies
Mas.Christy Antony Mosas Paul- Faculty of Management Studies
Mas.Vinayagamoorthy Gowrishankar- Faculty of Arts

2009 Mas.Antonyrajan Anniestan - Faculty of Medicine
Mas.Edwerd Anantharaja Kastro - Faculty of Science
Mas.Abdul Azis Mohamed Igram - Faculty of Medicine
Mas.Rasaiya Ajantharaj - Faculty of Management Studies and Commerce
Mas.Jesuratnam John Mari - Faculty of Management Studies
Mas.Nadaraja Thinesh - Faculty of Management Studies and Commerce



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mas.Kanthasami Pandiyarajan - Faculty of Arts
Mas.Sulthan Mohamed Naleem- Faculty of Arts

2010 Mas.Bernad Melizan Ragal Faculty of Management Studies and Commerce
Mas.Abdul Arthik Ashad - Faculty of Agriculture Sciences
Mas.Rasalingam Janapriyan- Faculty of Science
Mas.Mohamed Hanifa Mohamed Arzath- Faculty of Management Studies and Commerce
Mas.Mohamed Uwais Mohamed Thowmeer- Faculty of Management Studies and Commerce
Mas.Rasalingam Premkumar- Faculty of Management Studies and Commerce
Mas.Mohamed Hazzaly Mohamed Ajimusan - Faculty of Management Studies and Commerce

2011 Mas.Abdul Atheek Azard- Faculty of Medicine
Mas.Gunasegaram Nishanthan- Faculty of Management Studies and Commerce
Mas.Mohamed ishak Mohamed Fazith - Faculty of Agriculture Sciences

2012 Mas.Thankavadivel Tharshanth- Faculty of Engineering
Mas.Deogupillai Shalashian - Faculty of Management Studies
Mas.Sahayathasan Vimalraj - Faculty of Arts
Mas.Gunanayagam Mayuran - Faculty of Arts
Mas.Varnakulam Dilipan- Faculty of Arts
Mas.Rasanathan Nishanthan - Faculty of Arts

2013 Mas.Edvin Ravindraraj Edman godfrey - Faculty of Medicine
Mas.Suthakaran Shankarnath - Faculty of Engineering
Mas.Selvaraja Inthujan - Faculty of Engineering
Mas.Velu Prakash - Faculty of Science
Mas.Mohamed Razih Mohamed Hamdan - Faculty of Management Studies

2014 Mas.Sivanantha Gowthaman
Mas.Anas Mohamed Sihful Hudha - Faculty of Science
Mas.Abudul Bazir Mohamed Hamdan
Mas.Raj Haboor Rokshan- Faculty of Arts

2015 Mas.Lavakumar Rishikeshan - Faculty of Engineering
Mas.Thiyakeswaran Kobishankar - Faculty of Science and technology
Mas.Thajudeen Mannan Mohamed Dilshath - Faculty of Science
Mas.Thajudeen Mannan Mohamed Arsath - Faculty of Science
Mas.Kilenthiran Leosiraj - Faculty of Agriculture Sciences
Mas.Mohamed Bazeer Mohamed Afradi - Faculty of Management Studies and Commerce
Mas.Mas.Susikaran Selton - Faculty of Arts
Mas.Kalimuthu Dayananthan - Faculty of Arts


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருக்கோணமலைப் பதியிலே புனிதராம் சூசையப்பரின் நாமம் தாங்கிய தி/புனித சூசையப்பர் கல்லூரி தன் 150வது அகவையை மலரும் நினைவுகளோடு கோலாகலமாய்க் கொண்டாடி மகிழ்கின்றது.

1992 – 2017 வரையிலான வரலாற்றுத் தடங்களை இயன்றவரை சேகரித்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் நோக்கோடு சவால்களுக்கு மத்தியில் இச்சஞ்சிகை வெளிவர உதவிய சூசையப்பருக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நன்றி மறவற்க" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க,
எமது மலர் சிறப்புப்பெற ஆசிகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய பெருந்தகையாளர்களுக்கும்

ஆக்கங்கள், கட்டுரைகள், கவிதைகள், புகைப்படங்கள் போன்றவற்றை வழங்கிய சான்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஊற்றம் பெற உதவிய நன்கொடையாளர்கள், வீரகேசரிப் பத்திரிகை நிறுவனத்தினர்,
விளம்பரங்களை வெளியிட்ட அனைவருக்கும்,

ஆக்கங்களைக் கணனி மயப்படுத்த உதவியவர்களுக்கும்

குறுகிய காலத்தில் மலரைச் சிறப்புற உருவாக்கி, அச்சிட்டுத் தந்துதவிய **Ben Vision Printers** அச்சகத்திற்கும்

மலர்க்குழு சார்பாக நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்க்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Congratulations'
St.Joseph College -Trincomalee
150th Anniversary

*Celebrate the glorious legacy that continues to inspire us,*
*the excellence and quality of service.....*
*Your success leads to building community and honor,*
*privilege that it is to be a steward of art.*

**Great Wishes From**
**CEYLINCO LIFE**



CEYLINCO LIFE®
A Relationship For Life™


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Our theme is "What is right" and not "Who is right "**

**We do not depend on Individual Politics.**

**Let us all Join in Noble Politics To make...........A SUCCESS**




# Democracy Talks






**Ra ja le ya**

**RAYMOND CHRISTOPHER**
**TRINCO OLD JOESPHIAN**
**DUNF DEPUTY SECRETARY**

**DUNF Invites all Interested Brothers of Old Josephian's of Trincomalee**

**TO SUPPORT & JOIN US TODAY**

**Contact us on 0777588049 or 0768478184 – Website: www.dunf.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்தந்தை
ஏ.ஈ.குரொவ்தர் (S.J)
1932 – 1938



அருட்தந்தை
ஜூலியஸ் தெய்சன் (S.J)
1938 – 1947




அருட்தந்தை
குளோட் ஆர்.டேலி (S.J)
1947 – 1953



அருட்தந்தை
பீற்றர்.சி.பீச் (S.J)
1954 – 1955



அருட்தந்தை
ஜோன் ஜே.ஹேனி (S.J)
1955 – 1956



அருட்தந்தை
பெரடிரிக் பி.பொண்டர் (S.J)
1956 – 1965




அருட்தந்தை
வின்சன் டி போல் (S.J)
ஞானப்பிரகாசம்
1965 – 1968, 1970 – 1985




அருட்தந்தை
யூஜின் ஜே.ஹேர்பியர் (S.J)
1969 – 1970



திரு. அன்ரனி
சுவாமிநாதன்
1981 – 1985



திரு.ஏ.வனசிங்க
1985 – 1989



திரு.ஜே.எஸ். கைடி
பொன்கலன்
1989 – 1997



அருட்சகோதரர்
ஏ.சூசைதாசன் (S.J)
1997 – 2003



அருட்தந்தை
ஜவீனதாஸ் பெர்னான்டோ (OMI)
2003 – 2012



அருட்தந்தை
S.அன்ரனி பொன்சியன் (OMI)
2012 – 2014

Ben Vision Printers & Publication
No.355/A, Thiruganasampanthar Street, Trincomalee.
076 900 0036
077 571 8119
026 222 5984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org